Registered as a Newspaper

YOUR FRIENDS IN FINANCE
SHABRA
207, Power House Road, JAFFNA.

# சஞ்சீவி

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

விலை ரூபா 3-50

நிதித்துறையில் நாணயம் மிக்க நண்பன்
ஷப்ரு
207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

மலே: 3 யாழ்ப்பாணம் விபவ ஞூ ஐப்பசி மீ 13 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1409 ற. அவ்வல் பிறை 17 (29-10-1988) SANJEAVY REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்:34

# ஜே.ஆரின் நிபந்தனை; ஜே.வி.பி நிராகரிக்கும்?

## ஜனதிபதி பதவி இறங்கும் வரை ஆயுதத்தைப் போடமாட்டார்களாம்

கொழும்பு, அக்டோபர் 29

மகாசங்கத்தின் கோரிக்கைகள் தொடர்பாக ஜனதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தன விதித்திருக்கும் நிபந்தனையை ஜே. வி. பி. அமைப்பு நிராகரிக்கும் எனத் தெரியவருகிறது.

ஜனதிபதி ஜெயவர்த்தன ஆட்சி அதிகாரத்தை விட்டு இறங்கும் வரை ஆயுதவழியைக் கைவிடப் போவதில்லை என்று ஜே. வி. பி. அமைப்பு முடிவு செய்திருக்கிறது. எதிர்க்கட்சித் தலைவர்கள் சிலரை மேற்கோள் காட்டி வெளிநாட்டுச் செய்தி நிறுவனம் ஒன்று இத் தகவலைத் தெரிவித்தது.

நாடாளுமன்றத்தை உடனடியாகக் கலைத்து காபந்து அரசாங்கத்தின் கீழ் ஜனதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல்களை நடத்த வேண்டும் என மகாநாயக்க தேரர்கள் நால்வரும் ஜனதிபதி ஜெயவர்த்தனவிடம் கூட்டாக வேண்டுகோள் விடுத்திருந்தனர் என்பதும்—

இந்தக் கோரிக்கைகளைத் தாம் ஏற்பதாகவும், ஆனல் அப்படிச் செய்வதற்கு முன்னர் ஆயுத வழியை விட்டு ஜனநாயகவழி முறைக்கு வர ஜே வி. பி இணங்க வேண்டும் என்றும் ஜனதிபதி ஜெயவர்த்தன நிபந்தனை விதித்திருந்தார் என்பதும் தெரிந்ததே.

ஆனல் இந்த நிபந்தனையை ஜே. வி. பி அமைப்பு ஏற்காது எனத் தெரிய வருகிறது.

ஜனதிபதி ஜெயவர்த்தனவை ஆட்சி அதிகா

(4 ஆம் பக்கம் பார்க்க)

---

ஜனதிபதி எதிரணி சந்திப்பையடுத்து

## இராணுவ நடவடிக்கை நிறுத்தம் நாளைவரை நீடிப்பு

கொழும்பு அக் 29

நாட்டின் தென்பகுதியில் தனது இராணுவ நடவடிக்கை நிறுத்தத்தை இலங்கை அரசு நாளை ஞாயிறு காலை வரை நீடித்து இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனதிபதி ஜெயவர்த்தனவுக்கும் ஏழு எதிர்க்கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையே கடந்த வியாழக்கிழமை இரண்டாவது சந்திப்பு இடம்பெற்றது.

அதைத்தொடர்ந்தே இப்படித் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி தெரிவித்தார்.

இரண்டாவது சந்திப்பின் போது இடம்பெற்ற விஷயங்கள் பற்றி தகவல்கள் வெளியிட அமைச்சர் அத்துலத்

(4-ஆம் பக்கம் பார்க்க)

## பாவற்குளத்தில் 4முஸ்லிம்கள் சுட்டுக்கொலை

வவுனியா அக் 29

கடந்தபுதனன்றுமாலை வவுனியாவைச் சேர்ந்த பாவற்குளத்தில் இடம்பெற்ற ஒரு சம்பவத்தில் நான்கு முஸ்லிம்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

சூடுவெந்தபிலவைச் சேர்ந்தஇவர்கள் பாவற்குளம் பகுதிக்கு வேலையாகச் சென்றபோது சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தெரியவருகிறது.

கடந்த 10 ஆம் திகதி இடம்பெற்ற மகாகோங்கஸ்கட கொலைகளை அடுத்து பாவற்குளம் பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா இராணுவத்தினர் இப்பகுதி மக்களை அச்சுறுத்தி வருவது தெரிந்ததே.

(ஒ-164)

முகாம்களுக்குச் சமீபமாகவுள்ள

## [வீ]டுகளை வெளியேறுமாறு படையினர் உத்தரவு

வவுனியா, அக் 29

வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகக் கட்டடத்தில் இடம்பெற்றகுண்டுவெடிப்பை அடுத்து இந்தியப் படையினரின் முகாம்களுக்குச் சமீபமாகவுள்ள வீடுகளில் குடியிருப்பவர்களை வெளியேறுமாறு படையினர் உத்தரவிட்டனர்.

இதேபோல பாதுகாப்புகாரணங்களுக்காக பஸ்நிலைய கட்டடத்தின் மேல் தளத்தில் அமைந்துள்ள இந்தியப்படையினரின் நகரகொமாண்டன்ட் அலுவலகத்துக்கு கீழ் தளத்தில் அமைந்துள்ள பதினைந்துக்கும் மேற்பட்ட கடைகளை மூடிவிட்டு வெளியேறுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

(ஒ-164

தேடுதல் தொடர்வதால்

## நெடுந்தீவில் படகுச் சேவை ஸ்தம்பிதம்

நெடுந்தீவு, அக் 29

நெடுந்தீவுக்கு வந்த இந்திய அமைதிப்படையினர் அங்கு முழுமையான முற்றுகையை மேற்கொண்டு தேடுதல் நடத்தி வருகின்றனர்.

தேடுதல் நடவடிக்கைகளுக்கு வசதியாக அங்கு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது

இரு தினங்களாக படகுச் சேவையும் ஸ்தம்பித்தது.

படகுச் சேவை இன்மையால் குறிகாட்டுவான் துறைமுகத்தில் நெடுந்தீவுக்குச் செல்வதெற்கென வந்தவர்கள் தங்கியுள்ளனர்.

நெடுந்தீவு பல. நோ. கூ. சங்கமும் அத்தியாவசிய உணவுப் பொருள்களை நெடுந்தீவுக்குக் கொண்டு செல்ல முடியாத நிலையில் உள்ளது.

## பாதுகைகை பொலீஸ் மீது பெரும் தாக்குதல் 4 படையினர் பலி!

பாதுக்கை பொலீஸ் நிலையம் மீது தென்பகுதி தீவிரவாதிகள் நேற்று பெரும் தாக்குதல் ஒன்றை நடத்தினர்.

இத்தாக்குதலில் மூன்று பொலீஸாரும் ஊர்காவல் படையினர் ஒருவரும் உயிரிழந்தனர். மேலும் ஐந்து பேர் படுகாயமடைந்தனர்.

கொழும்பிலிருந்து 28 கிலோ மீற்றர் தூரத்தில் பாதுக்கை அமைந்துள்ளது. (உ)

## புடைவை ஆலை மூடப்பட்டது

கொழும்பு, அக்.29

அமைச்சர் விஜயபால மென்டிஸ் துல்ஹிரிய புடைவை ஆலையை தற்காலிகமாக மூடும் படி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

தொழிலாளர்கள் நேற்று முன்தினம் ஆலை வளவினுள் சீனவெடிகளைக் கொளுத்தி, அரசு எதிர்ப்புச் சுலோகங்களை எழுப்பி ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

அபாயகரமான நிலைமை ஏற்படுவதைத் தவிர்க்கவே ஆலையை மூடும்படியாயிற்று என்று அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. (ஓ-எ)

பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் கோரி

## 15,000 விண்ணப்பங்கள் தேங்கிக் கிடக்கின்றன

யாழ்ப்பாணம், அக் 29

பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்திற்கு விண்ணப்பித்த 15 ஆயிரம் பேரினுடைய விண்ணப்பப் படிவங்கள் யாழ் செயலகத்தில் தேங்கிக் கிடக்கின்றன.

செயலக வட்டாரங்கள் இந்தத் தகவலைத் தெரிவித்தன.

உரிய படிவங்கள் இல்லாமையும் ஊழியர்கள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

யாழ் மாவட்டத்திற்கு

## ஜனவரிக்கு முன் மேலும் 100தொலைபேசிஇணைப்புகள்

யாழ்ப்பாணம் அக் 29

அடுத்த ஆண்டு ஜனவரி மாதத்துக்குள் யாழ் மாவட்டத்துக்கு மேலும் 100 தொலைபேசி இணைப்புகள் கிடைக்கும

இணைப்பை ஏற்படுத்திக்கொடுக்கும் நடவடிக்கைகளை கொலைத் தொடர்புத் திணைக்களம் மேற்கொண்டு வருகிறது.

இவற்றில் 30 இணைப்புகள் யாழ் மாவட்டத்தில் உள்ள தபால் நிலையங்களுக்கு வழங்கப்படும்.

யாழ்ப்பாணத்தில் இருந்து அநுராதபுரம் தொலைபேசி பரிவர்த்

(4ஆம் பக்கம் பார்க்க)

## பரீட்சை முடிவு தாமதமாகும்

யாழ்ப்பாணம் அக் 29

ஜீ. சி. ஈ. சாதாரணதர விசேட பரீட்சைகளின் பெறுபேறுகள் அடுத்த மாத நடுப்பகுதியிலேயே வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பெறுபேறுகள் இம் மாதம் 25 ஆம் திகதி வெளியாகும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது

இது குறித்து யாழ் கல்வித் திணைக்கள அதிகாரிகள் கொழும்புடன் தொடர்பு கொண்ட போதே முடிவுகள் அடுத்த மாதம் வெளியாகும் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-9)

## சுன்னகத்தில் இளைஞர் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம் அக் 29

சுன்னகத்தில் வைத்து இளைஞர் ஒருவர் நேற்று சுட்டுக்கொல்லப்பட்டார்.

கொல்லப்பட்டவர் காங்கேசன் துறையில் கூல் பார் ஒன்றின் உரிமையாளரான பிறேமன் எனத்தெரிவிக்கப்படு

(4 ஆம் பக்கம் பார்க்க]

## லோறி தீக்கிரை

மாங்குளம், அக்29

மாங்குளம் புதிய கொலனி வீதியில் லொறி ஒன்று இனந்தெரியாதோரால்கடந்த வியாழனன்று தீக்கிரையாக்கப்பட்டது. (உ-94)

## வல்வையில் புதிய முகாம்

வடமராட்சி அக் 29

வல்வெட்டித்துறை ஆலடியில்இந்தியப்படையினர் நேற்றுக் காலை புதிய முகாம் ஒன்றை அமைத்தனர்.

ஸ்ரீலங்கா இராணுவ முகாமுக்கு முன்பாக சொற்ப தூரத்திலுள்ள வீடுகளிலேயே அவர்கள் முகாமிட்டுள்ளார்கள்.

இதேசமயம் கொடிகாமம் வீதி கலிமைச் சந்தியிலும் அமைதிப்படை புதிதாக முகாமிட்டிருக்கிறது. (உ-ஓ-160)

## யுவதி சுட்டுக்கொலை

வடமராட்சி, அக் 29

கரவெட்டி தெற்கைச் சேர்ந்த எஸ். பத்மாவதி (வயது 18) என்னும் யுவதி நேற்றுக் காலை 8 30 மணியளவில் மூத்த விநாயகர் கோவிலடிக்குச் சமீபமாக இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

(ஓ-160-70)

## றெனிக்கு பதவிப்பிரமாணம் செய்ய சபாநாயகர் மறுப்பு

கொழும்பு அக் 29

புளத் சிங்கள எம். பியாக திரு. றெனி டி மெல்லுக்கு பதவிப் பிரமாணஞ் செய்து வைக்கமுடியாது என்று சபாநாயகர் ஈ. எல் சேனநாயக்கா நாடாளுமன்றத்துக்கு அறிவித்து விட்டார்.

கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றம் கூடியபோது சபாநாயகர் இதனைத் தெரிவித்தார்.

அரசமைப்புச் சட்டத்தின் 161(3) ஷரத்துக்கு இணங்க தேர்தல் ஆணையாளர் புளத் சிங்கள எம். பியை நியமனஞ் செய்யவில்லை என்று சட்டமா அதிபர் சபாநாயகருக்கு அறிவித்ததைத் தொடர்ந்து இம் முடிவு எடுக்கப்பட்டது என்றும் சபாநாயகர் தெரிவித்தார். (எ)

## தென்பகுதியில் நேற்றும் 10பேர் சுட்டுக்கொலை

கொழும்பு, அக் 29

தென்னிலங்கையில் மஜ வி. பி தீவிரவாதிகளின் வன்செயல் நடவடிக்கைகள் நேற்றும் தொடர்ந்து இடம் பெற்றன

நேற்று பத்துக்கும் அதிகமானேர் ஜே. வி பி தீவிரவாதிகளினல் சுட்டுக் கொல்லப்பட்டதாக கொழும்புக்குக்கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

இதே சமயம் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்ட நடவடிக்கைகள் நேற்றும் தெற்கில் இடம்பெற்றதாகத் தெரிய வந்தது.

மாத்தறைப் பகுதியில் கம்யூனிஸ்ட் கட்சியின் உள்ளூர் அமைப்பாளர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

தெமட்டகொடையிலும், வேறு சில இடங்களிலுமாகச் சேர்ந்து மொத்தம் பத்துக்கும் அதிகமானேர் சுட்டுக் கொல்லப்பட்டதாக ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

அரச ஆதரவாளர்களும், ஜே. வி பி இயக்கத்திற்கு எதிரானவர்களுமே சுட்டுக் கொல்லப்படுவதாக அச் செய்திகள் மேலும் தெரிவித்தன. (உ)

## தமிழ் அமைப்புகளிடம் எதிரணி ஆலோசனை

எட்டுக் கட்சிக் கூட்டணி தமிழ் பேசும் மக்கள் பிரச்சினைக்குத் தீர்வாக முன் வைத்துள்ள ஆலோசனைகளின் நகல் அறிக்கைகள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம், புளொட். ஈரோஸ் ஆகிய இயக்கங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் பொதுச் செயலாளர் குமார் பொன்னம்பலம் இத்தகவலை வெளியிட்டதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது (உ-எ)

## எதிரணித் தலைவர்களின் தொலைபேசி உரையாடல் ஒற்றுக்கேட்கப்படுகின்றதா?

கொழும்பு, அக் 29

கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவர்களின் தொலைபேசி உரையாடல்கள் ஒற்றுக் கேட்கப்படுவதாக புகார் செய்யப் பட்டிருக்கிறது

தனது தொலைபேசியில் குறுக்கீடுகள் செய்யப்படுவதாகவும் இதனுல்தான் தற்போது அரசியல் விவகாரங்களைத் தொலைபேசியில் பேசுவது இல்லை என்றும் திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்கா கூறினர்.

மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் திரு தினேஷ் குணவர்த்தன தனது தொலைபேசியும் நீண்ட நாட்களாக ஒற்றுக் கேட்கப்பட்டு வருவதாகச் சொன்னர்

தமிழ்க் காங்கிரஸ் பொதுச் செயலாளர் குமார் பொன்னம்பலத்தின் இரண்டு தொலைபேசிகளில் ஒன்று துண்

(4-ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். அபிவிருத்திச்சபைக்கு ரூ.53லட்சம்மட்டுமேஒதுக்கீடு

### 1கோடி97லட்சம் மாகாணசபைக்கு

யாழ்ப்பாணம் அக் 29

யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபைக்கு இந்த வருட நிதி ஒதுக்கீட்டில் 53 லட்சம் ரூபா மட்டுமே கிடைக்கும்.

இந்த வருட நிதி ஒதுக்கீட்டில் மிகுதித் தொகையான ஒரு கோடியே 97 லட்சம் வடக்கு மாகாணசபைக்கு மற்றப்படும்.

உள்ளூராட்சி அமைச்சினல் வெளியிடப்பட்டுள்ள சுற்று நிருபத்தில் இந்த விவரம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

தேர்தல் தொகுதி ஒவ்வொருன்றிற்கும் தலா 25 லட்சம் ரூபா வீதம் யாழ். மாவட்டத்தில் உள்ள 10 தேர்தல் தொகுதிகளுக்குமாக

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஒப்பந்தம் ஒரு திருப்புமுனை அதனல் போராட்ட வடிவம் மாறியது

### வவுனியாவில் பத்மநாபா பேட்டி

வவுனியா, அக் 29

''இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் மூலம் தமிழர்களின் போராட்டப் பாதையில் ஏற்பட்டுள்ள ஒரு திருப்பு முனையினல் எமது போராட்டத்தின் வடிவம் மாறியுள்ளது!

ஜனநாயக முறையில் தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமைக்காகப் போராடி வருகிறோம்''

—இவ்வாறு வியாழனன்று வவுனியாவுக்கு விஜயம் செய்தஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலதிபர் திரு பத்மநாபா மதுவவுனியா முகாம் அலுவலகத்தில்பத்திரிகையாளர்களைச் சந்தித்துப் பேசிய போது தெரிவித்தார்.

ஈ. பி. ஆர் எல். எப்பின் வவுனியா பொறுப்பாளர் திரு.வெற்றிவேல், மத்திய குழு உறுப்பினர் திரு சாந்தன் ஆகியோரும் இச்சந்திப்பின்போது உடன் இருந்தார்கள்.

திரு. பத்மநாபா மேலும் தெரிவித்ததாவது:-

முஸ்லிம் தமிழ் மக்களிடையே ஐக்கியத்தையும்ஒற்றுமையையும் ஏற்படுத்துவதுடன சிதைந்துள்ள வடகிழக்கு பிரதேசத்தை சமூக, பொருளாதார, அரசியல் ரீதியாகப் புனரமைக்க வேண்டும் என்பதேஎமது பிரதான செயற்திட்ட

(4 ஆம் பக்கம் பாரக்க)

### சுபநேரம்

29-10-1988
ஐப்பசி 13
சனிக்கிழமை

சுபநேரம்:-
3 03 முதல் 4 33 வரை

ராகுகாலம்:-
9-03முதல் 10-33வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

பத்மையும் எழிலும் வாய்ந்த பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள Honda Chaly 50 cc Motorcycles பல நிறங்களில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- சதாஸ், மோட்டோர்ஸ் ஹாட் வெயர்ஸ் (இலங்கை வங்கி அருகாமை) 56 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் (7632)

Lambretta (லம்பறற்ரு) ஸ்கூட்டர் சிறந்த உதிரிப்பாகங்கள் விற்பனைக்கு உண்டு (புதிய கொன்டஞ்சர் சில்லுகள் மற்றும் பெறுமதிப் பொருட்கள்) உடன் தொடர்பு கொள்ளவும். இல. 50, அரசடி வீதி யாழ்ப்பாணம்' (தட்டாதெரு சந்திக்கு அருகாமையில்.) (7625)

குளிர்சாதனப் பெட்டி, ஹோல் செற். Casio Musical Instrument, Pan, காரியாலய மேசை, Cooler, Floor Polisher, கசற்றேடியோ, விருந்தை செற்றி, T. V. Stand மற்றும் பலவித பாவித்த பொருட்களும் உடன் விற்பனைக்குண்டு. No. 191, பருத்தித்துறை வீதி, நல்லூர் கோயில் முன்பாக. (7479)

வீடியோ கமராக்கள், புரடக்ஷன் மிக்சர்கள் விற்பனை. JVC (GXN-70E) National F10 (Genlock) Sony 3000 Sun Suie special effects Production mixer National MX 10 - Mixer தொடர்பு கொள்க:- சன் வீடியோ கொம்பிளெக்ஸ், பாடசாலை வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில். (7608)

## வீடு விற்பனைக்கு

வல்வெட்டித்துறை 247, கே. கே. எஸ். வீதி ஆலடியில் அமைந்துள்ள "சரோஜினி பவனம்" என்னும் 3 1/4 பரப்பு வீடு உடனடி விற்பனைக்குண்டு. மூன்று படுக்கை அறைகள், குசினி, களஞ்சிய அறை, மிகவும் நன்னீர் வசதியும், மற்றும் சகல வசதிகளையும் கொண்டது. தொடர்பு: க. குமரகுரு, 183. [illegible] வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் (7471)

## மலிவு விற்பனை

முற்றிலும் புதிய டிசைன்களில் உருவான தீபாவளி வாழ்த்து மடல்கள் குறைந்த விலையில் விற்பனைக்கு உண்டு. வியாபாரிகளுக்கு விசேட கழிவு. பார்வையிடவும் கொள்வனவு செய்யவும் மக்மிலன் புத்தகசாலை, ஆஸ்பத்திரி வீதி, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (7601)

## தீபாவளி பிறந்தநாள் வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள். (Printing Cards), திருமண வாழ்த்துகள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், தீபாவளி, நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விசேடகழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அரஸ் ஜவுளியகம் 146, நவீன சந்தை யாழ்ப்பாணம். (C 357)

## மோட்டார் உதிரிப் பாகங்கள் விற்பனை

A/40, A/50, M/miner ஆகிய வாகனங்களின் Original உதிரிப்பாகங்கள் மொத்தமாக விற்பனைக்குண்டு சனி, ஞாயிறு பார்வையிடலாம் தொடர்பு- திருமதி சிங்கநாயகம். C/o லோறன்ஸ், உடுவில் ரோட், மானிப்பாய். (7629)

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

Broiler இறைச்சிக் கோழிகள் பேட்டுக் கோழிகள், சேவற் கோழிகள் குஞ்சுகள், சூப் குஞ்சுகள், விருத்துக் குஞ்சுகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம் சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு:- Nallur Farm Centre, C/o Nallur வீடியோ சென்ரர் 19, முருகேசர் லேன், நல்லூர். (6882)

## கோழிக்குஞ்சு விநியோகம்

Prima Lohmann வெள்ளை சிவப்பு பேட்டுக் குஞ்சுகள், சிவப்பு சேவல் குஞ்சுகள், Golden Comet சிவப்பு பேட்டுக் குஞ்சுகள், சேவற் குஞ்சுகள், Hyline கறுப்பு, வெள்ளை பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு புதன்கிழமையிலும் விநியோகிக்கப்படும். உடன் முன்கூட்டியே பதிவு செய்யவும். தொடர்பு:- நல்லூர் பாம்சென்ரர். C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர். (6881)

Christumpu Farm ஒருநாள் Golden Comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் எமது ஸ்தாபனத்தில் 10-11-88 அன்று விற்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்ய விரும்புபவர்கள் சுஜேராஸ். 21, வேம்படி வீதியில் உள்ள எமது காரியாலயத்தில் பதிவு செய்யலாம். முற்பணம் எதுவும் அறவிடப்படமாட்டாது. தொகையாக வாங்குபவர்களுக்கு விசேஷ சலுகை வழங்கப்படும். C/ 672)

## தவறிவிட்டது

பனைக்கும் இயக்கச்சிக் குமிடையில் தனியார் மினி பஸ்ஸிலிருந்து தொப்பி ரெடிமட் ஆடைகள் அடங்கிய பிறவுண் ரவலிங் பை ஒன்று தவறிவிட்டது. இதைக் கண்டெடுத்தவர்கள் பனை M P C. S புடவைப் பகுதி முகாமையாளரிடம் அல்லது உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (7633)

மயில்வாகனம் அழகரத்தினம் இல. 410352060 V அழகரத்தினம் அன்னபூரணம இல 437971706 V ஆகியோரின் அடையாள அட்டைகள் பேர்சுடன் யாழ்ப்பாணத்தில் தவறிவிட்டன கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில ஒப்படைக்கவும். (7631)

ஆனந்தினி சேதுராலிங்கம் செட்டியார இல 62:7510390V விஜேதினி சேதுராமலிங்கம் இல: 647081215V ஆகிய இருவரினதும் அடையாள அட்டைகள் ஒரே பேர்சில் யாழ்ப்பாணம் Townஇல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் or வெலிங்டன் தியட்டருக்கும் பெருமாள் கோவிலுக்கும் இடையிலுள்ள பேள் வெட்டல் இன்டஸ்ரீயிலோ ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும். (7492)

நாகமணி காந்தி ஆகிய எனது Draft ஒன்று குப்பிழானுக்கும், சுன்னாகத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஒப்படைக்கவும் தொடர்பு:- வெ. செல்வம், ஏழாலை கிழக்கு, அல்லது மானிப்பாய் வங்கியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (7621)

## அவசர தேவை

ஆங்கில அறிவுடைய 20-40 வயதுக்குட்பட்ட பெண்கள் கனடாவில் வீட்டு உதவியாளராக பணியாற்ற விரும்புவோர் உடனடியாகத் தேவை. விபரம் நேரில் தொடர்பு:- Mrs. P. Danial, Miller House, Mallakam Junction, K.K S. Rd Mallakam (7626)

## பணமக்கள் தேவையா

எம்மிடம் எல்லாச் சாதி, சமயத்திலும் உத்தியோக முறைகளிலும் ஆண், பெண் யாவரும் இருக்கிறார்கள் ஞாயிற்றுக்கிழமையில் நேரே வரலாம் தொடர்பு:- மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். (6654)

## மணமகன் தேவை

கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த யாழ். இந்து உயர் வேளாள குல படித்த அழகிய 26 வயதுடைய செவ்வாய்க் குற்றமுள்ள பெண்ணுக்கு மணமகன் தேவை. சீதனம் (வீடு நீங்கலாக) வழங்கப்படுமெனினும் சீதனத்திற்கு முதலிடம் கொடுக்காதவர்கள் மாத்திரம் சாதகம் உட்பட ஏனைய விபரங்களுடனும் விண்ணப்பிக்கவும் 388, C/o உதயன், யாழ்ப்பாணம். (7610)

யாழ். இந்து உயர்குல வேளாள பெற்றோர் 36 வயதான பயிற்றப்பட்ட கணித ஆசிரியை மகளுக்கு தகுந்த மணமகனைத் தேடுகிறார்கள். வீடு உட்பட தகுந்த சீதனம் கொடுக்கப்படும். குறிப்புடன் முழுவிபரங்களையும் அனுப்பவும் 389, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (7611)

## பாலர் ஆசிரியர் தேவை

மானிப்பாய் மேற்கில் அமைந்துள்ள திருவள்ளுவர் பாலர் பாடசாலைக்கு ஆசிரியர் தேவை. விண்ணப்பங்களை 5-11-88 ற்கு முன்னதாக அனுப்பி வைக்கவும். தொடர்பு:- தலைவர், திருவள்ளுவர் சனசமூக நிலையம். மானிப்பாய் மேற்கு, மானிப்பாய். (7630)

## English Teachers Exam Classes

சுன்னாகத்திலும் தெல்லிப்பளையிலும் 5-11 88 ஆரம்பிக்கப்படும். கொழும்பிலும் பிரபல கல்லூரிகளிலும் ஆங்கிலம் 30 ஆண்டுகளாக கற்பித்தவர். 30மணி பாடநேரத்தில் பாடத்திட்டம் முடிவடையும் பலன் அடைவது நிச்சயம். தொடர்பு: கணேசன் இளைப்பாறிய ஆசிரியர்), விங்க் (Vink) ஒழுங்கை, அளவெட்டி வடக்கு 7623)

## SPOKEN ENGLISH

புதிய பிரவு தூர இடங்களில் இருந்து வருபவர்களுக்காக ஆரம்பம்: 03-11 88 நேரம் பகல் 10 30, 12-30 செவ்வாய், வியாழன் நாட்களில் மட்டும் S B. Iyar 12 வைமன் வீதி நல்லூர். (7439)

## O/L ENGLISH

பழைய பாடத்திட்டத்திற்கமைய ஒருமாதகால (Paper Class) பயிற்சி வகுப்பு ஆரம்பம்: 03-11-88 தொடர்பு S B. Iyar 12, வைமன் வீதி, நல்லூர். (7438)

## ஆங்கில/ சிங்கள வகுப்புக்கள்

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் மேற்படி வகுப்புக்களை எமது நிலையத்திலும், வீடுகளிலும் (House Visit) நடத்தப்படுகின்றன. இருபாலாரும் நேரில் அல்லது தபால் மூலம் விண்ணப்பிக்கவும். I E T. 11B Stanley Road. Jaffna (விவேகானந்தா அச்சகத்திற்கு எதிர் மேல் மாடி) (7620)

## ஆங்கில வகுப்புகள்

O/L 88 ஆங்கிலம் வினாவிடை வகுப்புக்கள் A/L ஆங்கிலம் Spoken English Grade 5-12 ஆங்கில வகுப்புகள் தினசரி காலை, மாலை கனகசபை 8, ஆறும் ஒழுங்கை, பலாலி வீதி கந்தர்மடம், யாழ்ப்பாணம் (7612)

## ஜோதிடம்

[05-11 88] சனி மாற்றம் 3/50 எங்கும் கிடைக்கும். [எல்லா இராசிகளின் பலன்கள்] தமிழர்களின் மேடராசிக்கு மறுமலர்ச்சியையும், தென்னிலங்கை -கும்பராசிக்கு சனி, ராகு, கேது பார்வையால் இரத்தக் களரியையும் ஏற்படுத்தும். நூலாசிரியர் - சத்திய தாசன் ஆத்மசோதி, காங்கேசன்துறை. (7615)

## ரேணியோ

தரமான ரேணியோ பிரதிகளை (தமிழ்/ ஆங்கிலம்) சிறந்த முறையில் குறித்த தவணையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம் "ஷப்ரு" சேவை பிரிவு, இல: 19, 2ஆம் ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் (C/692

## வாடகைக்கு

யாழ்ப்பாணம் சுண்டிக்குளியில் தளபாடங்களுடன் சில்லறைக் கடை குத்தகைக்குண்டு. சின்னக்கடையில் சகல வசதியைக் கொண்ட பெரியகடை விற்பனைக்குண்டு. தொடர்பு: ச. துரைரத்தினம், 50, பாரதிவீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம், (7628)

## சேவை

தமிழ், ஆங்கில தட்டச்சு வேலைகளை சிறந்த முறையில் குறித்த தவணையில் பெற்றுக்கொள்ளவும். எலெக்ரோனிக் ரைப்பிங் மூலம் வெளிநாட்டு கடிதங்கள் Bio-Data போன்ற முக்கிய பிரதிகள் கண்ணைக் கவரக்கூடிய ஆங்கில எழுத்துக்கள் மூலம் செய்து கொடுக்கப்படும் 'ஷப்ரு' சேவை பிரிவு இல. 19, 2ஆம் ஒழுங்கை, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம். (C/691)

## சுன்னாகத்தில் மரணச்சடங்கு

யாழ்ப்பாணம், ஆக்.29 கடந்த செவ்வாய்க்கிழமை அகால மரணமடைந்த சுன்னாகம் வர்த்தக சங்கத்தலைவர் திரு சி. சிவராஜபிள்ளையின் மரணச்சடங்குகள் வியாழனன்று சுன்னாகத்தில் நடைபெற்றன.

## எமது நேற்றைய புதிய வெளியீடு

1. ராமராஜன் — கௌதமி செந்தாமரை — ஸ்ரீப்பிரியா
"நம்ம ஊரு நாயகன்" (Original)
(மினிசினிமாக்கள் மட்டும் முதலில் தொடர்பு கொள்ளவும்)

2. ஜனகராஜ் - S. S. சந்திரன் - செந்தில்
"பாய்மரக் கப்பல்"
(ஒறிஜினல் பிரதி)

3. Police Assacination - 2
Chuck Norris in

4. Hero And The Lover

குணம் வீடியோ சென்ரர்
42, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(C/428)

கொக்குவில்
வளர்மதி முன்னேற்றக் கழகமும்
சனசமூக நிலையமும்
நடாத்திய

## பொது அறிவுப் போட்டிப் பரீட்சை முடிவுகள்

**மேல்ப்பிரிவு**

முதலாம் இடம்:-
வைத்தியநாதர் சிவநேசன், சேச் லேன், தாவடி, கொக்குவில்.

இரண்டாம் இடம்:-
வேலுப்பிள்ளை ரவீந்திரன், பணிக்கர் ஒழுங்கை. திருநெல்வேலி வடக்கு, திருநெல்வேலி.

**கீழ்ப்பிரிவு**

முதலாம் இடம்:-
லிங்கநாதன் அரவிந்தன், சேர்ச் லேன், கொக்குவில் கிழக்கு

இரண்டாம் இடம்:- (இருவருக்கு)
இலகுநாதன் தமிழ்ச்செல்வன், ஆஸ்பத்திரியடி, இணுவில்.
தாமோதரம்பிள்ளை ஸ்ரீராமநாதன், பிரம்படி லேன், கொக்குவில்.

மூன்றும் இடம்:-
மா. நிமலதீபன், 870, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

**14 வயதுக்குட்பட்டோர்**

முதலாம் இடம்:-
வைத்திலிங்கம் ராகவன் சம்பியன் லேன், கொக்குவில் கிழக்கு.

இரண்டாம் இடம்:- (இருவருக்கு)
குணரட்ணம் பார்த்தீபன், குளங்கரைலேன், கொக்குவில் கிழக்கு.
மதியாபரணம் சுந்தரேசன், அருளீச்சரம், பிள்ளையார் வீதி, திருநெல்வேலி.

மூன்றும் இடம்:-
குணரட்ணம் பிரதீபன், குளங்கரை லேன், கொக்குவில் கிழக்கு.
(C/683)

# உடலுக்கு அத்தியாவசியமான நீர்த்தன்மை குறைய நேர்ந்தால்...



வயிற்றோட்டம் ஏற்படும்போது எமது உடலில் இருந்து நீரும் உப்புக்களும் வெளியேறுகின்றன. இவ்விதம் இழக்கப்படும் நீரும் உப்புக்களும் தாமதமின்றி எமது உடலுக்கு மீண்டும் வழங்கப்பட வேண்டும். இல்லாவிடின் ஏற்படும் விளைவுகளால் மரணம்கூடச் சம்பவிக்க இடமுண்டு.

உங்கள் குழந்தைக்கு வயிற்றோட்டம் ஏற்பட நேர்ந்தால் பின்வரும் இலகுவான அறிவுறுத்தல்களைக் கடைப்பிடியுங்கள். இவை அவனை உயிராபத்தில் இருந்து காப்பாற்றும்:

1. வயிற்றோட்டம் ஏற்பட்டதும் பொரி அரிசிக் கஞ்சி, அரிசிக் கஞ்சி, உப்புக் கலந்த எலுமிச்சம் பழச் சாறு, செவ்விளநீர், சாயம் குறைந்த தேநீர் போன்ற நீராகாரங்களைப் போதிய அளவு குடிக்கக் கொடுங்கள். தாய்ப்பால் குடிக்கும் குழந்தையானால் தொடர்ந்து பால் ஊட்டுதல் முக்கியம். புட்டிப் பால் கொடுப்பதானால் வழக்கத்தைவிட இருமடங்கு நீரில் பால் மாவைக் கரைத்து ஊட்டுங்கள்.

2. இவ்விதம் செய்தும் வயிற்றோட்டம் நீடித்தால் குழந்தைக்கு உடல் உலர்ச்சி ஏற்படக்கூடும்; உடல் உலர்ச்சியின் முதலாவது அறிகுறி கடும் தாகமாகும்.

3. இந்த நிலையில் உடனடியாக குழந்தைக்கு ஜீவனி பானம் தயாரித்துக் கொடுங்கள். குழந்தையின் உடல் இழந்துவிட்ட நீரையும் உப்புக்களையும் ஜீவனி மீள அளிக்கும்.

ஜீவனியை உங்கள் கூட்டுறவுக் கடையில் அல்லது அண்மையிலுள்ள மருந்துக் கடையில் வாங்கலாம்

ஒரு பக்கெட்டின் விலை: ரூ. 5/- மட்டுமே.

**வளரும் பயிரான உங்கள் குழந்தையின் உயிரைக் காப்பாற்றுங்கள்.**

JWT UF 2652

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்.

## உங்கள் பயண அமைப்பாளர்




★ கனடா ★ ஜெர்மனி ★ பிரான்ஸ்
★ சுவிஸ் ★ இத்தாலி

மேற்படி நாடுகளுக்குப் பத்திரமாகவும், பாதுகாப்பாகவும் பயணம் மேற்கொள்வதற்கு வேண்டிய சகல ஒழுங்குகளையும் துரிதமாகச் செய்து தருகின்றோம். இறைவன் அருளைத் துணையாகக் கொண்டு எமது குழுக்கள் கனடாவுக்குத் தமது பயணத்தை வெற்றிகரமாக மேற்கொண்டன என்னும் நற்செய்தியை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம். எமது குழுக்கள் பிரதி வாரமும்

**கனடா, ஜெர்மனி. பிரான்ஸ**

எவ்வித இடையூறுமின்றிப் பயணம் மேற்கொண்டு வருகின்றன. மேற்படி நாடுகளுக்கு நீங்கள் பயணம் செய்ய இதுவே கடைசிச் சந்தர்ப்பமாகவும் இருக்கலாம்.

எனவே விபரங்களுக்கு உடனடியாகத் தொடர்பு கொள்ளுங்கள்.
அன்புடன் அழைக்கின்றேன்

● முக்கிய குறிப்பு:
கனடாவுக்குப் பெண்கள் குடும்பமாகச் செல்ல இது ஓர் அரிய சந்தர்ப்பம்.

உங்கள் பயண அமைப்பாளர்:
# S.P. ANTON
No. 648 1/3, ஆஸ்பத்திரி வீதி.
(சாப்புறூஜ் கட்டுத்தாபனத்திற்கு முன்பாக)
யாழ்ப்பாணம்.

(C 651)

### ஆசிரியர் விடுவிப்பு

பண்டத்தரிப்பு அக் 29 இம்மாத ஆரம்பத்தில் கைது செய்யப்பட்ட இளவாலை புனித ஹென்றி அரசர் கல்லூரி ஆசிரியர் திரு நடராசா விடுவிக்கப்பட்டு உள்ளார். (ஓ-120)

### சுகாதாரத் திணைக்களத்திற்கு புதிய வாகனங்கள்

யாழ்ப்பாணம் அக் 29 யாழ் சுகாதாரத் திணைக்களத்திற்கு அடுத்த வாரத்தில் மேலும் மூன்றுபுதியவாகனங்களை வழங்கச் சுகாதார அமைச்சு முன்வந்துள்ளது.

இந்த வாகனங்கள் யாழ் சுகாதார சேவை அத்தியட்சகருக்கும், தாய் சேய் நல வைத்திய அதிகாரிக்கும், மற்றும் ஓர் அதிகாரிக்கும் வழங்கப்படும். (உ-10)

### போலீஸார் கலைத்தனர்

கொழும்பு அக்29 தென் இலங்கையில் இடம் பெற்ற இரண்டு அரசு எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை துப்பாக்கிப் பிரயோகம் செய்து பொலீஸார் கலைத்தனர்.

எப்பவெல என்னும் இடத்தில் சுமார் 5 ஆயிரம் பேர் அரசு எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

ஹோமகமாவில்சுமார் ஆயிரம் பேர் ஆர்ப்பாட்டஞ் செய்தனர். (ஓ-எ)

### நேர்முகப் பரீட்சை ஆரம்பம்

யாழ்ப்பாணம் அக் 29 குடும்பநல சேவையாளர்களுக்கான நேர்முகப்பரீட்சைகள் வியாழனன்று யாழ் சுகாதாரத்திணைக்களத்தில்ஆரம்பமாகின.

மேற்படி பரீட்சைவெள்ளிக்கிழமையும் இன்றும் தொடர்ந்து சுகாதாரத் திணைக்களத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (உ 10)

## பிரயாண ஒழுங்குகள்




**கப்பலில் வேலை வாய்ப்பு:**
சம்பளம்: 500 U.S. Dollar
ஒப்பந்தம்: 1 வருடம்.
(இக்கப்பல் கனடா, அவுஸ்திரேலியா, அமெரிக்கா, இலண்டன் ஆகிய நாடுகளில் தரித்துச் செல்லும்.)

**சவூதி அரேபியா-S.O.M.C.**

| | |
|---|---|
| University Cleaners | 350+100 |
| Hospital Cleaners | 350+100 |

ஒப்பந்தம்: 3 வருடம்.

**குவைத்:**
ஆஸ்பத்திரி கிளினேர்ஸ்: 35 டினர்
வீதிச் சுத்திகரிப்பாளர்.
(வயது 18க்கு மேல்)

தொடர்பு:
# கோல்டன் ரவல்ஸ்
## அன் ரூர்ஸ்
புகையிரத நிலைய வீதி,
சுன்னாகம்.

குப்பிளான் வல்வெட்டி

(C 688)

## AIR CONDITION & REFREGIRATION CLASSES
## குளிரூட்டலும் பாதுகாத்தலும்
### வகுபபுக்கள்

புதிய பயிற்சி நெறிககான வகுப்புக்கள்
ஆரம்பம்: 29-10-88
வெளிநாடு செல்வோருக்குகந்த துரித பயிறசி நெறி
உங்கள் பதிவுகளுக்கு:
# NORTH CEYLON TECHNICAL INSTITUTE
14, சென பீற்றர்ஸ் ஒழுங்கை,
ஆஸ்பத்தரி வீதி,
யாழ்ப்பாணம்.

(C/677)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை
## ஆண்டுத்தேர்வு - 1988

முதலாம் ஆண்டுத்தேர்வு
கலை/வணிகம்/முகாமைத்துவம்.
பொதுக்கலைமாணித் தேர்வு- பிரிவு 1, 11.
சிறப்புக் கலைமாணித் தேர்வு- பிரிவு 1, 11, 111.
வணிகமாணித் தேர்வு- 1, 11, 111.
முகாமைத்துவத் தேர்வு- 1, 11, 111.

மேற்படி ஆண்டுத் தேர்வுகளுக்கு தகுதி வாய்ந்த மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன விண்ணப்பக் கடைசித் திகதி 20. 11 1988 மீள் பரீட்சார்த்திகள் தகுந்த கட்டண ரசிதுடன் விண்ணப்பப் படிவங்களை பரீட்சைக் கிளையில் சமர்ப்பிக்கவும். முடிவுத் திகதியின் பின் விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக் கொள்ளப் படமாட்டா.

பதில் பதிவாளர்.

(C/686)

## ரெலிவிஷன்
### நெஷனல் - 17 '
கறுப்பு வெள்ளை
ரெலிவிஷன் இப்போது கையிருப்பில்
★ மரக் கபினெற்
★ உள்ளமைந்த பூஸ்ரர்
★ இரண்டு வருட உத்தரவாதம்

**V. K. இராசரத்தினம்**
(நெஷனல் பிரதான விற்பனைப் பிரதிநிதிகள்)
95, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம் C/693)

## 6ஆம் மாத நினைவஞ்சலி



அமரத்துவமடைந்த ஆசிரியை
### திருமதி தருமலட்சுமி சதாசிவம்
அவர்கள்

மலர்வு: 1923-06 08 உதிர்வு: 1988 04-29

நற்குணத்தின் திருவுருவாய் நாற்படையின் பெட்டகமாய்
சிற்பரத்தின் தியானமதே சிந்தையில் நிறைந்தவளாய்
அற்புதத்தான் அடிதன்னை அன்போடு தழுவிய எம்
பொற்புடைய தர்ம பூமகளே போற்றுகின்றோம்

எங்கள் அன்புத் தெய்வமே! ஆதரவாய் வளர்த்தெடுத்த அன்னையே! உமைப்பிரிந்து ஓராறு மாதம்... உங்கள் ஆன்மா உமை பாகன் பாதம் சாந்திபெற வணங்குகிறோம்.
சாந்தி! சாந்தி!! சாந்தி.

அன்புக் கணவன்,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

புங்குடுதீவு-1 (7564)

யாழ். ஐக்கிய வியாபாரச் சங்கம் (வரை)
### பங்காளர்களின் முகவரிகள்

மேற்படி சங்கப் பங்காளர்கள் யாவரையும் தங்கள் தற்போதைய முகவரியை 30-11-88 க்கு முன் பங்குச்சன்றிதழ் காட்டி அறிவிக்கவேண்டுகின்றோம். தபாலிலானால் போட்டோ பிரதிகளை அனுப்புக. நேரிலானால் வேலை நாட்களில் காலை 9-11 மணிக்குள் வருக

காரியதரிசி

346, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம் 748)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



படைப்பு 22. 3. 1940 அழிப்பு 29. 10. 1987

### கனகநாயகம் பத்மநாதன்
(எம். எஸ். இண்டஸ்ரீஸ், கோண்டாவில் முன்னாள் சாரதி)

அன்புத் தெய்வமே! எங்கள் பசிமுகம் பார்த்து பணம் தேடிச் சென்ற உங்களை காலன கவர்ந்தனனோ? உங்கள் திருமுகம் காணாமல் எங்கள் பசியும் தெரியவில்லை பரிதவிப்பும் தீரவில்லை என்றுங்களை காண்போம் என ஏங்கித்தவிக்கும்.

அன்பு அம்மா, மனைவி,
பிள்ளைகள், உறவினர்கள்,
நண்பர்கள்.

30 கன்னதிட்டி ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (7569)

## அந்தியேட்டியும் நினைவஞ்சலியும்



செல்வன்
### தில்லைநாதன் பரிமேலழகன்
(சிவபாலன்)

தோற்றம்:- 16 07 - 1959 மறைவு:- 12 -07 - 1988

கனடாவில் காலமாகி எம்மை அதிர்ச்சியிலும் மீளாத்துயரிலும் ஆழ்த்திய எங்கள் அன்பு மைந்தரின் அந்தியேட்டிக் கிரியைகள் 29-10-88 காலை கீரிமலையிலும், வீட்டுக் கிரியை 30-10-88 பகல் அளவெட்டி எமது இல்லத்திலும் நடைபெறும். இவ்விரு கிரியைகளிலும் கலந்துகொண்டு அமரரின் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டிக் கொள்ள உறவினர்களையும் நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்

பெற்றோர், சகோதரர்கள்.

அளவெட்டி. (7575)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



(வடகோவையூர்)
### திரு. முருகேசு நல்லையா
(அதிபர் சரவணபவானந்தவித்தியாலயம, கோப்பாய்)

ஆண்டவன் படைப்பு: 08-09-1930 அழிப்பு: 10-11-1987
திதி: 29-10-1988

கடமையே கண்ணாய் ஊருக்கொரு சேவகனாய், மாணவர்க்கு நல்வழிகாட்டியாய், கோவிலுக்குத் தொண்டனாய், யாவருக்கும் இனியனாய் பண்புடன் வாழ்ந்த எமது அன்புத் தெய்வமே!

எம்மையெல்லாம் ஊர் ஊராய் அழைத்துப் பாதுகாத்த உங்களுக்கு உங்கள் உயிரைப் பாதுகாக்க முடியவில்லையே எம்முடன் நீங்கள் வாழ்வதை விரும்பாத காலன் உங்கள் உயிரைக் கவர்ந்திட்டானே.

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி மகள்,
உறவினர், நண்பர்கள்.

வேலடி,
கோப்பாய் வடக்கு,
கோப்பாய் (7455)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீதிக்குரங்கு"
"தீயனவற்றை பார்க்காதீர்,!
தீயனவற்றை கேட்காதீர்!!
தீயனவற்றை பேசாதீர்!!!"
100 மில்க்வைற் நீல சோப் மேலுறைகளைச் சேகரித்து கொடுத்து காந்தி மகானின் "நீதிக் குரங்கு சிலையை" பெற்றுக்கொள்ளுங்கள்.
மில்க்வைற் - யாழ்ப்பாணம்.


# சஞ்சீவி

29 - 10 - 1988 சனிக்கிழமை


"சிக்கனம்,! சிக்கனம்!!"
சிக்கனமே சிறந்த செல்வம்
100 மில்க்வைற் நீல சோப் மேலுறைகளைக் கொடுத்து அழகிய "உண்டியல்"
ஒன்றைப்பரிசாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.
மில்க்வைற்
யாழ்ப்பாணம்.


# இந்தியப்படை வெளியேறவே காத்திருக்கின்றது- பிரதமர் பிரேமா பேச்சு

கொழும்பு அக் 29
நான் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட 24 மணித்தியாலங்களுக்குள் இந்திய அமைதிப் படையை வெளியேறும் படி கேட்பேன். அவர்களும் வெளியேறவே காத்து இருக்கின்றனர்.
—பிரதமர் பிரேமதாஸ மத்துகம, களுத்துறை ஆகியஇடங்களில் நடந்த கூட்டங்களில் கலந்து கொண்டு பேசினார். அப்போதே மேற்கண்ட அறிவிப்பை அவர் விடுத்தார்.

பிரதமர் மேலும் சொன்னதாவது:—

இந்த நேரத்தில் கூட மக்கள் விடுதலை முன்னணியினர் தேசிய அரசியலுக்கு வந்து ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவர் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது

பேச்சுக்களை நடத்த ஜே வி. பியினர் முன்வர வேண்டும். அவர்கள் முன்வராது விலகியிருப்பது அவர்களின்பெயரில் ஏனையோர் குற்றங்களைச் செய்துவிட்டுச் செல்லவே உதவும்.

நாம் ஏன் ஆளை ஆள் கொல்லவேண்டும்? தேர்தல் போட்டி இப்படி அமையக்கூடாது.

நாம் தேர்தல் மோதலை சிநேகபூர்வமான தாக மாற்றககூடாதா?

பிரதமர் இப்படிக் கேட்டார். (உ-எ)

## மேலும் 8 சொகுசு பஸ்கள் நாளை முதல் சேவையில்

பொதுமக்கள் நலன் கருதி வடபிராந்திய போக்குவரத்து சபையின் கோண்டாவில் சாலைதூர இடங்களுக்கான சேவையில் மேலும் 8 இடைத்தர சொகுசு பஸ்சேவைகளை நாளை முதல் ஈடுபடுத்தவுள்ளது.

இந்த தகவலை வ. பி போ. சபையின் கோண்டாவில் சாலை அத்தியட்சகர் திரு. வி. எஸ். சொக்கலிங்கத்துடன் தொடர்பு கொண்ட போது அவர் தெரிவித்தார்.

யாழ்—திருகோணமலை பாதையில் மேலதிக பஸ் ஒன்று தினமும் காலை 8 மணிக்கு மேற்படி இரு இடங்களில் இருந்தும் புறப்படும். தூர இடங்களில் இருந்து வருவோரின் நன்மை கருதியே இந்தச் சேவை மீண்டும் அறிமுகப்படுத்தப்படுகிறது.

தற்பொழுது மட்டக்களப்புக்கு சேவையில் ஈடுபடும் பஸ்ஸில் இட நெருக்கடி அதிகரித்துக் காணப்படும் காரணத்தினால் கல்முனை வரை மேலதிக சேவை ஒன்றை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த சேவையும் நாளை முதல் தினசரி 5 30 மணிக்கு யாழ் நகரிலிருந்து புறப்படும் அதே வேளை கல்முனையிலிருந்தும் ஒரு சேவை இங்கு நடைபெறும்.

அத்துடன் இடை நிறுத்தப்பட்டிருந்த கண்டி சேவையும் நாளை முதல் தினமும் 6 45 மணிக்கு யாழ் நகரிலிருந்து நடைபெற ஏற்பாடாகியுள்ளது இதே வேளை கண்டியில் வெளியூர் பிரயாணிகள் நலன் கருதி இந்த பஸ் சேவை காலை 7 மணிக்கு ஆரம்பமாகும்.

அண்மையில் தமக்கு வழங்கப்பட்ட புதிய இடைத்தர சொகுசு பஸ்களைக் கொண்டே இந்த சேவைகள் நடத்தப்பட உள்ளதாக அவர் தெரிவித்தார்.

(உ-9)

## கிளிநொச்சியில் அடையாள உண்ணாவிரதம்

தாளையடி, அக் 29
ஸ்ரீலங்கா முகாமில் சாகும் வரை உண்ணாவிரதம் அனுஷ்டித்து வரும் அரசியல் கைதிகளின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து கிளிநொச்சியில் நேற்று ஒரு நாள் அடையாள உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்பட்டது.

தடை முகாம்களிலிருந்து விடுதலையானோர் புனர் வாழ்வுக் கழகம் இந்த உண்ணாவிரதத்தை ஒழுங்கு செய்திருந்தது

கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் முன்றலில் நடத்தப்பட்ட உண்ணாவிரதத்தில் மாணவர்கள், பொதுமக்கள், உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

(ஓ-144)

## ஜே. ஆரின்---

ரத்திலிருந்து இறக்குவதற்காகவே ஜே. வி. பி. அமைப்பு ஆயுத வழியை நாடியது. ஆகவே அவர் ஆட்சியை விட்டு இறங்கும் வரை ஆயுதங்களை போடுவது என்ற பேச்சுக்கே இடமில்லை. இப்படி ஜே. வி. பி. குறித்து எதிர்க்கட்சித் தலைவர்கள் சிலர் கருத்து வெளியிட்டதாக வெளிநாட்டு செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்தது (உ)

## 15 ஆயிரம்...

பற்றுக் குறையுமே இதற்குக் காரணமாகும்.

இதேசமயம் பிறப்பு, இறப்பு சான்றிதழ்கள் வழங்கும் நடவடிக்கையை துரிதமாக்கவென கொழும்பில் இருந்து தருவிக்கப்படவுள்ள "போட்டோஸ்ரட்" இயந்திரம், யாழ் செயலகம் வந்து சேர சுமார் ஒரு மாத காலம் ஆகலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது

(உ-5)

## ஜனவரி...

(1 ஆம்பக்க தொடர்ச்சி)
தனை நிலையம் ஊடாக இந்த தொலைபேசி இணைப்புகள் ஏற்படுத்தப்படும் என்றும்—

தனியார் நிறுவனங்களுக்கும் தொலைபேசி இணைப்புகள் வழங்கப்படலாம் என்றும் சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(உ-10)

## சுன்னாகம்....

(1ஆம்பக்கத்தொடர்ச்சி)
கிறது

"நேற்று முன்தினம் தனக்குச் சொந்தமான மினி பஸ் ஒன்றில் யாழ் நகரில் இருந்து சென்று கொண்டிருந்த போது மருதனார் மடம் பகுதியில் வைத்து இவர் இறக்கி அழைத்துச் செல்லப்பட்டாராம்.

பின்னர் நேற்றுக்காலையில் இவர் சுன்னாகம் சந்தைப் பகுதியில் சூட்டுக் காயங்களுடன் இறந்து கிடக்கக் காணப்பட்டார். (உ-9)

## எதிரணி....

டிக்கப்பட்டுள்ளது.

மற்றத் தொலைபேசியில் அற்றுக் கேட்கப்படுவதால் தொலைபேசியில் அரசியல் பேசுவதைத் தான் தவிர்த்துக் கொள்வதாக திரு குமார் பொன்னம்பலம் சொன்னார்

இதே நிலைதான் தனக்கும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஜனாப் ஏ. எச். எம். அஷ்ரப் தெரிவித்தார்.

## யாழ்...

2 கோடியே 50 இலட்சம் ரூபா வருடாந்தம் ஒதுக்கப்படுவது வழக்கம்.

இதில் மாகாணசபை அமைப்பை நெறிப்படுத்துவதற்காக 53 இலட்சம் ரூபா நிதி போக மிகுதி மாவட்டசபை நிர்வாகத்தில் இருந்து மாகாண சபை நிர்வாகத்திற்கு மாற்றப்பட்டுள்ளது

தற்பொழுது வழங்கப்பட்டுள்ள 53 இலட்சம் ரூபாவையும் கடந்த வருடத்தில் பூர்த்தி செய்யப்படாத வேலைகளைப் பூர்த்தி செய்ய உபயோகிக்கும் படியும், மிகுதித் தொகையை திருப்பி அனுப்பும் படியும் மேற்படி சுற்று நிருபத்தில் கேட்கப்பட்டுள்ளது. (உ-5)

## ஒப்பந்தம் ஒரு....

(1 ஆம்பக்கதொடர்ச்சி)
மாகும்.

வடகிழக்குப் பிரதேசங்கள் நிரந்தரமாக இணைந்திருப்பதை உறுதிப் படுத்த நாங்கள் செயற்படுவோம்.

எமது வேலைத் திட்டங்களை விளக்கும் வகையில் எமது தேர்தல் விஞ்ஞாபனம் இன்னும் ஒரு சில தினங்களில் வெளியாகவுள்ளது.

அனைத்துத்தமிழ்இயக்கங்களினதும் ஒற்றுமைக்காக ஆரம்ப காலந்தொட்டே ஈ. பி. ஆர். எல். எப். பாடுபட்டுவந்துள்ளது. ரெலோ, ஈ. என். டி. எல். எவ். ஈ. பி. ஆர். எல். எவ் ஆகியவற்றிடையே ஏற்பட்டுள்ள ஒற்றுமையை மேலும் செழுமைப்படுத்துவதுடன் ஏனைய இயக்கங்களையும் ஒன்றிணைக்க முனைப்புடன் நாம்செயற்படுகின்றோம்.

தமிழ் மக்களின் நலன்களை முன்னிட்டு தமிழீழ விடுதலைப் புலிகள், புளொட் இயக்கங்கள் ஜனநாயக வழியில் இணைந்து உழைக்க முன்வரவேண்டும் என்று கோரிக்கை விடுகின்றோம்.

மக்களின் நலன்களை முதன்மைப்படுத்தி இவர்கள் இந்தப்பாதைக்கு வருவார்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

கடந்த காலங்களில் ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சி என்பன இனவாத அரசியலையே நடத்திவந்தன. தொடர்ந்தும் அவர்கள் அதேவழியில் தான் செல்கின்றார்கள்.

இலங்கை-இந்திய ஒப்பந்தம் தமிழர் பிரச்சினைக்கு ஒரு தீர்க்கமான முடிவினை ஏற்படுத்தாவிட்டாலும் தீர்வை நோக்கிஎடுத்து வைக்கப்பட்டுள்ள ஆச்சபூர்வமான முதல்படியாகவே கருதப்படுகிறது

இவ்வொப்பந்தத்தின் மூலம் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைவழங்கப்படாவிட்டாலும்கூட தமிழ் மக்கள்சுயநிர்ணய உரிமைகளுடன் வாழ வேண்டும் என்பதை இது உணர்த்துகிறது.

ஒப்பந்தத்தின் மூலமான ஜனநாயக வழிமுறையிலான போராட்டம் இலங்கை அரசாங்கத்தினால் ஆயுத முனையில் அடக்கி ஒடுக்கப்படுமானால் தமிழ்மக்கள் ஆயுதம் கொண்டு போராடுவது தவிர்க்க முடியாததாகிவிடும். எனினும் ஜனநாயக வழிமுறையில் எமது உரிமைகளை வென்றெடுக்கவேபெரிதும் விரும்புகிறோம்.

மக்கள் அமைப்புக்கள் பொது நிறுவனங்கள், அனைத்து இயக்கங்கள் ஆகியவை தமிழ் மக்களோடு ஒன்றிணைந்து செயற்படவும். ஜனநாயக வழிமுறையில் செல்லவும் முற்படவும் வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார். (உ-164)

## இராணுவ...

(1ம்பக்கத தொடர்ச்சி)
முதலி மறுத்துவிட்டார். ஏழு எதிர்க்கட்சிகளின் பிரதிநிதிகள் மீண்டும் ஜனாதிபதியை மூன்றாவது முறையாக நாளை சந்திப்பர் என்று மட்டும் அவர்தெரிவித்தார்.

(ஓ-எ)




ஆங்கிலத்தில் பேச வேண்டும் என்ற விருப்பம்-
ஆனால் தவருகப் பேசி விடுவோமே என்ற தயக்கம்-

இதுதானே உங்களது பிரச்சினை?

பரீட்சையில் சித்தி பெற்றவர்களிடம் கூட இக்குறை காணப்படுகிறது. இதற்கான காரணம் நாம் பாடசாலைகளில் படித்தது.

WRITTEN ENGLISH

ஆனல் நடைமுறையில் நாம் பிறரிடம் உரையாடத் தேவைப்படுவது

SPOKEN ENGLISH

எனவே முறையான பயிற்சி இருந்தால் யாருடனும் சாதாரணமாக ஆங்கிலத்தில் உரையாட முடியும்.
இதனைக் கருத்திற் கொண்டு

BRIGHT TRAINING CENTRE

நிறுவனத்தினர் மிக இலகு நடையில் அமைந்த தபால் முறையில் மிகச் சிறந்த பயிற்சி நெறியினை அறிமுகப்படுத்துகிறார்கள்.
உளவியல் அடிப்படையில்,
மிக மிகப் புதுமையான முறையில்

SPOKEN ENGLISH

பயிற்சி நெறியினை மூன்றே மாதங்களில் கற்றுத் தேறலாம்.
விபரங்களுக்கு முத்திரையொட்டிய சுய விலாசத்துடன் தொடர்பு கொள்க:

BRIGHT
TRAINING CENTRE
P, O.Box 162, Colombo.
(7160)



நேற்றைய எமது புதிய வெளியீடு
உஷா சினிமா
ஜனகராஜ் - S. S. சந்திரன்
- செந்தில் - கல்லாப்பெட்டிசிங்காரம்
தவக்களை - டிஸ்கோ சாந்தி
நடித்த
- பாய்மரக் கப்பல் -
(ஒறிஜினல்)
(முழுநீள நகைச்சுவைச் சித்திரம்)
162, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(7654)


## முதலாவது ஆண்டு நினைவஞ்சலி



திருமதி. துரைராஜா அம்பிகை
மலர்வு:- 4- 6- 1949
உதிர்வு:- 11- 10- 1987
திதி:- 29- 10- 1988

குடும்பம் ஓர் கோயில் என்றீர்
குழந்தைகளே தெய்வம் என்றீர்
அம்மா என அழைக்கும் செல்வங்களுக்கு
ஆறுதல் கூற வருவீரோ?

ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்
கணவனும், பிள்ளைகளும்
உரும்பராய் வடக்கு. (7651)

## கண்ணீர் அஞ்சலி



தென்மராட்சி மக்களுக்காக அரும்பணி செய்த தென்மராட்சி பிரசைகள் குழுத் தலைவர் திரு. வீ. இராஜசங்கரிக்கு எமது கண்ணீர் அஞ்சலியை மனவருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தென்மராட்சி மாணவர்
ஒருங்கிணைப்புக்குழு
(7497)

# மரண அறிவித்தல்கள்

## கணபதிப்பிள்ளை பவளராசா

(மெக்கானிக்)

கணபதிப்பிள்ளை பவளராசா (மெக்கானிக்) 28- 10- 88ல் அகால மரணமானார். இவர் காலஞ் சென்ற கணபதிப்பிள்ளை, திரவியம் ஆகியோரின் அன்பு மகனும், அருந்ததி, இராசலிங்கம் (மெக்கானிக்), செல்வராசா (மெக்கானிக்), கோகுலராசா, தங்கேஸ்வரி, சரஸ்வதி ஆகியோரின் அன்புச்சகோதரனும், சுந்தரலிங்கம், சிவபாக்கியம், மலர், ஜீவானந்தன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரின் ஈமைக்கிரியைகள் 29- 10- 88 இன்று இணுவில் பூவோடை மயானத்தில் காலை பத்து மணிக்கு நடைபெறும். இவ் அறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்;—
குடும்பத்தினர்
சுன்னாகம் தெற்கு.
சுன்னாகம்
(7652)

## அப்புத்துரை இராசையா

அப்புத்துரை இராசையா காலமாகிவிட்டார் இவர் உரும்பராயைப் பிறப்பிடமாகவும், மயிலிட்டி தெற்கை (கட்டுவன்) வசிப்பிடமாகக் கொண்டவரும். திருமதி நல்லம்மாவின் அன்புக்கணவரும், இ. கெங்காமூர்த்தி(கனடா), இ பூபதிதாஸ்(ஜெர்மனி) இ. குகதாஸ், திருமதி அ. சத்தியபாமா, திருமதி யோ. சத்தியேஸ்வரி, இ சத்தியதாஸ் (ஜெர்மனி), திருமதி வ. சத்தியவதி, இ. வரதராசா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு க. அம்சதேவா (Hattan National Bank Ltd Jaffna), திரு க யோகநாதன், (Highways Department-Trincomalee), திரு. ச. வசந்தநாதன் (Commercial Bank of Ceylon Ltd, Negombo). திருமதி கெ. சண்முகசோதி (கனடா). திருமதி பூ. விஜயலட்சுமி (ஜெர்மனி), திருமதி கு. கலாருணி ஆகியோரின் அன்பு மாமனுநம் கிஷந்தா, ஷர்மிலா, கபிலன், சஜீவன், சகிலா, டெறிஷன். மிதிலா, அமுதன், விஜயதாஸ், பிரஷாந் ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைக்காக 30- 10- 88 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் இல: 17, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம் என்னும் இல்லத்திலிருந்து கோம்பையன் மணல மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும். இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி தயவுடன் வேண்டுகின்றோம்.


தகவல்:
இ. குகதாஸ்
(7499)

## திருமதி இரத்தினமணி அப்புத்துரை


உடுவில் கிழக்கு வண்டியர் வளவைச் சேர்ந்த காலம் சென்ற சின்னத்தம்பி அப்புத்துரை அவர்களின் அன்பு மனைவி திருமதி இரத்தினமணி அப்புத்துரை சிவபதம் அடைந்துவிட்டார். இவர் அரியமலர், ஜெயமலர் (ஆசிரியை, மல்லாகம் மகா வித்தியாலயம்). விமலச்சந்திரன் (வடிவுப் பொறியியலாளர், நீர்ப்பாசன இலாகா, இங்கிலிமிட்டிய) ஆகியோரின் அன்புத் தாயாரும், வாசுகியின் அன்பு மாமியாரும், ரத்னாவின் அன்புப் பேத்தியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 29- 10- 88 சனிக்கிழமைபிற்பகல் 2மணி அளவில்அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக மருதனாமடம் பூவோடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ. விமலச்சந்திரன் (மகன்)
வண்டியர் வளவு,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.
(7573)


உஷா
தையல் மெஷின் தொடர்


டொமெஸ்டிக் டிலியூக்ஸ் (நேரான தையல்)
ட்ரொப் பீட் பொறிமுறையும் முகப்பு அலங்காரத் தையலும்.
ரூபா 3850/-
தையற்காரர் மொடல் ரூ. 4000/-


எக்ஸெலா 30 (சிக்சாக் தையலுக்கும் நேரான தையலுக்கும்.)
30 வடிவமைப்பு அச்சுக்கள்
ரூபா. 5,850/-


சிக் சாக் எக்ஸேலா 55
பிக்கொட் விளிம்பு தைக்கும் ஊசியும் இரட்டை ஊசியும் உண்டு.
55 வடிவமைப்பு அச்சுக்கள், சிக்சாக் தையல், அலைவிளிம்புத் தையல், பொத்தான் துளை தைத்தல், முதலியன.
ரூபா. 7850/-

சகல பாகங்களும் உலோக மெருகிடப்பட்டவை.
ஒரு வருட உத்தரவாதம் இலகு தவணை முறையிலும் வாங்கலாம்,
அண்மையிலுள்ள உஷா விற்பனையாளரிடம் இன்றே விரையுங்கள்.
விநியோகத்தர்:
உஷா இன்டஸ்ரீஸ் லிமிட்டெட்
68, அத்திடிய றோட், ரத்மலானை.
தொலைபேசி: 71-6922, 71-7934, 71-7381
Mel Ads 9353



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் [பிறைவேட்] லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 29- 10- 1988 இல்அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by New Uthavan Publications(pvt) Ltd 292/2 Navaler Road, Jaffna on Saturday 29th October 1988


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

★ குறைந்த கட்டணத்தில் விமான டிக்கற் CONFIRMATION, RECONFIRMATION and CANCELLATION
★ பாஸ்போட் பொண்டிங் இந்தியன். விசா.
ஆகியவைக்கு எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.
MACK TRAVELS
Jaffna.

சஞ்சீவி சஞ்சிகை
29-10-1988 சனிக்கிழமை

யாழ் - கொழும்பு
விமான சேவை விசேட போக்குவரத்து வசதியுடன் தினசரி நடைபெறுகிறது. முன் கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்.
TELEX MESSAGES, கடிதங்கள், சிறு பொதிகள் விமான மூலம் அனுப்பப்படும்.
MACK TRAVELS
1st - Lane, Pt - Pedro Road,
Jaffna.

கருத்துக் கலசம் - மயூரா

## நாட்டுக்கு நீ என்ன செய்தாய்?

மக்கள் வாழ்வது நாடு. மாக்களாகிய விலங்குகள் வாழ்வது காடு. நாடுகளில் காடுகளும் உண்டு. காடுகளை அழித்துக் நகரங்களாக்கி, கிராமங்களாக்கி, நாடுகளுடன் சேர்க்கிறார்கள். நாடுகள் அழியும் போது அவை மீண்டும் காடுகளாகின்றன.

எனினும் நாடு என்றால் மக்கள், மக்கள் என்றால் நாடு என்று பொதுவாகக் கொள்ளப்படுகிறது. அதே வேளை நாட்டுக்காக மக்களா அல்லது மக்களுக்காக நாடா என்ற கேள்வி எழுப்பப்படுவதும் உண்டு.

மக்களுக்காகத்தான் நாடு. ஆனால் நாட்டைப் பேணுவதும், வளர்ப்பதும் விருத்தி செய்வதும் மக்கள் கடமை; பொறுப்பு எனலாம்.

நாடு எனக்கு என்ன செய்தது என்று கேளாதே!
நீ நாட்டுக்கு என்ன செய்தாய் என்று கேள்!!

அந்தக் கேள்விக்குப் பதில் ஒன்றைத் தர வல்லவனாக, தரத்தகுதி உடையவனாக உன்னால் இயன்ற விதத்தில், இயன்ற துறையில் நாட்டுக்காக ஒவ்வொருவரும் உழைக்க வேண்டும்; தொண்டாற்ற வேண்டும்.

ஆனால் நாட்டில் உள்ள எல்லோரும் கேள்விக்குப் பதில் தரத் தகுதி உள்ளவர்களாக இருப்பதில்லை. தாம் உண்டு தமது வாழ்க்கை உண்டு என்று காலத்தை ஓட்டுபவர்களே பலர்.

அத்தகைய ஒரு பின்னணியில் நாட்டுக்காக, நாட்டு மக்களுக்காக பணி புரிந்தவர்கள், சேவை செய்தவர்கள், தொண்டு ஆற்றியவர்களும் சிறப்பிடம் பெறுகிறார்கள். பெயருக்கும், புகழுக்குமாகச் சேவை புரிந்தவர்களை விட, உண்மையான நாட்டுத் தொண்டு, செய்தவர்களை, தியாகம் செய்தவர்களைச் சிறப்பிக்க வேண்டியது மக்கள் கடமை.

தேசத்துக்குப் பணியாற்ற விரும்பாதவர்கள் தேசபக்தி இல்லாதவர்கள். எனது தேசம், எனது பிரதேசம், எனது மக்கள், எனது மொழி, எனது இனம், எனது சமூகம் என்பவை எல்லாம் தேச பக்தியைச் சார்ந்தவை. தேச - தேசிய - உணர்வு இல்லாமல் வாழ்பவன் நாட்டுக்கு உதவாதவன்.

தேச உணர்வும், ஏனைய உணர்வுகளும் உணர்ச்சிகளாக மாறாது பார்த்துக் கொள்ளும் நிதானம் ஒவ்வொருவருக்கும் தேவை. உணர்வு உணர்ச்சிமயமாகும் போது வேண்டாத பிரச்சினைகளும், பிளவுகளும், குழப்பங்களும் உண்டாக ஏதுவாகிறது.

சமூக நலன்- இன நலன்- தேச நலன்- உலக நலன் என்ற வகையில் மனிதனின் உணர்வு படிப்படியாக பரந்து வளருமானால் உலகத்துக்குத் தொண்டு செய்யும் விருப்பம் வளரும். குறுகிய வட்டங்களுக்குள் மட்டும் நின்று கூக்குரல் போடாது பரந்த அளவில் பணிபுரியும் நோக்கு உருவாகும். ஒன்றே குலம், உலகமும் ஒன்றே என்ற உன்னத எண்ணம் முளைவிடும். ★

# இரு விரல்களினில் இறைதத்துவம் பரதக் கலைக்கே அது அஸ்திவாரம்

இறைவன் மிகுந்த சிந்தனைக்குப் பிறகு மனித உருவைப் படைத்தான் என்று கூறுகிறது 'புருஷசூக்தம்'.

அப்படிச் சிந்தனைக்கே உயிராக இருப்பவன், உயிருள்ள மனிதனைப் படைக்கும்போது, ஒவ்வொரு மனித உறுப்பையும் எவ்வளவு உபயோகமுள்ளதாகப் படைத்தான் என்பதை மறைகளும், மற்றுமுள்ள புராணக் கதைகளும் விளக்கியுள்ளன.

ஆதலால் கை, கால் முதலிய அவயவங்கள் நம்மை இறைவனோடு இரண்டறக் கலக்க இருக்கின்றனவே தவிர, அழியும் பொருள்களுக்கு உதவியாக இருக்கவில்லை என்பதே பொருளாகும்.

நம்முடைய கைகளில் பத்துவிரல்களைக் கொடுத்து, ஒவ்வொன்றிற்கும் ஒரு பெயரைச் சூட்டினான்.

நான்காவது விரலாக ஆட்காட்டி விரலும், ஐந்தாவதாக சுட்டைவிரலும் அமையப்பெற்றன.

### ஆராய்ச்சி

இவ்விரண்டிற்கும் எவ்வாறு இந்தப்பெயர் ஏற்பட்டது என்ற ஆராய்ச்சி ஆன்மீக வழியில் உள்ளவர்களுக்கு ஏற்பட்டது.

அந்த ஆராய்ச்சிக்குக் காரணமானவனும், அதற்கு விளக்கமளிப்பவனும் அந்த இறைவனேயாகும்.

உடலைக் களமாக கீதை வர்ணித்தது. அந்தக் களத்தில் உயிர்க்கருவாக இதயமாகிய மனம் கருதப்பட்டது. இப்படியே ஐந்து இந்திரியங்களும், பஞ்சபூதங்களைச் சுட்டிக்காட்டின.

இவைகளை எல்லாம் எப்படி உணர்வது என்ற ஐயப்பாடு— நமக்கல்ல, சனகாதி முனிவர்களுக்கே ஏற்பட்டது! அந்த ஐயப்பாட்டுக்கு விடை பெறவே, உலகுக்கு எல்லாம் ஈசனாக அமர்ந்த பரமேஸ்வரனை அணுகவேண்டிய நிலை இவர்களுக்கு ஏற்பட்டது.

அந்த ஈசுவரனே, தக்ஷிணாமூர்த்தியாக அமர்ந்து, கட்டைவிரலையும் - ஆள்காட்டிவிரலையும் ஒருங்கே இணைத்து, 'சின் முத்திரை'யைப் போட்டுக்காட்டினார்.

சனகாதி முனிவர்களும், 'சின் முத்திரை'யின் உண்மையான பொருளை அறிந்தவர்களாகச் சென்றார்கள்.

### பேசாமல் பேசுவது எப்படி?

பேசாமல் பேசி, சொல்லாமல் சொல்லி, இந்த உலகின் தத்துவத்தை உபதேசித்த பெருமான் எவ்வாறு பேசாமல் பேசினார்; கேட்க வந்தவர்கள் கேளாமல் எப்படி விடைபெற்றனர்? இந்தச் சந்தேகம், அன்றல்ல இன்றும் சிலரிடையே இருந்து வருகிறது.

இதற்கான விடையாக தபோவனம் ஞானானந்த ஸ்வாமிகளின் அருட்சீடர் ஹரிதாஸ்கிரி அற்புதமான விளக்கத்தை அளித்தார்.

பேசாமல் பேசுவது எப்படி?
இந்தக் கேள்விக்கு விடை கொடுப்பது மிகவும் எளிது.

ஸ்வாமி கூறும் உதாரணங்கள் அன்றாட வாழ்க்கையில் நாம் காணும் சாதாரண நடைமுறை செயல்களைக் கொண்டே சொல்லப்படும்.

அவ்வாறு அவர் கூறிய உதாரணம்:

ஒரு கணவனும் மனைவியும் தனது மகளுடன் வாழ்ந்து வருகின்றனர்.

கணவனுக்குத் தனியார் நிறுவனத்தில் மாதச் சம்பளம்.

மகளுக்குக் கல்யாண வயது. அவ்வீட்டு இல்லாள் மாதம் தோறும் வாடிக்கையாளர்களிடம் பலசரக்குச் சாமான்கள் கணக்கில் வாங்குவது வழக்கம். இந்த மாதத்தில் வாங்கியதற்கு அடுத்தமாதத்தில் பணம் கொடுப்பது வழக்கம்.

இது அநேகமாக எல்லோர் இல்லத்திலும் நடைபெறும் ஒரு சாதாரண செயலாகும்.

அந்த மாதம் கணவன் நிறுவனத்தில் வேலைநிறுத்தம். சம்பளம் பெறமுடியவில்லை. முதல் திகதி ஆனவுடன் பணம் பாக்கியை வசூலிக்க ஒவ்வொருவராக வருகிறார்கள்.

**- ஆர். கிருஷ்ணசுவாமி -**

இதே சமயத்தில் தனது பெண்ணைக் கல்யாணத்திற்காகப் பார்ப்பதற்குப் பிள்ளை வீட்டார் வந்துள்ளார்கள்.

அப்போது அரிசிக்காரன் வாசலில் வந்து நிற்கிறான். அரிசிக்காரனுக்கோ உள்ளிருக்கும் விவகாரம் தெரிய சந்தர்ப்பமில்லை.

அரிசிக்காரன் வந்துநிற்பது எதற்காக என்பது இல்லாளுக்குத் தெரியும்.

அவள் என்ன செய்வாள்?

கண்ணால் அவனிடம் 'நாளை வா' என்று சைகை செய்கிறாள்! அவனும் புரிந்தவனாகச் செல்கிறான்.

இவர்கள் இருவருக்கும் தான் இதன் பொருள் புரிகிறது. வந்திருப்போருக்கு இதன் விளக்கம் தெரியாது.

எப்படி இந்த மாது பேசினாள், அவன் எவ்வாறு புரிந்துகொண்டான்?

ஒரு சாதாரண செயலுக்கே இப்படி முடியுமானால், சனகாதி முனிவர்களுக்குத் தக்ஷிணாமூர்த்தி செய்கையின் அர்த்தமா விளங்காது?

### சின்முத்திரை

அப்படி சின்முத்திரை'யில் என்னதான் விளக்கினார்?

ஆள்காட்டி விரலையும் கட்டை விரலையும் இணைத்தார்.

ஆள்காட்டி விரல் ஜீவாத்மாவைக் குறிக்கிறது.

கட்டை விரல் பரமாத்மாவைக் குறிக்கிறது.

ஜீவாத்மாவை, பரமாத்மாவுடன் இணைப்பதுதான் இவ்வாழ்க்கையின் தத்துவம். 'அதுவே இதுவாக இருக்கும்'— 'தத்வமஸீ' என்ற பொருளை உணர்ந்தார்கள்.

ஆள்காட்டி விரல் என்பது எதிரே உள்ள ஆளைக் காண்பிப்பது அல்ல — எல்லா ஆட்களுக்கும் காரணமான பெருமானை சுட்டிக் காண்பிப்பதால் அதற்கு 'ஆட்காட்டி விரல்' என்ற பெயர் சூட்டப்பட்டது.

'பெருமானை'க் காட்டும் விரல் — பரமாத்மாவை இணைக்கும் விரல் ஆகையால் இது ஆட்காட்டி விரலாக அமைந்தது என்றார்.

கட்டைவிரல் பரமாத்மாவைக் குறிக்கும் என்பதற்குப் புராணவாயிலாக பல விளக்கங்கள் உள்ளன.

அவைகளைப் பற்றி ஆராய்ந்தால் அதுவே ஒரு புராணமாகும்.

இவ்வாறாக, நம் வாழ்க்கையின் தத்துவத்தை அன்றாடம் நாம் புரிந்து கொள்வதற்காகவே, நம் உடலிலேயே தத்துவங்களைப் புகுத்திவிட்டான் இறைவன்.

இருவிரல்களினால் இறை தத்துவத்தைப் போதித்த இறைவன், கூத்தனாக ஆடி பல அடவுகளினாலும்—முத்திரைகளினாலும் ஒரு பரதக் கலைக்கே அஸ்திவாரமாக விளங்குகின்றான்.

இப்படிப் பேசாமல் பேசி, முத்திரைகள் மூலம் எல்லோரும் புரிந்து கொள்ள வழி வகுத்த இறைவனின் கருணையை என்ன என்று சொல்வது! ★

# புற்றுநோய்த் தடுப்பில் உணவின் பங்கு

அமெரிக்காவில் சைவ உணவு சாப்பிடுகிறவர்களை விட அசைவ உணவு சாப்பிடுகிறவர்களுக்கு அதிக அளவில் மலக்குடலிலும், ஆசனவாயிலும் புற்றுநோய் வருகிறது. ஜப்பானில் உள்ளவர்களுக்கு வயிற்றுப் புற்றுநோய் அதிக அளவிலும், குடற் புற்றுநோய் குறைந்த அளவிலும் வருகிறது.

ஆனால் ஹாவாயிலிருக்கிறவர்களுக்கு வயிற்றுப் புற்றுநோய் குறைவாகவும் குடல் புற்றுநோய் அதிக அளவிலும் வருகிறது. அமெரிக்கப் பெண்களுக்கு ஆசியப்பெண்களைவிட அதிக அளவில் முலைப் புற்றுநோய் தோன்றுகிறது, இதற்கெல்லாம் உணவுப் பழக்கங்களே காரணமாக இருக்கலாம் என விஞ்ஞானிகள் நம்புகிறார்கள்.

### உணவுப் பழக்கம்

1981 - ஆம் ஆண்டில் ரிச்சர்ட் டொல் (Richard Doll), ரிச்சர்ட் பீற்றோ (Richard Peto) என்ற இரண்டு பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் உணவுப் பழக்கங்களை மாற்றிக்கொள்வதன் மூலம் அமெரிக்காவில் புற்றுநோய்க்குப் பலியாகிறவர்களின் எண்ணிக்கையை மூன்றில் ஒரு பங்காகக் குறைக்கலாம் என்று சொன்னார்கள்.

வயிறு, பெருங்குடல், கருப்பை, முலை, பித்தப்பை, கணையம் ஆகியவற்றில் புற்றுநோய் உண்டாக்குவதில் உணவுகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. சில உணவுகள் புற்றுநோயைத் தடுக்கின்றன. ஏ. சி. இ. ஆகிய விட்டமின்கள், பீட்டா காரொடீன் (BetaCarotene). செலீனியம் போன்ற இயற்கைச் சத்துக்கள் புற்றுநோயைத் தணிக்கும்.

### இரண்டாவது கட்டம்

புற்றுநோய் முதலில் ஒரு செயல் தொடக்கியால் (Initiator) ஆரம்பித்துவைக்கப்படுகிறது. அடுத்து ஒரு கட்டி வளர்ப்பானால் (Tumour Promoter) அது ஊக்குவிக்கப்படுகிறது. இந்த இரண்டாவது கட்டத்தை விட்டமின்கள், தாதுப் பொருள்கள் போன்ற தணிப்பான்களின் உதவியால் தடுப்பதைப் பற்றி ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகிறது. இவை கட்டி வளர்ப்பானின் செயலைத்தணித்து, குடல் பாதைகளில் புற்றுக் நோய்க் காரணிகள் (Carcinogen) உண்டாவதைத் தடுக்கும்.

### காய்கறி சாப்பிட்டால் ....

காய்கறிகளை அதிகமாகச் சாப்பிடுகிறவர்களுக்கு முலை, மலக்குடல், புரோஸ்டேட் ஆகியவற்றில் புற்று நோய் அதிகமாக வருவதில்லை. காய்கறிகளில் புற்று நோயை தடுக்கும் பொருள்கள் இருப்பதாகத் தோன்றுகிறது.

அவரை, மொச்சை, பட்டாணி, கூல வகைத் தானியங்கள் (Cereal Grains) போன்ற விதை உணவுகளும், உருளைக்கிழங்கு போன்ற கிழங்கு வகைகளும் புற்றுக் கட்டி வளர்ப்பான்களின் செயல்பாட்டைத் தடுக்கிறவை. சோயா மொச்சையில் முலைப் புற்றுநோயைத் தடுக்கிற ஏதோ ஒரு சேர்மம் உள்ளது.

### விட்டமின்

இயற்கையான பீட்டா காரொடீன், ஆழ்ந்த மஞ்சள் நிறமுள்ள பழங்களிலும்' காய்கறிகளிலும் (ஆப்ரிகாட் காரட், சர்க்கரை வள்ளி) கரும்பச்சை நிறமுள்ள காய்கறிகளிலும் (ஸ்பினக், முட்டைக்கோஸ், காலிபிளவர்) காணப்படுகிறது.

ஏ விட்டமின். பால், ஈரல், முட்டையின் மஞ்சள் கரு (Yolk) ஆகியவற்றில் கிடைக்கிறது. ஏ விட்டமின் குறைந்த உணவுகளைச் சாப்பிடுகிறவர்களுக்கு நுரையீரல் புற்றுநோய் வருகிறது. காரொடீனும் ஏ விட்டமினும் நிறைய உள்ள உணவுகளை உட்கொள்ளுகிறவர்களுக்கு வயிறு, குடல், பித்தப்பை ஆகியவற்றில் புற்றுநோய் வருவது குறைவாக உள்ளது. நுரையீரல்களிலும் வயிறு, குடல், பித்தப்பை ஆகியவற்றிலும் ஒருபுறத் தோல் செல் படலப்போர்வை (Epithelial Cell Lining) அமைந்துள்ளது ஏ விட்டமின் வகைகள் இந்தப் போர்வையை பாதுகாக்கின்றதாகத் தோன்றுகின்றது. தினமும் கரட்டைப் பச்சையாகவோ, சமைத்தோ சாப்பிடுவது நல்லது.

**- கே. என். இராமச்சந்திரன் -**

ஆனால், ஒருநாளைக்கு 5,000 அனைத்து நாட்டு அலகுகளுக்கு (International Units) மேல் ஏ விட்டமினை உட்கொள்ளக்கூடாது. ஏ விட்டமின் கொழுப்பில் கரையும். அது கல்லீரலில் சேமித்து வைக்கப்படும்.

நமது உடல் ஒரு குறிப்பிட்ட அளவு ஏ விட்டமினைத்தான் பயன்படுத்திக் கொள்ளமுடியும். ஏ விட்டமினை அளவுக்கு அதிகமாக நெடுங்காலத்துக்குஉட்கொண்டால் அது நஞ்சாகி விடும். கருப்பைச் சிசுக்களுக்கும், சிறு குழந்தைகளுக்கும் அது தீங்கு செய்யும்.

### புற்றுநோயைத் தடுக்கும்

மலக்குடலிலும், ஆசன வாயிலும் புற்றுநோய் வந்தவர்களை ஆராய்ந்தபோது அவர்கள் பச்சைக் காய்கறிகளை மிகக்குறைந்தளவு சாப்பிட்டுவந்தது தெரிந்தது. குறிப்பாக, அவர்களது உணவில் காலிபிளவர் போன்ற முட்டைக்கோஸ் இனத்தைச் சேர்ந்த காய்கறிகள் மிகவும் குறைவாயிருந்தன. இந்த இனக்காய்கறிகள் பெருங்குடலில் புற்றுநோய் வருவதைத் தடுக்கின்றன.

இந்தக் காய்கறிகளில் இன்டோல்ஸ் (Indoles) என்ற சேர்மங்கள் உள்ளன. இவைபுற்றுநோயை உண்டாக்கும் காரணிகளின் செயற்பாட்டைத் தடுக்கின்றன. இவற்றை எலிகளுக்கு ஊட்டிப்பார்த்ததில் வயிற்றிலும் முலைகளிலும் வரும் புற்றுநோயை இவை வளரவிடாமல் தடுக்கிறதாகத் தெரியவந்தது.

சமையல் எண்ணெய்கள், ரொட்டிகள், பிஸ்கட்டுகள், மருந்துகள் போன்றவை கெட்டுவிடாமலிருப்பதற்காக பியூடைலேடட் ஹைடிராக்சி அனிசோல் (Butylated Hydroxy Anisole) என்ற இரசாயனத்தைக் கலப்பதுண்டு. அது ஆக்சிஜனேற்றத்தைத் தடைசெய்துஉணவுப்பொருள்களைக் கெடாமல் காக்கிறது. அது 11 வகையான புற்றுநோய்க் காரணிகளின் செயல்திறனைத் தடுத்து முலை, நுரையீரல், உணவுக்குழல், பெருங்குடல், நிணநீர்ச் சுரப்பிகள் (Lymph Glands) ஆகியவற்றில் புற்றுநோய் தோன்றாமல் தடுப்பதாக ஆய்வுகள் காட்டுகின்றன. சி, இ ஆகிய விட்டமின்களும் ஆக்சிஜனேற்றத்தைத் தடுக்கும் திறனுள்ளவை.

### வெளியேறும் எலக்ட்ரான்

ஆனால். ஆக்சிஜனேற்றமில்லாமல் உயிர்தரிக்கமுடியாது. நமது உடலுக்குள் உணவு ஆக்சிஜனுடன் சேர்ந்து சுவாலையில்லா முறையில் எரிக்கப்பட்டு ஆற்றலை உண்டாக்குகின்றது. ஆனால், ஆக்சிஜனேற்றம் சிலவேளைகளில் கெடுதலும் செய்யும் என்று இப்போது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. சில சமயங்களில் ஆக்சிஜன் ஒரு அணுவுடன் கூடும்போது அந்த அணுவில் இருந்து ஒரு எலக்ரான் வெளியேறிவிடுகிறது. இந்த அமைப்பு ஒரு 'சுயேச்சை உறுப்பு' (Free Radical) எனப்படும்' அது ஒரு எலக்ரானைத் தேடி அலையும். இது ஒரு தொடர் கதையாகி செல்கள் சேதமடையும்.

இந்தச் சுயேச்சை உறுப்புகள் மூப்படையும் செயல்: முறையில் பங்குவகிக்கின்றன. ஆக்சிஜனேற்றத்தால் செல்களும். திசுக்களும் குலைவதே மூப்படையும் செயல்முறை. மூப்படையும்போது இதயமும், இரத்தஓட்டமும் தளர்வடைகின்றன. புற்றுநோயும் வரும். பியூடைலேடட் ஹைடிராக்சி அனிசோல், சி. இ விட்டமின்கள் ஆகியவை ஆக்சிஜனேற்றத்தைத் தடுத்து, சுயேச்சை உறுப்புக்களை அழித்து இந்தநோய்கள் தோன்றுவதைத் தடுப்பதாக நம்புகிறார்கள்.

சி, இ விட்டமின்களைச் சிறிய அளவுகளில் உட்கொண்டால் தீங்கில்லை. ஆரஞ்சுகள், பழங்கள் ஆகியவற்றிலிருந்து தேவையான சி விட்டமினையும், தாவர எண்ணெய்கள், முழுத்தானியங்கள், முட்டை ஆகியவற்றிலிருந்து இ விட்டமினையும் பெறலாம். மாத்திரைகளை விழுங்கி அளவுக்கு மீறி சி, இ விட்டமின்களை உட்கொள்ளக்கூடாது.

### ஊறுகாய்

உணவிலுள்ள சில பொருள்கள் புற்றுக் காரணிகளைத் தடுக்கின்றன. வேறு சில அவற்றை ஊக்குவிக்கின்றன. புகை மூலம் பக்குவப்படுத்திய உப்புமூலம் பக்குவப்படுத்திய. ஊறுகாய்களும், உணவுகளும் புற்றுநோயை உண்டாக்கும் காரணிகளை கொண்டிருப்பதாகத் தெரிகிறது. சிவப்பு மாமிசம் வெண்ணெய், பால், ஐஸ்கிரீம் ஆகியவற்றிலுள்ள கொழுப்புகள் முலைகளிலும் மலக்குடலிலும் புற்றுநோயைத் தூண்டும்.

உடலுக்கு வேண்டிய கலோரிகளில் 30 சதத்துக்கு மேல் கொழுப்பு உணவுகளிலிருந்து பெறவேண்டாம் என மருத்துவர்கள் எச்சரிக்கிறார்கள். மது, ஜீரண மண்டலத்தின் மேல் பகுதிகளில் புற்றுநோயை உண்டாக்க வழிசெய்யும். இத்துடன் புகைபிடிப்பதும் சேர்ந்து விட்டால் வாய், தொண்டை, உணவுக்குழல் ஆகியவற்றில் புற்றுநோய் உண்டாக ஏதுவாகும்.

மது கல்லீரலைச் சேதப்படுத்தி அங்கு புற்றுநோய் வரவழி செய்கிறது. இவ்வாறு நமது உணவுப் பழக்கங்களுக்கும் புற்றுநோய்க்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. உணவுப் பழக்கத்தை மாற்றிக்கொண்டால் புற்றுநோய் வராமல் தடுக்க முடியுமா என்ற கேள்விக்குச் சரியான விடை இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால், சரியான உணவுப் பழக்கங்கள் மூலம் புற்றுநோய் வருவதற்கான வாய்ப்புகளைக் கணிசமாகக்குறைக்க முடியும்.(எ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மையின் தரிசனங்கள்



எழும்ப விருப்பமின்றி சோம்பலுடன் எழும்பிப் பாயைச் சுற்றி வைக்கிறாள் சாரதா.

'விஜி... ஏய் விஜி' நாலரை மணியாகி விட்டது. எழும்பிப்படி' என்றபடி விளக்கைப் பற்ற வைக்க இருட்டில் தீப்பெட்டியைத் தடவுகிறாள்.

'நித்திரை வருகுதம்மா கொஞ்சநேரம் தூங்குகிறேன்'

'ஏன்! இந்த வருடமும் பெயில் விடுவதற்கே எழும்பிப்படி.

நான் தேத்தண்ணி ஊத்தியிட்டு வாரேன்'

மகள் படிக்க விருப்பமின்றி வேண்டா வெறுப்புடன் புத்தகத்தை விளக்கு முன் வைத்துக் கொண்டு தியானத்தில் தொடங்கி விட்டாள்.

சாரதா தேநீர் தயாரிப்பதற்காகப் போகும்போது அவளுடைய கால் மற்ற மகள் பிருந்தாவின் காலுடன் தட்டுப்பட விழப்போறாள் ஒருவாறு சமாளித்துக் கொண்டாள்.

'என்னம்மா பார்த்துப் போகேலாதே, நித்திரையையும் குழப்பிக்கொண்டு' என்று சிணுங்கினாள் பிருந்தா. தட்டுப்படாமல் என்ன செய்யும். மூன்று பேர் கூடி ஒழுங்காகக் கால் நீட்டிப் படுக்கமுடியாத கோழிக்கூடு போன்ற அவ்வளவு சிறிய அக் குடும்பத்தின் வீடு. அதில் நான்கு பேர் படுப்பது என்றால் எப்படி...? பத்தாம் வகுப்புப் பரீட்சை, இரண்டாவதுமுறை எடுக்கப்படிக்கும் கடைக்குட்டி விஜி.

பத்தாம் வகுப்புடன் வீட்டுக் கஷ்டத்தாலும், படிக்க விருப்பமில்லாததாலும், தன் படிப்புக்கு முழுக்குப் போட்டுவிட்டு வேலைக்குப் போகும் மகள் பிருந்தா. எட்டுமணிநேரம் கால்கடுக்க நின்று கொண்டு வேலை செய்யும் அவள் படிப்பின் அவசியத்தை இப்பொழுது உணருகிறாள்; பதினெட்டு வயது தான். பாவம் இனி என்ன தான் செய்யமுடியும். வீட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பே அவள் தானே;

அடுத்தவன் மகன். உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்துபல்கலைக்கழகம்புகும் நாளை எண்ணி எண்ணி கனவுகுண்டு கொண்டிருக்கும் விஜயகுமார் தண்டச்சோறு உண்ண விருப்பமில்லாததால் டியூசன் கொடுக்கிறான்.

சாரதா வீட்டை விட்டு வெளியே வருகிறாள். மெல்லென அவளைத் தடவிச் செல்லும் அதிகாலைக் குளிர்காற்றினால் வாழ்க்கையின் கஷ்டங்கள், கவலைகள், மற்றும் பொறுப்புக்களாலும் வாடி, வதங்கி, சுருங்கிபோன முகமும், ஒடிந்து மெலிந்து போன மெல்லிய தேகமும் நடுங்கி உடம்பைச் சிலிர்க்க வைக்கின்றது. அடுப்படியில் கொஞ்சம் இருந்த மண்ணெண்ணையை ஊற்றி அடுப்பைபற்ற வைக்கிறாள். அதுசிறிது நேரத்தால் அணைந்து விடுகிறது. அவள் பேப்பர்களை வைத்து ஊதிப் பற்ற வைக்கிறாள்.

தாய், மாவை அளந்து பார்க்கிறாள். இரண்டரைச் சுண்டு தான் இருந்தது. கடையில் கடனும் வாங்கேலாது. கடனும் ஐநூறு ரூபாயிக்கு மேலே வந்திட்டுது. பிருந்தாவிற்கு நானூறு சொச்சம்தான் கிடைக்கும். சமாளிப்பம் என்று நினைத்துக் கொண்டு பிட்டு அவிப்பதற்காகக் குசினிக்குச் செல்கிறாள்.

'அம்மோய் பற்பொடி இல்லையே' கத்தினான் விஜய்.

'தட்டியிலே செருகி வச்சனான் பார்'

'தட்டியிலயுமில்ல தொட்டியிலயுமில்ல இப்ப என்னண்டு பல் விளக்கிறது' என்று முணுமுணுத்தான்.

'நாளைக்கு வாங்கித் தாரன் இப்ப சும்மா விளக்கண்டா'

'இந்த வீட்டில ஒன்றுமே இருக்காது' என்று சொல்லிக் கொண்டு கிணற்றடிக்குச்சென்றான்.

அடுப்படியில் நெருப்புடன் போராடி ஒருவாறு பிட்டையும், பருப்புக் கறியையும் சமைத்து எடுத்துக் கொண்டு வந்தாள். பிருந்தாவிற்கும், ஆஸ்பத்திரியில் இருக்கும் கணவனுக்கும் சாப்பாடு கட்டி வைத்துவிட்டு, நேற்றைய சமையல் பாத்திரங்களுடன் கிணற்றடிக்குச் சென்றாள்.

'அம்மா பசிக்குது சாப்பாடு போட்டுத் தாங்க' மகனின் குரல்.

'இந்தா வருகிறேன்' என்றபடி வருகிறாள் சாரதா.

'அம்மா எனக்குக் கொஞ்சமாப் போட்டால் போதும்' என்றாள் விஜி.

அம்மா பிட்டு இருந்தா இன்னும் கொஞ்சம் போடி நீங்களா' விஜய்.

'சோப்பையைத்தாவன் தருகிறேன்' சாப்பிட்டுக்கொண்டிருந்த பிருந்தா சென்று பிட்டுக் கிண்ணத்தைப் பார்க்கிறாள்.

'ஏய் சும்மா இரு, அம்மாவுக்கு மட்டும் கொஞ்சம்தான் இருக்கு' எல்லோரும் கைகழுவிக் கொண்டார்கள்.

'அம்மா என்னுடைய இரண்டு பாவாடை இருக்கு முடிஞ்சா கழுவிப் போட்டுடு நீங்களா, பிருந்தா.

'சரி'

'டேய் விஜய் போகும் போது அப்படியே ஆஸ்பத்திரியில ஐயாவுக்குச் சாப்பாடு கொடுத்திட்டுப் போறியோ'

'சும்மா எனக்கு வேற வேலையில்லை, அவரு குடிச்சுப் போட்டு அடிக்கடி வாட்டில கிடப்பாரு, நாங்க அவருக்குச் சாப்பாடு கொண்டு போகணும், சும்மா போம்மா'

டேய் பொத்தடா வாய, உனக்குக் குடுக்க முடியாதென்று முடியாது என்று சொல், குடிச்சாலும், வெறிச்சாலும் இந்த இருபது வருசமா உங்களை வளர்த்துப் படிக்க வைச்சது ஐயா தானேடா'

'இதுகளோட பெருங்கரைச்சல், எங்க சாப்பாடா தாங்க'

'அம்மா போயிட்டு வாரன்' மகள்மார்.

'ஏதாவது பிரச்சினை என்றால் அங்க நிற்கிறதில்லை, கெதியா வந்திடணும். சரியா, சரி, சரி ஏழரையாச்சுது கெதியாய்ப் போங்கோ' என்று சொல்லி அனுப்பிவிட்டு முகம் கழுவச் சென்றாள்.

அவர்கள் ரவுணுக்கு அண்ணனுடைய சைக்கிளில் முன்னுக்கும், பின்னுக்கும் இருந்து கொண்டுதான் செல்வார்கள். பிரயாணம் அரை மணித்தியாலத்திற்கு மேலாவது பிடிக்கும். என்ன செய்வது காசு இல்லை. இதுதான் அவர்கள் விதி. அண்ணன் மூச்சிரைக்க ஓடுவான். அவர்களுடைய கால் விறைத்துப்போய் அந்தரத்தில் தொங்குவதுபோல் இருக்கும். இவ்வளவும் பிருந்தாவிற்கு கிடைக்கும் பஸ் காசை மிச்சம் பிடிப்பதற்குத் தான்.

சாரதா முகத்தைக் கழுவி விட்டுக் கண்ணாடி முன்னால் நின்று குங்குமப் பொட்டு வைத்துக்கொண்டாள். சாப்பிடத் தவறினாலும் இதற்குத் தவறமாட்டாள். இருந்த பிட்டையும் குழைத்து இரண்டு உருண்டை பிடித்து வாயில் போட்டுக்கொண்டாள். தபாற் கந்தோரில் தன் கணவனுக்குக் கிடைக்கும் உதவிப் பணத்தைப் பெறுவதற்கு ஆயத்தமானாள்.

'மணி எட்டும் தாண்டி விட்டது. வெள்ளணப் போனால் கெதியா எடுத்துக்கொண்டு வரலாம்' என்று நினைத்துக் கொண்டு.

'இக்காசு கிடைத்தால் கடைக்கு ஒரு ஐம்பது ரூபா என்றாலும் கொடுக்கலாம், விஜியும் பள்ளிக்கூடத்தில் எதற்கோ காசு கேட்டதாகச் சொன்னாள், அவளுக்கும் ஏதாவது வாங்கி சமைத்துக் கொண்டு, போய்ப்பார்த்து விட்டும் வர வேண்டும். எத்தின மணிக்குப் பணத்தைத் தருவார்களோ தெரியாது'...

**சஞ்சீவி சிறுகதை**

இப்படி அவளை அறியாமல் அவள் மனதில் உள்ளவைகள் வாயால் வெளிவந்துகொண்டு இருந்தன. இம் மாதங்களில் காலை வெய்யிலும் கொஞ்சம் சூடாகவே இருக்கும். அதைப் பொருட்படுத்தாது சென்று உதவிப்பணத்தைப் பெற்றுக் கொண்டு குடிசையை நோக்கி விறு விறு என்று நடக்கலானாள். வீட்டுக்கு வந்தவுடன் மணியைப்பார்த்தால் பத்துத் தாண்டி இருந்தது.

'தேத்தண்ணி குடிச்சா நல்லாத்தான் இருக்கும், நேரமும் பத்துமணியாச்சு. பிறகு குடிப்பம், முதலில் போய் சங்கத்தில் சாமான் எடுத்திட்டு வந்துவிட வேண்டும்' என்று முடிவு செய்து கொண்டு இரண்டு டம்ளர் தண்ணியை 'டமக்...... டமக்...... டமக்' என்று குடித்துவிட்டு கூடையுடன் சங்கத்திற்கு நடையைக் கட்டினாள்.

வெயில் வேறு தலையைச் சுட்டெரித்துக் கொண்டு இருந்தது நடையை துரிதப் படுத்தினாள்! கலியாணம் முடிந்து இருபது வருடங்கள் ஆகிவிட்டன. இந்த இருபது வருடங்களில் ஒரு நாளாவது மூன்று நேரமும் வீட்டில் நிம்மதியாக இருந்ததில்லை. ஓட்டமும்நடையும்தான். அவர்களுடைய வீடும் அப்படித்தான் இப்பொழுது உள்ளது. நிரந்தரமில்லாத ஏழாவது வீடு. சொத்துக்கித்து ஏதாவது இருந்தால் அல்லவா சொந்தக் காணியும் நிரந்தர வீடும் இருக்கும். அதெல்லாம் இவர்களுக்கு எக்காலம்...?

சங்கத்துக் கடையில் நீண்ட வரிசை ஒன்று இருந்தது. அதனுடன் தன்னையும் சேர்த்து வரிசையைக் கொஞ்சம் நீட்டிக் கொண்டாள்.

'சாரதாம்மா எப்படி உங்கட அவருக்கு' ஒரு குரல்.

'இப்ப கொஞ்சம் பரவாயில்லை. எழும்பி நடக்கிறார்'

சாரதாவின் முறை வந்தது. தனக்குத் தேவையானதைத் தொண்ணூறு ரூபாய் முத்திரைக்கு அளவாகப் பெற்றுக் கொண்டு வீட்டை நோக்கி நடக்கத் தொடங்கினாள். சிறிது தூரம் சென்றிருக்க மாட்டாள்.

'இதுகளின்ர குடும்பம் ஒரு புதுமையான குடும்பம்' ஒரு குரல்.

'ஆமாண்டி' மற்றக் குரல். 'இந்தக் காலத்தில ஆகக் குறைஞ்சது மாதம் ஆயிரத்து ஐநூறு ரூபாய் எண்டாலும் வேணும். இவர்கள் ஐநூறு ரூபாயில் சமாளிக்குதுகள். சாரதா இல்லாட்டி குடும்பம் நடுத்தெருவிலதாண்டி. அது பாவம்'

வீதியில்,

'விஜியம்மா! இப்ப விஜியின் அப்பாவுக்கு எப்படி?' பெண் ஒருத்தி.

'பரவாயில்ல தங்கச்சி...'

உச்சி வெயிலின் கொடுமையும், சாமான்களின் சுமையும் சேர்ந்து சாரதாவைப் படாத பாடுபடுத்தின. மெல்ல மெல்லத் தட்டுத்தடுமாறி நடந்தாள் புளியமர நிழலுக்கு;

அதில் சிறிது நேரம் ஓய்வு எடுப்பம் என்று நினைத்தவளுக்கு, கணவனுக்குச் சாப்பாடு கொண்டு போக வேண்டும் என்ற நினைவு அவளை இளைப்பாறவிடாமல் நடக்கத் தூண்டியது.

'தாங்கோவன் வீடு வரைக்கும் கொண்டு வந்து தாறன்' என்ற குரல் கேட்டுத் திரும்பியவளுக்கு விஜியின் நண்பன் நிற்பது தெரிந்தது.

'பரவாயில்லத் தம்பி நான் கொண்டு போறன்' என்று வெளியில் சொன்னாலும் மனதில் சந்தோஷம் நிழலாடியது. தம்பி கொண்டுபோய் விட்டு விடுவான் என்று.

'இதிலென்ன இருக்கு. நீங்களும் ஏறுங்கோ...... சாரதா சாமான்களைக் சரியலில் வைத்துவிட்டு இரண்டு பைகளுடன் முன்னால் ஏறிக் கொண்டாள்,

வீட்டடியில்,

'தம்பி தேத்தண்ணி குடிச்சிட்டுப் போகலாம் வாங்கோ'

'இல்லை வேண்டாம் நான் போகணும்' என்று அவன் போய் விட்டான்.

இவள் சாமான்களைவைத்து விட்டு சமைக்கத் தொடங்கினாள்,

முந்தானையால் முகத்தில் உள்ள வியர்வைத் துளிகளை அழுத்தித் துடைத்துக்கொள்கிறாள். ஆஸ்பத்திரிக்குச் செல்வதற்காக தனது கணவனுக்கு சாப்பாட்டை பார்சல் கட்டிவைத்து விட்டு முகம் கழுவச் சென்றாள்.

**- ஈழபாரதி -**

சாப்பாட்டுப் பார்சலையும் இருந்த சில்லறைக் காசுகளையும் எடுத்துக் கொண்டு வீட்டைச் சாக்கினால் மூடினாள்.

பக்கத்துவீட்டு பாக்கியத்திடம் 'தங்கச்சி நான் கொஸ்பிட்டலுக்குப் போயிட்டு வாறன், கொஞ்சம் வீட்டைப் பார்த்துக் கொள்ளுங்கோ' 'சரியக்கா' என்று பதில் வந்தது.

சாரதாவிற்குப் பயம் நாய், பூனை ஏதாவது புகுந்து சாப்பாடுகளைப் பதம் பார்த்து விடுமோ என்று.

கிட்டத்தட்ட நாலரையடி உயரமும் வீட்டு வேலைகளாலும் மெலிந்துபோன உடலும், வயோதிப பருவத்தை எட்டிப்பிடிக்கிறாள் என்பதற்குச் சான்றாக முன்தலைமயிர்கள் சாடையாக நரைத்திருப்பதும், சுருங்கி, பள்ளங்கள் விழுந்த முகமும்தான் சாரதா. இதுமட்டுமா காதிலோ தோட்டுக்குப் பதிலாக வேப்பிலைக் குச்சிகளிரண்டு கழுத்திலும், கையிலும் தாலியோ, சங்கிலியோ, காப்புகளோ இல்லாத அதைப் பற்றி சிறிதும் கவலைப்படாதவள் தான் அவள். எல்லாம் இருந்தன. இருபது வருடங்களுக்கு முன்பு.

சந்தியில் வந்து பஸ்ஸுக்காகக் காத்திருந்தாள் அந்தப் பட்டப்பகல் வெயிலில் பஸ் வரவில்லை. சிறிய தட்டிவான் ஒன்று வந்தது; சாரதாவிற்கு அருகில் வந்து நின்றது. 'அம்மா வாங்கோ, யாழ்ப்பாணத்திற்கா' இடம் தரலாம். இவளுக்கு இடம் இல்லை என்று தெரியும் என்றாலும் விரைவாகப் போக வேண்டும் என்பதால் ஏறிக் கொண்டாள்.

'அக்கா அந்தச் சின்னப் பிள்ளையை மடியல வச்சுக் கொள்ளுங்கோ'

'அம்மா அந்த இடத்தில போய் இருங்கோ' பரவாயில்லையே மனிதத்தன்மை உள்ளவனாக இருக்கிறானே என்று நினைத்துக் கொண்டாள்.

விரைவாக வாட்டினுள் நுழைந்தாள். எதிரே வந்தவருடன் மோதப்போய் நிதானமாக விலகிச் சென்றாள் கணவனின் வாட்டிற்கு.

'ஏன் சாரதா இவ்வளவு லேட்?' கணவன் கேட்டான்.

'அதையேன் கேக்கிறியள். சரி, சரி அதை விடுங்க சாப்பிடுகிறிங்களா' சாப்பாட்டுப் பார்சலைப் பிரித்துக் குழைத்து ஊட்டிவிட்டாள் மிகுதியைத் தானும் உண்டாள்.

'சாரதா சாரமும் சேட்டும் ஒன்று உள்ளது தோய்க்கனும் கொண்டு போறியா?' 'காசு இருந்தால் இரண்டு சிகரட்டும் வாங்கியா'

'இஞ்ச சிகரட் குடிக்கக் கூடாதுன்னு கேக்கமாட்டியளே' என்று ஏசிக் கொண்டு போனாள் சிகரட் வாங்க;

கணவன் சிகரட்டைப் பத்திக் கொள்ள இவள் அவருக்கருகில் இருந்து வீட்டு விஷயங்களைப்பற்றி இருவரும் சிறிது நேரம் கதைத்தார்கள்.

'அம்மாமாரே தாய்மாரே நேரமாயிட்டுது போங்கோ வெளியால, பெரியம்மா வந்தா கத்துவா' என்று கத்தினான் வோச்சர்.

'போயிட்டு வரவா நான்'

'சரி கவனமாப் பார்த்துப் போ சாரதா...

ஸ்டான்டில் வந்து ஒருவாறு பஸ்ஸில் இடம் பிடித்துக் கொண்டு வீட்டை நோக்கி பயணமானாள். வீட்டுக்குவந்து சிறிது நேரத்தில் பிள்ளைகளும் வந்து சேர்ந்தார்கள்.

அவர்களுக்குச் சாப்பாட்டைப் போட்டுக் கொடுத்து விட்டுத் தானும் சாப்பிட்டாள். சாப்பிட்டவுடன் மிளகாய்த் தூள் இடிப்பதற்கு ஆயத்தமானாள். எல்லாவற்றிலும் கொஞ்சம் கொஞ்சம் வாங்கியிருந்தாள், தூளை ஒருவாறு இடித்துக் கொண்டு பக்கத்து வீட்டுப் பாக்கியத்துடன் விறகு பொறுக்கப் பனங் காணிக்குச் சென்றாள்.

விறகுக் குச்சியைத் தலையில் வைத்துச் சுமந்து கொண்டு வீடு வந்து சேரவும் பிருந்தா வரவும் சரியாக இருந்தது.

கணவனின் உடுப்புக்களைக் கழுவுவதற்காகக் கிணற்றடிக்குச் சென்றாள். உடுப்புகளைக் காயப் போட்டபின் விஜியுடன் சேர்ந்து சட்டி, பானை, முட்டிகளை மினுக்கத் தொடங்கினாள். 'விஜி இரவைக்கு என்ன செய்ய?' 'அம்மா சோறு கிடக்குத்தானே, காணும்' என்றாள் பிருந்தா.

பத்தரை மணி. படுக்கைக்குப்போக பாயை விரித்தாள். உடலலுப்பு ஒருபுறம். கடன்காரர்கள், கணவனின் நினைப்பு இப்படிப் பல பிரச்சினைகள் அவள் கண்முன் தலைவிரித்தாடின; நித்திரைக்கும் பொறுக்க முடியவில்லைப் போலும்.

ஒருவாறு தன்னைக் கட்டுப் படுத்திக் கொண்டு கண்ணை மூடினாள்.

(யாவும் கற்பனை)

★

# யானைக்கும் பல்விழுந்து முளைக்குமா?

மனிதர்களைப் போல் யானைக்கும் பல் விழுந்து முளைக்குமா?

உண்மையில் யானைக்கும் பல் விழுந்து முளைத்துக் கொண்டு தான் இருக்கிறது.

அதற்குப் பல் விழக் காரணம் ஒரு நாளைக்குப் பதினெட்டு முதல் இருபதுமணி நேரம் வரை, சுமார் 300 கிலோ இலை, தழைகளைத் தின்னுவதால்!

இப்படிச் சாப்பாட்டு ராமனாக யானை இருப்பதால், அதன் பற்கள் தேயத்தானே செய்யும்?

இந்தத் தேய்ந்த பற்கள் நாளடைவில் சிறியவையாகி பின் விழுந்து விடும்.

மனிதனுக்கு ஒரு பல்விழுந்த பின்தான், புதியதாகப் பல் முளைக்கிறது.

ஆனால் யானைக்கு ஒரு பல் தேய்ந்து விழும் முன்பேயே, புதியதாகப் பல் முளைக்கிறது.

**ஆறு முறை**

இவ்வாறாக ஆறுமுறை இதன் வாழ்நாளில் பற்கள் தோன்றி மறையும். கடைசியாகத் தோன்றும் ஆறுவது பல் யானையின் 33 ஆவது வயதில் முளைக்கிறது.

அந்தக் கடைசிப் பல் தேய்ந்து விழுந்துவிட்டால் யானைகளால் உணவுகளை அரைக்க முடியாமல் ஒரு சில ஆண்டுகளில் இறந்துவிடும்.

யானையின் முகத்தில், துதிக்கையின் இருபக்கங்களிலும் தந்தங்கள் நீண்டு இருக்கும். இது என்ன தெரியுமா? நன்கு வளர்ச்சி பெற்ற கொறிக்கும் பற்களே ஆகும். இது ஆசிய இனத்தைச் சேர்ந்த பெண் யானைக்கும் இருக்கிறது.

ஆனால் இது அதன் துதிக்கைகளுக்குள்ளேயே மிகச் சிறந்ததாக வளர்ந்திருக்கும்.

**இரண்டு வகை யானைகள்**

தற்போது ஆபிரிக்க இனம், ஆசிய இனம் என இரண்டு வகையான யானைகள் தான் காணப்படுகின்றன. இவற்றுள் ஆபிரிக்க யானைகள் தான் உருவத்தில் மிகப் பெரியவை. இந்த இனத்தைச் சேர்ந்த ஆண், பெண்- இரண்டிற்குமே மிக நீளமான தந்தங்கள் காணப்படுகின்றன:

இருபது லட்சம் ஆண்டுகளுக்கு முன்பே, யானைகள் இருந்ததாகப் பிராணி நூல் ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள்:

அவற்றுள் கடைசி மூதாதை இனத்தின் பெயர் 'மேமோத்'

**பனிக்கட்டி யானை**

சமீபத்தில் ஸ்சைபீரியாவில் உள்ள பனிக்கட்டியினுள் இந்த 'மேமோத்' உருவம் சிறிதும் பாதிக்கப்படாமல் முழுமையாகக் கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது:

இந்த 'மேமோத்' இனத்தைச் சேர்ந்த யானைகள் முற்காலத்தில் கூட்டம் கூட்டமாகப் பனிப்பிரதேசத்தில் வாழ்ந்திருக்கின்றன:

இவற்றின் உடல் முழுவதும் ஜாடை ஜாடையாக ரோமம் தொங்குவதால், குளிர் உடம்பைத் தாக்காதவாறு போர்வைபோல் அதற்குப் பாதுகாப்புக் கிடைத்திருக்கிறது:

இவ்வகை அமைப்பினால் இந்த யானைக்குவியல் மேல் நம்விலங்குகள் கடற்கரை மேல் படுத்திருப்பதைப்போல சாதாரணமாகப் படுத்து ஓய்வு எடுக்கும்:

இதன் தந்தங்கள் சாதாரணமாகப் பார்க்கும் யானைத் தந்தங்களைப்போல இருக்காது:

அது முன்னோக்கி வளர்ந்து, பின் மேல்நோக்கி வளைந்து மிக அழகாகக்காணப்படும்.

அதன்நீளம் சுமார் மூன்று மீற்றர்:

'பனிப்பிரதேசங்களில் வாழும் இந்த யானைகள் என்ன உணவு சாப்பிடும்?'

தம்தந்தங்களினால் பனிக்கட்டிகளை உடைத்து, அதனுள் இருக்கிற தாவரங்களைத் தின்று உயிர்வாழ்ந்திருக்கின்றன. (எ-4)

# கிரகணத்துக்குத் தப்பிய செயற்கைக்கோள்

இந்தியா; தகவல் தொடர்புக்காக இன்சாட்-1சி என்ற செயற்கைக்கோளை பூமியைச் சுற்றி பறக்கவிட்டுள்ளது அல்லவா?

இந்தச் செயற்கைக்கோள் சூரிய ஒளி மூலம் மின்சக்தியைப் பெறுகிறது.

சூரிய ஒளியைக் கிரகிக்கும் உபகரணங்களில் ஒன்று செயல்படாததால் செயற்கைக்கோளுக்குப் பாதி அளவு மின்சக்திதான் கிடைக்கிறது.

இந்த நிலையில் சென்ற மாதம் சூரியகிரகணம் ஏற்பட்டது.


அப்போது 72 நிமிடங்கள் செயற்கைக்கோளுக்கு சூரிய ஒளி கிடைக்கவில்லை.

இதனால் அது மின்சக்தி கிடைக்காமல் பெரும் பாதிப்புக்கு உள்ளாகாமல் பெரும் பாதிப்புக்கு உள்ளாகலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் எதிர்பார்த்தது போல் பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை.


டியூரோல்®

டியூரோலில் அடங்கியுள்ள இரும்புச் சத்து, உடலில் இரத்த விருத்தியை உண்டுபண்ணி இரத்த சோகை நோயின் அறிகுறிகளான சோர்வு, பலவீனம், மந்தம் என்பனவற்றை இல்லாமற் செய்து ஆரோக்கியமான வாழ்விற்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை வழங்குகிறது.




'செறி' சுவை கொண்ட, வளர்ந்தோருக்கான டியூரோல்®

ஆப்பிள் சுவை கொண்ட பிள்ளைகளுக்கான டியூரோல்®

தினமும் டியூரோல்® அருந்துங்கள், அது சுறுசுறுப்பானவர்களின் பானம்.

சில்லறை விலை ரூ. 37/50 200 மி. லீ. Pfizer சில்லறை விலை ரூ.39/90 200 மி. லீ.

®பைசர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக அடையாளம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி பதவியிலும் பார்க்க உயர்ந்த பதவி எது?



ஜெயவர்த்தன

ஜனாதிபதி பதவி என்பது இப்போது எல்லார் வாயிலும் அடிபடும் ஒரு சொல்லாகி விட்டது.

இரும்புத்திரை நாடான சோவியத் யூனியனில் கூட 'பொம்மை' ஜனாதிபதி முறை போய் 'நிறைவேற்று' ஜனாதிபதி முறை வரப்போகிறது.

நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடக்கும் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் அடுத்த மாதம் எட்டாம் திகதி நடைபெறப் போகிறது.

எமது நாட்டிலும் ஜனாதிபதித் தேர்தல் டிசம்பர் 19ஆம் திகதி நடைபெற உள்ளது.

அதுமட்டுமல்ல 'நான் ஜனாதிபதியாக வெற்றியீட்டினால் இந்த நாட்டின் 1 கோடி 60 லட்சம் மக்களும் தாங்களும் ஜனாதிபதியாகி விட்டதாகக் கருதலாம்'—இப்படி ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிடும் பிரதமர் பிரேமதாச வேறு கூறிவிட்டார்.

ஆகவே 'எல்லோரும் இந்த நாட்டு ஜனாதிபதிகள்' ஆகும் காலம் வந்து கொண்டிருக்கிறதா?

இப்படி மூக்கில் விரலை வைத்து ஆச்சரியப்படாதீர்கள்!

ஜனாதிபதி பதவியைவிட உயர்ந்த பதவி ஒன்று உண்டு இப்படி நாம் கூறவில்லை.



வெங்கட்ராமன்

இந்தியாவின் முதல் ஜனாதிபதியாகப் பணிபுரிந்த ராஜேந்திர பிரசாத் கூறியிருக்கிறார்.

அவர் ஜனாதிபதியாக இருந்தபோது ஒருமுறை நடந்த நிகழ்ச்சி இது.

'மே மாதம்' கடுமையான வெப்பம். ஒரு தண்ணீர்ப் பந்தல் அருகில் பயணிகள் பஸ் ஒன்று வந்து நின்றது.

ஆனால் தண்ணீர்ப் பந்தல் மூடியிருந்தது கண்டு பயணிகள் தாகத்தால் தவித்தனர்.

இதே சமயம் ஜனாதிபதி ராஜன்பாபு அந்த வழியாகக் காரில் வந்தார். காரை நிறுத்தி நிலைமையை அறிந்துகொண்டார். பின்னர் காரை விட்டிறங்கி தனது சாரதியிடம் தண்ணீர்ப் பந்தலின் பூட்டை உடைக்க உத்தரவிட்டார்.



றேகன்

உள்ளே சென்று அவரே தண்ணீர் தருபவரின் இடத்தில் அமர்ந்து பயணிகளுக்கு அரைமணி நேரம் குடிநீர் வழங்கினார்.

இதைக் கண்டு பயணிகளும் மற்றவர்களும் அதிசயித்தனர். மிகப் பெரிய பதவியில் உள்ளவரா?— இப்படிச் செய்வது என்று கூறினர்.

'தாகத்திற்கு தண்ணீர் தரும் பதவி ஜனாதிபதி பதவியைவிட உயர்வானது'— என்று கூறிக்கொண்டே புறப்பட்டார் ஜனாதிபதி ராஜன் பாபு.



கோர்பச்சேவ்

இப்போது தீர்மானியுங்கள் 'எல்லோரும் இந்நாட்டு ஜனாதிபதியாக வரவிருப்பமா?'— என்பதை. (எ-4)

## நேதாஜி முன்னிலையில் மாயாஜால விளையாட்டு

இரண்டாவது உலகப் போரில் ஜப்பானியர்கள் சிங்கப்பூரைக் கைப்பற்றிய நேரம்.

இந்திய தேசிய கீதம் அடங்கிய இசைத்தட்டை எப்படியாவது சிங்கப்பூருக்குக் கொண்டு வந்து தம்மிடம் சேர்ப்பிக்கும் படி தனது நெருங்கிய நண்பரான பி. ஸி. சர்க்கார் என்பவருக்குச் செய்தி அனுப்பினார் நேதாஜி.

பி. ஸி. சர்க்கார் மாயாஜால மன்னர், மந்திரவாதி.

மந்திரவாதி சர்க்காரும் ஆங்கிலேயருக்குத் தெரியாமல் இரகசியமாய் இசைத் தட்டுடன் சிங்கப்பூர் கிளம்பினார். ஆனால் ஆங்கிலேய அதிகாரிகள் எப்படியோ மோப்பம் பிடித்து ரகசியத்தை அறிந்து சர்க்காரை வழியில் மடக்கினர்.

எவ்வளவோ சோதனை செய்தும் அவர்களால் இசைத் தட்டைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

எனவே பயங்கரமான சித்திரவதைக்கு அவர் ஆளானார்.

இசைத்தட்டை மட்டும் அதிகாரிகளால் கண்டு பிடிக்க முடியவில்லை.

யாரோ தவறான தகவல் கொடுத்திருப்பதாக நினைத்த அதிகாரிகள் சர்க்காரை விடுவித்து மன்னிப்பும் கேட்டனர்.

மந்திரவாதியும் சிங்கப்பூர் சென்று நேதாஜியைச் சந்தித்து வழியில் தனக்கு ஏற்பட்ட சோதனைகளைச் சொன்னார்.

நேதாஜியோ 'இசைத் தட்டு வரவில்லை என்றால் பரவாயில்லை. நீங்கள் உயிரோடு வந்து சேர்ந்தீர்களே அதுவே போதும்' என்றார்.

உடனே மாயாஜால மன்னர், 'இசைத் தட்டுக் கொண்டு வரவில்லை என்று யார் சொன்னது? இதோ நீங்கள் கேட்ட இசைத் தட்டு'— என்றவாறே தேசிய கீத இசைத் தட்டை எடுத்து நீட்டினார்

நேதாஜி இன்ப அதிர்ச்சியால் அவரைக் கட்டித் தழுவினார். ★

## சீனாவிலும் 'தலைமுடி' ஆராய்ச்சி

சீனத்தலைநகர் பீகிங்கில் 'தலைமுடி வளர்ச்சி மற்றும் ஆராய்ச்சி மையம்' என்ற பெயரில் ஒரு மருத்துவமனை உள்ளது.

வழுக்கைத் தலையருக்கு முடிவளர இங்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது.

இங்கு சிகிச்சை பெற்றவர்களில் 98 சதவீதம் பேருக்கு முடிவளர்ந்துள்ளது.

வெளி நாட்டுக்காரர்களும் அங்கு சிகிச்சை பெறலாம்.

இதுபற்றி அந்த மருத்துவமனை சார்பில் பத்திரிகையில் அரைப்பக்க விளம்பரம் கொடுக்கப்பட்டுள்ளது. ★

## எரிந்து விழுந்த பறக்கும் தட்டு

செனிகல் நாட்டில் போதால் மாவட்டத்தில் சில கிராமங்களுக்கு உயரே பறக்கும் தட்டு ஒன்று பறந்து சென்றது.

மிக உயரத்தில் சென்ற அதிலிருந்து ஏராளமான புகைவந்தது. பிறகு அந்தப் பறக்கும் தட்டு வெடித்துச் சிதறியது. சிதறிய பாகங்கள் தரையில் விழுந்தன.

விழுந்த பாகங்களை கிராமவாசிகள் சேகரித்து உள்ளூர் அரசு அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர். அந்தப் பாகங்களை நிபுணர்கள் ஆராய்ந்து வருகின்றனர்: ★

# எதிர்கால 'வகுப்பறை' இப்படி இருக்கும்!

அமெரிக்காவில் கலிபோர்னியாவில் பிளாசென்டியா (Placentia) என்னுமிடத்தில் உள்ள புரூக்ஹேவன் ஆரம்பப்பள்ளியின் வகுப்பறை கடந்த ஜூன் வரை சாதாரண வகுப்பறை போலத்தான் இருந்தது. ஆனால், இப்போது அது 'எதிர்காலத்திய வகுப்பறை' என்று வருணிக்கப்படுகிறது.

கரும்பலகைக்குப் பதில் பளபளக்காத வெள்ளைப் பலகைகள் இடம்பெற்றுள்ளன. செயற்கைக்கோளுடன் தொடர்பு கொண்டு தகவல் பெற பள்ளிக்கூரைமீது ஒரு கிண்ணம் இருக்கிறது. மாணவர் ஒவ்வொருவரின் முன்பாகவும் சாய்வுப் பலகை மீது புத்தம் புதிய கம்ப்யூட்டர் உள்ளது. திரையில் தெரிகிற காட்சிகளைத் தேவையான வகையில் மாற்ற ஆசிரியர் முன்பாக ஒரு பொத்தான் உள்ளது.

'ஒரு ஸ்விட்சைத் தட்டினால் போதும்; உலகையே வகுப்பறைக்குள் கொண்டு வந்து விட முடியும்' என்று மாவட்டக் கல்வி சூப்பரின்டெண்ட் கெய்த் லாரிக் (Keith Larick) கூறுகிறார்.



படவிளக்கம்:

அமெரிக்காவில் ஓர் ஆரம்பப் பாடசாலையில் மாணவர் கம்பியூட்டர்களின் உதவியின் கல்வி கற்கின்றனர். பல பாடசாலைகள் கல்வி கற்க நவீன தொழில் நுட்பத்தைப் பயன்படுத்துகின்றன.

### கம்ப்யூட்டர்

'இங்கு கம்ப்யூட்டர்கள் உள்ளபோதிலும் அவற்றுக்குப் பிரதான இடம் அளிக்கப்படவில்லை. இங்கு பயன்படுத்தப்படுகிற நவீன தொழில் நுட்பங்களில் அதுவும் ஒன்று, என கம்ப்யூட்டர் தொலைத் தகவல் தொடர்பு ஒருங்கிணைப்பாளர் கூறினார்.

பள்ளிகளிலும் வகுப்பறைகளிலும் கல்வி போதிப்பதற்கும் கற்பதற்கும் எந்தெந்த நவீன சாதனங்கள் உகந்தவை? எந்தச் சாதனத்துடன் வேறு எந்தச் சாதனத்தைச் சேர்த்துப் பயன்படுத்தினால் சிறந்த பலன் கிட்டும்? தகவல்களைத் தெரிவிக்கப் புதிய முறைகளில் ஆசிரியர்களுக்கு எவ்விதம் பயிற்சி அளிப்பது? எல்லாவற்றிற்கும் மேலாக மாணவர்களின் நலன்கள், சாதனைகள் விஷயத்தில் நீண்டகால விளைவுகள் எத்தகையனவாக இருக்கும் என்ற கேள்விகளுக்குப் பதில் பெறுவது இப் புதிய பரிசோதனையின் நோக்கமாகும்.

புரூக்ஹேவனில் இப்போது ஆசிரியர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். மாணவர்கள் உற்சாகமாக இப் பரிசோதனையில் பங்குபெறுகின்றனர்.

சமீபநாள் வரை வகுப்பறையில் உள்ள மாணவர்கள் அனைவருக்கும் ஆசிரியர் பொதுவாகப் பாடம் நடத்தி வந்தார். புதிய ஏற்பாட்டில், ஆசிரியர் அந்தந்த மாணவருக்கு உரிய வேகத்தில் பாடம் போதிக்க முடிகிறது.

மாணவர்கள் ஒவ்வொருவரின் பாடம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைத் தனித்தனியே கவனித்து ஆலோசனை அளிக்க முடிகிறது. இப்புதிய முறையில், பாடவிஷயத்தில் மாணவர் ஒவ்வொருவர் மீதும் ஆசிரியரின் நேரடிக் கவனிப்பு அதிகமாகவே உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஆசிரியருடன் தொடர்பு

பெற்றோர் விரும்பினால், குறைந்த விலையிலே கிடைக்கிற 'மோடெம்' (தகவல் தொடர்புச்சாதனம்) ஒன்றை வீட்டில் வாங்கி வைத்துக் கொண்டு டெலிபோன் கம்பி இணைப்பு, டெலிவிஷன் பெட்டி ஆகியவற்றின் மூலம் வகுப்பறையுடன் தொடர்பு கொண்டு தங்கள் பிள்ளைகள் பள்ளிக்கு உரியநேரத்தில் செல்கின்றனரா என்பதையும் அவர்களது வீட்டுப்பாடம் (Home work) பற்றியும் அறிந்து கொள்ளலாம். ஆசிரியர்களுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு தாங்கள் கூறவேண்டியதைத் தெரிவிக்கலாம். ஆசிரியர்களிடமிருந்து தேவையான விஷயங்களை அறியலாம். (எ-4)

# உடல் நலம் பேணும் மூலிகைகள்...

மூலிகைகள் மூலம் எப்படி உடல்நலத்தைப் பேணலாம்?

சிவனுக்கு ஏற்றது வில்வ இலை. சக்திக்கு வேப்பிலை. விநாயகருக்கு அறுகம்புல், திருமாலுக்குத் துளசி. பிரமாவுக்கு அத்தி. கங்காதேவி மாவிலை.

எல்லாக் கடவுள்களுக்குமே ஏற்றது வெற்றிலை.

கடவுள்களுக்கே உரிய இந்த இலைகளை சம அளவில் எடுத்து காயவைத்துப் பொடிபண்ணி, காலை மாலை, இரவு மூவேளைகளில் சாப்பிட்டு வரலாம்.

வில்வ இலை நல்ல ஜீரணத்துக்கு ஏற்பாடுசெய்கிறது.

வேப்பஇலை கிருமிநாசினியாக பயன்படுகிறது.

அறுகம்புல் வயிற்றுக் கோளாறைச் சரிசெய்கிறது.

அத்தி இலைநரம்புத்தளர்ச்சி போக்குகிறது. இனவிருத்தி விந்துவை பெருக்குகிறது.

மாவிலை நீரினால் ஏற்படுகிற கெடுதலைப் போக்குகிறது.

துளசி, எலும்பு உறுதிக்குப் பயன்படுகிறது.

இந்த இலைகளை நாங்கள் எங்கேபோய்த் தேடப்போகிறோம் என்று கவலைப்படுகிறவர்கள்மட்டும் வேப்பஎண்ணை, விளக்கெண்ணை, தேங்காய் எண்ணை மூன்றையும் சமஅளவில் ஒரு போத்தலில் கலந்து வைத்துக்கொண்டு காலை ½ மில்லி, இரவு ½ மில்லி சாப்பாட்டுக்கு முன் குடித்துவரலாம்.

அடிக்கடி சளிபிடித்து அவதிப்படுகிறவர்கள் மட்டும் விளக்கெண்ணை தவிர்த்து மற்ற இரண்டு எண்ணைகளை உபயோகிகலாம்.

—சென்னையில் சமீபத்தில் 5 நாள் இயற்கை மருத்துவப் பயிற்சி முகாம் நடந்தது. முகாம் அமைப்பாளர் டாக்டர் மாணிக்கவாசகம் நிகழ்த்திய பேச்சின் ஒரு பகுதியில் இருந்து. (எ-4)

# சொர்க்க வாசலில் வைத்து ஒரு நேர்முகப் பரீட்சை

சொர்க்கலோகம்; நுழைவாயிலில் ஒரு தேர்வு வைத்த பிறகே உள்ளே அனுப்பிக் கொண்டிருந்தார்கள்.

வாசலிலேயே நிற்கவைத்துக் கேள்வி கேட்டபிறகே வந்தவர்கள் உள்ளே அனுமதிக்கப்பட்டனர்.

முதலில் ஒரு மதகுரு வந்தார்.

'நீர் என்ன தொழில் செய்தீர்? சொர்க்கம் புகுவதற்கு உமக்கு என்ன தகுதி இருக்கிறது?'—

மதகுரு: 'நான் வாரந்தோறும் மக்களுக்குக் கடவுளைப்பற்றி உபதேசம் செய்தேன். அப்படியாக 40 ஆண்டுகள் இப்பிரசாரத்தை செய்து வந்தேன்.

மற்றொரு மதகுருவும் அவ்வாறே சொன்னார்.

இருவரையும் சற்று விலகி நிற்கும்படி நுழைவாயில் அதிகாரி சொன்னார்.

இன்னொருவர் உள்ளே வந்தார்.

'நீர் என்ன தொழில் செய்து கொண்டிருந்தீர்!'

வந்தவர், 'நான் மோட்டார் வாகனசாரதியாகத் தொழில் செய்தேன்' என்றார்.

அதிகாரி: 'அப்படியா? உமக்குத்தான் சொர்க்க வாசலில் நுழையத் தகுதி இருக்கிறது. நீர் ஒருவர்தான் உம்பயணிகளுக்கு கடவுளைப் பற்றிய நினைவை உண்டாக்குகிறீர்.

உமது வண்டியில் ஏறுபவர்கள் உயிருக்கு அஞ்சி கடவுளை நினைத்துக்கொள்கிறார்கள்.

40 ஆண்டுகளில் மதகுருமார்கள் செய்த பணியை நீ ஆறுமாதத்திலே செய்திருக்கிறாய்'

—இப்படி அவனை முதலாவதாகச் சொர்க்கத்துக்குள் அனுப்பிவைத்தார்கள். ★

# ஆயுள் நீடிப்பதற்கு ஆனந்தமாக வாழுங்கள்

சோவியத் யூனியனில் உள்ள கொரகதி என்னும் கிராமத்தில் மௌலூத் என்ற வயோதிபருக்கு 131 வயதாகிறது.

இவருக்கு 3 மகன்கள், ஒரு மகள் உள்ளனர்.

மூத்த மகனுக்கு 98 வயதாகிறது.

மௌலூதுக்கு மொத்தம் 167 பேரக் குழந்தைகள் மற்றும் கொள்ளுப் பேரன்கள், பேத்திகள் உள்ளனர்.

இந்தக் கிழவர் இதுவரை மருந்து மாத்திரையே சாப்பிட்டது கிடையாது.

'நான் இவ்வளவு காலம் உயிர் வாழ்வதற்குக் காரணம் எப்போதும் கடுமையாக உழைக்கின்றேன்; புகைபிடிப்பது இல்லை அற்ப விஷயங்களுக்கு எல்லாம் ஆத்திரப்படாதீர்கள் ஒவ்வொரு நாளையும் ஆனந்தமாகக் கழியுங்கள். ஆயுள் நீடிக்கும்— என்று அந்தக் கிழவர் கூறுகிறார். ★

## இமாலய சாதனை

எவரெஸ்ட் சிகரத்தின் மீது 22 மணித்தியாலம் 38நிமிடத்தில் ஏறி ஒருவர் சாதனை புரிந்திருக்கிறார்.

அவரின் பெயர் மார்க் படார்க்.

37வயதான இவர் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்தவர்.

இவர் 5 ஆயிரம் மீற்றர் உயரத்தில் உள்ள அடிவார முகாமிலிருந்து கிளம்பினார்!

ஒரு நிமிடம் கூட ஓய்வு எடுக்கவில்லை.

தென்கிழக்கு சரிவுவழியாக ஏறி எவரெஸ்ட் சிகரத்தை அடைந்துவிட்டார்.

இது ஒரு புதிய சாதனை என்று கூறப்படுகிறது. ★

பஞ்சாமிர்தம் பலாச அமிர்தம்

# சூடாகி வரும் பூமி!

பூமி வெப்பமடைகிறதா?

ஆம் என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

காற்று மண்டலத்தில் சில வாயுகள் அதிகமாக வருவதன் காரணமாக காற்று மண்டலம் உஷ்ணமடைகிறது.

இதன் விளைவாக பூமியும் மெதுவாகச் சூடேறிய வருகிறது

இதை 'கிறீன் ஹவுஸ் எபெக்ட்' (Green House Effect) என்று குறிப்பிடுகிறார்கள்.

இதனால் அடுத்த நூற்றாண்டுக்குள் பூமியின் பருவநிலையில் எதிர்பாராத மாற்றங்கள் ஏற்படும்.

முன் எப்பொதும் இல்லாத அளவு வெள்ளப்பெருக்கு ஏற்படும்.

எனவே இதைத் தடுக்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விஞ்ஞானிகள் எச்சரிக்கை விடுத்திருக்கிறார்கள்;

சர்வதேசக் கருத்தரங்குகளில் எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் சர்வதேச விஞ்ஞானிகள் இந்த எச்சரிக்கையை விடுத்திருக்கின்றனர். ★

## மண்டேலாவுடன் ஒருவர்

நெல்சன் மண்டேலாவுடன் இந்தியர் ஒருவரும் ஆயுள்தண்டனை அனுபவித்து வருகிறார்.

இவரின் பெயர் அகமது கத்ராடா.

இனவெறியை எதிர்த்துத் தென் ஆபிரிக்காவில் போராட்டம் நடத்தியதற்காக 1964 ஆம் ஆண்டு இவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

தற்போது 59 வயது ஆகும்.

அகமது கடந்த 24 ஆண்டுகளாக கேப்டவுன் சிறையில் தண்டனை அனுபவித்து வருகிறார்.

தென் ஆபிரிக்க கறுப்பர் தலைவர் நெல்சன் மண்டேலாவும் இதே சிறையில்தான் வைக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. ★

## 27. 08. 2003இல்

செவ்வாய்க்கிரகம் பூமியைத் தற்போது நெருங்கி வந்துள்ளது தெரிந்ததே.

இது 15 முதல் 17 ஆண்டுகளுக்குள் ஒருமுறை நடக்கக் கூடிய அரிய நிகழ்ச்சி ஆகும்.

கடந்த ஆண்டில் காணப்பட்ட அளவைவிட 7 மடங்கு பெரியதாகக் காட்சி அளிக்கிறது செவ்வாய்க்கிரகம்.

இதேபோன்ற காட்சியை 2003 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27 ஆம் திகதிதான் இனிப் பார்க்க முடியும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடம் பயில்வோம்

ஜி. சி. ஈ. உயர்தர மாணவருக்குரியது:

ஒவ்வொரு ஒழுங்கையும் இந்த வகைப்பட்டியல் விதிப்படி அதற்குகந்த இடங்களில் பொருத்தலாம். உதாரணமாகக் கரப்பான் பூச்சியை எடுத்துக்கொள்க;

இதன் பெயர் பெரிப்ளானட்டா அமெரிக்கானு (Periplanets Americana) என்பதாகும். இப்பெயரில முன் பகுதி (Peinplaneta) பேரினத்தின் பெயராகவும் பின்பகுதி (Americana) இனத்தின் பெயராகவும் அமையும்.

பேரினத்தின் முதலெழுத்து பெரிதாகவும்; இனத்தின் முதல் எழுத்து சிறிதாகவும் எழுதப்படும். ஒரு உயிரியை இப்படி இரு பெயரிட்டு அழைக்கும் முறையை கார்ல்லின்னேயல் (Carl Linnaeus - 1707 - 1778) என்ற ஸ்வீடன் நாட்டு உயிரியல் வல்லுனர் ஆவர்.

அவர் பின்வருமாறு வகைசெய்தார்.-

உலகம் [Kingdom]
கிளை உலகம் [Sub - Kingdom]
தொகுதி [Phylum]
வகை [Class]
வரிசை [Order]
குடும்பம் [Family]
பேரினம் [Genues]
இனம் [Species]

உதாரணமாக முதலில் சரப்பான் பூச்சியையும், பச்சைத் தவளையையும் கவனிப்போம்:-

**கரப்பான் பூச்சி:**
உலகம்:- விலங்குலகம்
பிரிவு:- முதுகு நாண் அற்றவை
தொகுதி:- கணுக்காலிகள் [Arthropoda]
வகை:- பூச்சிகள் [Insects]
வரிசை:- ஆர்த்தாப்டீரா [Orthoptera]
குடும்பம்:- ப்ளாட்டிடே [Blattidae)
பேரினம்:- பெரிப்ளானட்டா [Periplaneta]
இனம்:- அமெரிக்கானு [Americana]

**குளங்களில் இருக்கும் பச்சைநிறத் தவளை:**
உலகம்:- விலங்குலகம்
பிரிவு:- முதுகுநாணுள்ளவை
தொகுதி:-முதுகுநாணுள்ளவை
கீழ்த்தொகுதி:- முதுகெலும்புள்ளவை [Vertebrata]
அல்லது தலையுடையன [Craniatea]
வகை:- இருவாழ்விகள் [Amphibia]
வரிசை:- ஆனூரா [Anura] வாலற்றவை
குடும்பம்:-ரானிடே [Ranidae]
பேரினம்:- ரானு [Rana]
இனம்:- ஹெக்ஸடாக்டிலா [Hexadactyla]

**பின்வரும் எட்டு உயிரினமும் முதலில் இடம்பெறும்:**

**1. யூக்ளினு விரிடிஸ்**
உலகம் — விலங்குலகம்
பிரிவு — முதுகுநாணற்றவை
தொகுதி — ப்ரொட்டோசோவா
வகை—மேஸ்திசோகக்போரா அல்லது ஃப்ளெநெல்டோ
வரிசை — யூக்கினிடா
குடும்பம் — யூக்ளிணடே
பேரினம் — யூக்ளினு
இனம் — விரிடிஸ்

**2. ஹைட்ரா வல்ராஸ்**
உலகம் — விலங்குலகம்
பிரிவு — முதுகுநாணற்றவை
தொகுதி — நடேரியா, ஸீலண்டிரேட்டா
வகை — ஹைட்ரோஸோவா
வரிசை — ஹைட்ராய்டியா
குடும்பம் — ஹைட்ரிடே
பேரினம் — ஹைட்ரா
இனம் — வல்காரிஸ்

**3. டேனியா சோலியம் (நாடாப்புழு)**
உலகம் — விலங்குலகம்
பிரிவு -- முதுகுநாணற்றவை
தொகுதி — ப்ளாட்டிஹேல்மிந்தஸ்
வகை — ஸெஸ்டோடா
வரிசை — டேனியாய்டியா
குடும்பம் — டேனிய்டே
பேரினம் — டேனியா
இனம் — ஸோலியம்

**4. ஆஸ்காரிஸ் லம்ப்ரிகாய்டஸ் (உருளைப்புழு)**
உலகம் — விலங்குலகம்
பிரிவு — முதுகுநாணற்றவை
தொகுதி — நெமட்ஹெம்மின்தஸ்
வகை — நெமட்டோடா
வரிசை — ஆஸ்கராய்டியா
குடும்பம் — ஆஸ்காரிடே
பேரியம் — ஆஸ்காரிஸ்
இனம் — லம்ப்ரிகாய்ட்ஸ்

**5. மெகாஸ்கோலக்ஸ் மாருதி (மண்புழு)**
உலகம் — விலங்குகள்
பிரிவு — முதுகுநாணற்றவை
தொகுதி — அன்னிலிடா
வகை — கீட்டோபோடா
வரிசை — டெர்ரிகோலே
குடும்பம் — மெகாஸ்சோலஸிடே
பேரினம் — மெகாஸ்சோலக்ஸ்
இனம் — மாருதி

**6. பெரிப்ளானட்டா அமெரிக்கானு (கரப்பான் பூச்சி)**
உலகம் — விலங்குலகம்
பிரிவு — முதுகுநாணற்றவை
தொகுதி — ஆர்க்ரோபோடா
வகை — பூச்சிகள்
வரிசை—ஆர்க்காப்டீரா
குடும்பம் — ப்ளாட்டிடே
பேரினம் — பெரிப்ளானட்டா
இனம் — அமெரிக்கானு

**7. லெமல்லிடன்ஸ் (கிளிஞ்சல்கள் அல்லது நன்னீர் மட்டிகள்)**
உலகம் — விலங்குலகம்
பிரிவு — முதுகுநாணற்றவை
தொகுதி — மொலஸ்கா
வகை — பெலிஸிபோடா, பைவால்வியா
வரிசை — யூலெமல்லிப்ரான்கியேட்டா
குடும்பம் — யூனியாணடே
பேரினம் — லெமல்லிடன்ஸ்
இனம் — லெமல்லிடன்ஸ்

**8. ஆஸ்டீரியஸ் ரூபன்ஸ் (நட்சத்திரமீன்)**
உலகம் — விலங்குலகம்
பிரிவு — முதுகுநாணற்றவை
தொகுதி — எசைனோடர்மேடா (முட்டே தாலிகள்)
வகை — ஆஸ்டீரியாய்டியா
வரிசை — போர்ஸிபுலேட்டா
பேரினம் — ஆஸ்டீரியஸ்
இனம் — ரூபன்ஸ்

தொகுப்பு: ஜெ ரவி

# உலகியலையும் சமயத்தையும் சிறப்பித்த பண்டைத் தமிழ்ப் பேரிலக்கியங்கள்

க. பொ. த. உயர்தரம் தமிழ் பகுதி II வினுவிடை இலக்கிய வரலாறு.

தயாரிப்பு: திரு. தாஸ்

**(01)சோழர்கால இலக்கியப் பண்பினைக் குறிப்பிட்டு ஆராய்க?**

தமிழ் இலக்கியம் பல்லவர் காலத்திலும் பார்க்க சோழர் காலத்திலே பெருவளர்ச்சியடைந்துள்ளது. களபிரரிடமிருந்து தமிழ் நாட்டைக் கைப்பற்றி ஆண்ட பல்லவ மன்னர்கள் போரிலும் தம் ஆட்சியை நிலைநிறுத்தலிலும் தம்முடைய கவனத்தைச் செலுத்திலரேயன்றி நாட்டின் நலத்தில் அவ்வளவு அக்கறை செலுத்தவில்லை. அதனுல் அவராட்சி தமிழ் நாட்டிற்கு பெரும்பயன் அளித்திடுவது. இதனுல் அச்சமுதாயம் சிறப்பாக வளர்ச்சி அடையவில்லை. அந்நிலையில் சமுதாயத்தை சிறப்பிக்கும் இலக்கியங்களும் மன்னரைப் புகழ்ந்து பாடும் இலக்கியங்களும் தோன்றுவது அரிதாகும்.

ஆனுல் சோழர் காலச் சூழ்நிலை இதற்கு முரண்பட்டதாகும். சோழ மன்னர்கள் நாட்டு நலன் கருதி ஆட்சி செய்தமையால் நாட்டில் உள்ள வறுமையும் பிணியும் ஓடிமறைந்தது. செல்வம் மலிந்தது. கலை கலாசாரங்கள் சிறப்பாக வளர்ந்தன. இத்தகைய சமுதாயச் செழுமை காரணமாக அக்கால மன்னர்களை புகழ்ந்து பாடும் இலக்கியங்கள் பெருந்தொகையான இலக்கியங்கள் தோற்றம் பெற்றன.

'கோமான் சென்ற லைதலுமே
கொங்கணிந்த மலர்தூவி
தேமானின் எதிர் கொள்ள
சிறுகுயில் போற்றிசைந்தனவே
வாள்மேன் தேர்மன்னனுக்கு
மங்களம் சொல் மகளிரைப்
போல்
தூ மாண்ட விளங் கொடி
தந்தளிர்க்கையால்
தொழுதனவே'
[நாககுமாரகாவியம்]

மேலும் சங்ககாலத்திலும் தமிழர்தம் சமுதாய வாழ்வு சிறப்பாக இருந்ததனுல் மன்னரைப் புகழ்ந்து பாடும் இலக்கியங்கள் தோற்றம் பெற்றதை நாம் இதற்கு ஒப்பிடலாம்.

மேலும் ப. காலத்தில் சமுதாய நிலைப்பாடு காரணமாக சமுதாய வாழ்வை சிறப்பித்துக்கூறும் இலக்கியங்கள் அவ்வளவு தோன்றவில்லை எனலாம். அக்காலப் பகுதியில் வாழ்ந்து சமண பௌத்த சந்நியாசிகள் செய்துவந்த சமயப் பிரச்சாரமும் உலக வாழ்க்கையால் மனிதன் பெறும்பெறுபேறுகட்கும்சுகத்கும் முரண்பாடாகக் காணப்பட்டது. இத்தகைய காரணங்களினுல் பல்லவர் காலத்தில் உலகியல் சிறப்பாக அமையவில்லை. உலகியல் வாழ்க்கையில் ஈடுபட்டவர் போல் காணப்பட்ட சுந்தரமூர்த்தி நாயனுரும் 'வாழ்வாவது மாயம் மண்ணுவது திண்ணம்' என்று கூறியிருப்பது இங்கு நோக்கத்தக்கது.

ஆனுல் சோழப்பெருமன்னராட்சிக்காலத்தில் நாடு நன்னிலை பெற்றிருந்தமையால் சமுதாய வாழ்க்கை சிறப்புற்று விளங்கியது. இதனுல் உலகியலை சிறப்பித்துக்கூறும் இலக்கியங்கள் பெருமளவு தோன்றலாயின.

கம்பராமாயணம், சிவகசிந்தாமணி போன்ற நூல்களிலும் மன்னர் புகழ்கூறும் இலக்கியங்களிலும் உலகியல் சிறப்பிக்கப்படுவதைக் காணலாம்.

கேவல மடந்தை என்னும்
கேள்கிழர் நெடிய வாட்கள்
பூவலாமுலைக் கண்ணி
பொன்னெரு பாகமாக
காவலன் தானேர்
கூறுக் கன்னிமையாது புல்லி
மூலகுச்சி யின்பக்கடலினுள்
மூழ்கினுனே.

என்ற பாடல் இப்பண்பிற்கு உதாரணம்.

உலகியல் விருத்தி சோழர் காலத்தில் சமய வளர்ச்சிக்கு தடையாக அமையவில்லை. என்பதை இக்கால வரலாறு தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. மக்கள் உலக காரியங்களில் ஈடுபட்டபோதும் இறை வழிபாட்டைக் கைவிடவில்லை. நாட்டு நலன் கருதி ஆட்சிபுரிந்த மன்னர் சமய வளர்ச்சிக்குப் பல்வேறு பணிகளை ஆற்றின.

மன்னர் காட்டிய வழியில் மக்களும் சென்றதால் உலகியலும் இறைவழிபாடும் முரண்படாதவகையில் தமிழ் நாட்டிலே தழைக்கலாயின. அக்காலத்தில் எழுந்த பேரிலக்கியங்களில் உலகியலும் சமயமும்சிறப்பிக்கப்பட்டன.

சோழர்காலத்தைக் காவிய உற்பத்திக்காலம் எனக் குறிப்பிடலாம். தன்னிகரில்லாத தலைவன் ஒருவனுடைய வாழ்க்கை வரலாற்றை எடுத்துக் கூறுவதன்மூலம்மக்களுக்கு தேவையான அறம்,பொருள், இன்பம், வீடு எனும் 4 வகைக் குறிக்கோளையும் நாட்டு நகர வர்ணனைகளுடன் சிறப்பித்துக் கூறுகின்ற இலக்கிய வகையே காப்பியம் எனப்படும்.

இக்காப்பியங்கள் பெருங்காப்பியம், சிறுகாப்பியம் என இரண்டு வகைப்படுத்தப்படும். தன்னிகரில்லா தலைவனுடைய வாழ்க்கையோ அறம், பொருள், இன்பம், வீடு எனும் 4 வகைக் கோட்பாடுகளையும் எடுத்துக் கூறுகின்றன. காப்பியங்கள் பெரும் காப்பியம் எனவும் கோட்பாடுகளில் ஒன்ருே பலவோ குறைந்து காணப்படின் சிறுகாப்பியம் எனவும் அழைக்கப்படும்.

சீவகசிந்தாமணி, கம்பராமாயணம் போன்றன பெ. கா. ஆகும். நாககுமார காவியம், உதயன காவியம், யசோதர காவியம் போன்றன சிறு காப்பியங்களாகும். இவ்வாறு காவியங்கள் பல தோன்றிய இலக்கியக் காலப்பகுதி சோழர் காலமேயாகும்.

சோழர் காலத்தில் வைதீக மதங்கள் அனைத்தும் போற்றப்பட்டதால் வ.மொ. தமிழ் நாட்டில் பரவத்தொடங்கியது.

அந்தவகையில் காப்பியமும் வட இலக்கியத்தை சார்ந்து தமிழில் தோன்றிய ஓர் இலக்கிய வகையே இக் காப்பியம் எனலாம்.

ப. காலத்தில் தோற்றம் பெருத காவியங்கள் இக் காலத்தில் அதிகமாக தோற்றம் பெற்றமைக்கு அக்கால சூழ்நிலையே காரணமாயிற்று எனலாம்: அறம், பொருள், இன்பம், வீடு என்ற நால் வகைப் பொருள்களையும் கூறுகின்ற நோக்கை இக்காவியங்கள் கொண்டிருந்தாலும் தமது மன்னரையும் தமது நாட்டின் சிறப்பையும் எடுத்துக்கூற விளைவதே இக்காலப் புலவர்களின் பெரு நோக்காய் இருந்தது. இதன் காரணத்தினுலேயே மன்னராட்சி நலிவுற்று ப. காலத்தில் இக்காப்பியங்கள் தோன்றவில்லை எனலாம்.

சோழர் காலத்தில் மன்னருடைய ஆட்சித்திறன் மேலோங்கிக் காணப்பட்டதால் அவர் புகழ்கூறும் நோக்காக இக்காலத்தில் பல காவியங்கள் எழுந்தன. இக்காலக் காப்பியங்கள் வடநாட்டு மன்னரது கதையைக் கூறுவதாக அமைந்தபோதும் தங்களுடைய நாட்டுமன்னரது புகழையும், வீரத்தையும், நாட்டுச்சிறப்பையும் அதிகமாக வெளிப்படுத்தும் தன்மை இக் காவியங்களில் விரவிக் காணப்பட்டது.

இராமனது அயோத்தி நகரை வர்ணிக்க வந்த கம்பன் 'காவிரி நாடானு கழனி நாடு' என்று சொல்லிப்பேரயிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இதிலிருந்து அக்காலப் புலவர்கள் நம்முடைய தாய் நாட்டின்மீதும் தம்முடைய மன்னர்கள்மீதும் கொண்டிருந்த மதிப்பையும், பண்பையும், அன்பையும் தெரிந்து கொள்ளமுடிகிறது.

பல்லவர் காலத்தைவிட சோழர் காலத்தில் வடமொழியின் செல்வாக்கு கூடுதலாக இருந்தது. சோழர் கால மன்னர்கள் கருங்கற்கோயில்களைக் கட்டியதோடு பல்வேறு ஊக்குவிப்புப் பணிகளையும் மேற்கொண்டவை. வடமொழிசமய மரபும் அவர்தம் கிரியைமுறைகளும் தம்நாட்டில் பெருக வேண்டுமென்று விரும்பிய சோழர்கால மன்னர்கள் வடமொழியை ஊக்குவிப்பதாக அக்கல்வி நிலையங்களுக்கு நிலங்களையும் மானியங்களாக வழங்கினுர்கள். இவ்வாறுவ. மொழியின் செல்வாக்கு பெருகியதனுல் வ. மொ. இலக்கியங்களை தழுவி பெருந்தொகையான காவியங்களும், பிரபந்தங்களும், சி. இலக்கியங்களிலும் புராணங்களும் இக்காலத்தில் தோற்றம்பெற்றன.

வடமொழி மரபைத் தழுவி பெருந்தொகையான இலக்கியங்கள் எழுந்தது இக் காலத்திற்குரிய ஓர் சிறந்த இலக்கியப் பண்பாகும்.

சோழர் காலத்தில் வடமொழி ஆதிக்கம் காரணமாக வடமொழிக் கதை தழுவல் சார்ந்து எழுந்த இலக்கியங்களில் தமிழ் இலக்கிய மரபுக்கு புதிதாக இலக்கிய யாப்பமைதிகள்பதமிழ்மொழியில் கலக்கத்தொடங்கின. இதனுல் இவற்றிற்கு இலக்கணம் வகுக்கின்ற தண்டியலங்காரம், யாப்புருங்காக் காரிகை போன்ற புதிய இலக்கண நூல்கள் தோன்றின. இவ்வாறு புதிய இலக்கண நூல்களின் தோற்றமும் இக்காலத்துக்குரிய இலக்கியப் பண்புகளில் ஒன்ருகும். பல்லவர் காலத்தில் வழக்கில் இருந்த அகவல்,வெண்பா,கவி, வஞ்சி எனும் 4வகைபாவினங்களையும் சார்ந்தெழுந்த துறை, தாழிசை, விருத்தம் என்ற பாவினங்கள்சோழர்காலத்தில் புதியதொருகோணத்தில்பயன் படுத்தப்படுகின்றன. இத்தகைய பாவினங்கள் ஓசை நயம் மிகுந்ததாக இருந்ததோடும் மன உணர்வுகளைப் பிரதிபலிக்கச் சிறந்ததாகவும் காணப்பட்டது.

இதன் காரணத்தால் இக் காலப் புலவர்கள் பக்தியுணர்களை வெளிப்படுத்துவதற்கு இத்தகைய பாவினங்களைக் கையாண்டார்கள். இவ்வாறு பக்தி உணர்வுகளை வெளிப்படுத்த எழுந்த இப்பாவினங்களை சோழர் காலப் புலவர்கள் உலகியல் சார்ந்த வாழ்வினை சித்திரிப்பதற்குப் பயன்படுத்தினுர்கள். இவ்வாறு செய்யுள் இலக்கியத்தை இயற்றமிழ் இலக்கியத்திற்குப் பயன்படுத்தியமை இக்கால இலக்கியப் பண்புகளில் ஒன்ருகும்.

இவ்வாறு புதியகோணத்தில் சோழர்கால இலக்கியமானது சென்ருலும் அவர்கள் பழைய புலவர்களையும் அவர்களது நூல்களையும் போற்றி வந்தனரென்பதற்கு எட்டுத் தொகை பத்துப்பாட்டுப் போன்றஇலக்கிய நூல்களுக்கும் இலக்கண நூல்களுக்கும் இக்காலத்தில் எழுந்த உரை நூல்களே ஆதாரமாகின்றன.

இதைவிட சோ. காலப் புலவர்கள் பல்லவர்கள் கால இலக்கியங்களிலும் அதிக ஈடுபாடுடையவர்களாக இருந்தார்கள் என்பதற்கு நம்பியாண்டார் நம்பி திருமுறைகளையும் நாதமுனி நாலாயிர திவ்விய பிரபந்தங்களையும் தேடித் தொகுத்தமை சான்றுகிறது. இவ்வாறு பழைமையைப் போன்றும் பரந்த இலக்கியப்பண்பு காரணமாகத் தமிழ் கூறும் நல்லுலகிற்கு பெருமையைக் கூறும் பக்தி இலக்கியங்களை சோ. கா. பெற்றுக் கொடுத்திருக்கிறது எனலாம்.

சோழர்கால இலக்கியங்கள் இதற்கு முந்திய காலங்களை விடப் புதியதோர் பாதையில் வீறு நடை போட்டது என்பதை முன்பே குறிப்பிட்டோம். அந்த வகையில் இலக்கிய ஆராய்ச்சித் துறையானது தமிழிலக்கிய வரலாற்றில் இக்காலத்திலேயே தோற்றம் பெறுகின்றது எனலாம். பெரியபுராண ஆசிரியர் சேக்கிழாரவர்கள் தனக்கு முன்னர் காலத்தில் வாழ்ந்த 64 சிவனடியார்களின் வாழ்க்கையை ஆராய்ந்ததோடு அவர்தம் நூல்களில் இலக்கியப் பண்புகளையும் இந்நூலில் ஆங்காங்கு குறித்துக் காட்டியது நோக்கத்தக்கதாகும்.

மேலும் பல்லவர் காலத்தில் எழுந்த பக்தி இலக்கியங்களில் கூறப்பட்ட விடயங்களுக்கு ஆதாரமளிக்க வேண்டியிருந்ததால் தத்துவ விளக்கங்களைக் கூறுகின்ற தத்துவ நூல்கள் பல இராமானுஜர், மெய்கண்டார் போன்ற அறிஞர்கள் இக்காலத்தில் எழுதப்பட்டது. இவ்வாறு தத்துவ நூல்கள் தோன்றியதும் சோழர் காலத்திற்குரியதோர் இலக்கியப்பண்பாகும்.

**சுருக்கக் குறிப்புகள்:**

1) மன்னர் புகழ் பாடும் இலக்கியங்கள் பெருமளவு எழுந்தன.

2) உலகியல் சார்பான இலக்கியங்கள் சமய இலக்கியங்களிலும் உலகியல் சித்திரிக்கப்பட்டது.

3) வடமொழிக்கல் விருத்திய டைந்தமை புராணங்கள் பிரபந்தங்கள் காவிய வகைகள் தோன்றின. காவியங்களின் தோற்றம் குறிப்பிடத்தக்கது.

4) வடமொழியைத் தழுவி எழுதப்பட்டமையான வடமொழி இலக்கண நூல்கள் தோன்றின.

5) இலக்கியம் ஓர் புதுவழியில் சென்றது. பல்லவர்கால செய்யுள் மரபு இயற்றமிழ் இலக்கியத்திற்கு பயன்படுத்தப்பட்டது.

6) பல்லவர்கால பக்திப் பாடல்கள் குறிப்பிட்ட விடயங்களுக்கு ஆதாரமாக தத்துவ நூல்கள் தோன்றின.

7) பழைய இலக்கியப் பண்பும் பழைய இலக்கியத்தில் உள்ள பெரும் பண்பு இலக்கண உரைகள் தோன்றியமை.

8) புதிய இலக்கிய ஆராய்ச்சி (பெரியபுராணம்).

# மாவீரன் அலெக்ஸாண்டரின் வாழ்வில் ஒருநாள்....

மாவீரன் அலெக்ஸாண்டர் ஒருநாள் கடற்கரைப் பக்கமாக தன் குதிரைமீது தனித்துப் பவனி வந்தான் அவ்வேளையில்...

ஒரு ஞானி கடலைப்பார்த்து ஆனந்தமாகபடுத்துக் கொண்டு சந்தோஷத்தால் பூரித்துக் குலுங்குவதைப் பார்த்தான்.

அந்த ஞானியிடம் வந்த அலெக்ஸாண்டர் ஒரு நிமிடம் நின்று பார்த்தான்.

ஞானிக்கு அலெக்ஸாண்டர் வந்திருப்பது தெரியும் ஆனுல் எழுந்திருக்கவில்லை. அலெக்ஸாண்டருக்கு மகாகோபம். ஆனுல் அதனை அடக்கிக் கொண்டு...

'துறவி அவர்களே அலெக்ஸாண்டர் வந்திருக்கிறேன்' என்ருர்.

'தெரியும்' என்ருர் துறவி'

'உலகிலுள்ள பல நாடுகளை வென்றவன். இன்னும் மீதியாக உள்ள நாடுகளையும் வெல்லப் போகிறவன்' என்ருன் அலெக்ஸாண்டர். அதற்கு துறவி.

'மகிழ்ச்சி. அந்த நாடுகளையும் வென்றுவிட்டு என்ன செய்யப்போகிருய்?' என்று கேட்டார்.

'மாவீரன் என்று பெயருடன் உலாவருவேன்' என்ருன் அலெக்ஸாண்டர். பிறகு?' என துறவி வினவ

'பின் பிடித்த நாட்டை வேடிக்கை பார்ப்பேன். அதன் பின் ஆனந்தமாக ஊர்திரும்புவேன்' என்ருன் அலெக்ஸாண்டர்.

'பின்' என துறவி மீண்டும் வினவ 'நிம்மதியாகப் பொழுதைக் கழிப்பேன்' என விடையீந்தான் அலெக்ஸாண்டர்.

'உலக நாட்டையெல்லாம் வென்று... அவற்றை சிற்றரசனிடம் கொடுத்துவிட்டு மீண்டும் நாடு திரும்ப உனக்கு எத்தனை ஆண்டுகள் ஆகும்?' என்று வினவினுர் துறவி.

'பத்தாண்டு ஏன் இருபதாண்டுகள் கூட ஆகலாம்' என்ருன் அலெக்ஸாண்டர்.

அதற்குப் பிறகு தானே உனக்கு நிம்மதிவரும்' இது துறவியின் வினு? 'ஆம்' என்ருன் மாவீரன். அதற்குத் துறவி...

'அந்த நிம்மதியை இப்பொழுது நான் ஆனந்தமாக பெற்றுக்கொண்டிருக்கின்றேன். இதற்காக நான் ஊர் சுற்றவில்லை, சண்டை போடவில்லை காலத்தையும் நான் வீணுக்கவில்லை' என்றதும் அலெக்ஸாண்டர் மனந்தெளிந்து துறவியின் காலில் விழுந்தான்.

— தி. தவபாலன்

## நாம் யார்?

பஞ்சைகள் அல்ல நாம்
பிஞ்சுகள் —
பள்ளிக் குஞ்சுகள் அல்லநாம்
பாடும் பறவைகள் —
சிறகு முளைக்கும் பறவைகள் அல்லநாம்
எதிர்காலச் சிங்கங்கள்—
தொட்டிலில் ஆடும் விட்டில்கள் அல்ல நாம்
கட்டி ஆளும் வேந்தர்கள்—
பட்டாம் பூச்சிகள் அல்ல நாம்
பங்காளிகள் —
தொட்டாற் சிணுங்கிகள் அல்ல நாம்
எட்டாக் கனிகள் —
இற்று விழும் சாலை மரங்கள் அல்ல நாம்
இளம் சுடர்கள் —

— [illegible] —

## விஞ்ஞானிகள் வரிசையில்....

இவர் உலகப் புகழ்பெற்ற இந்திய பௌதீகவியலறிஞர். அணுக்களைப் பற்றியும், ஒளியைப்பற்றியும் ஆராய்ந்து பல உண்மைகளைக் கண்டறிந்தவர்,

இராமன் விளைவு (Raman Effect) என்பதைக் கண்டு பிடித்தார். ஒளியைப் புக விடக்கூடிய திண்ம அல்லது திரவ அல்லது வாயு ஊடாக ஒளியைச் செலுத்தும்போது அது சிதறடைந்து அவற்றின் அலைநீளம், அதிர்வெண் என்பனவற்றில் மாற்றமேற்படுகின்றது.

இந்த மாற்றமே 'இராமன் விளைவு' எனப்படுகின்றது. பௌதீகவியல் துறையில் இவர் மேற்கொண்ட ஆய்வுகளுக்காக 'நோபல் பரிசு' பெற்றவர்.

தொகுப்பு: ம. கியூமன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மைக் கலைஞன் சமூக முன்னேற்றத்துக்கு வழிகாட்டுபவனாக இருக்க வேண்டும்!

**20ஆம்** நூற்றாண்டில் கலையுலகில் முதன்மைபெறும் கலை வடிவம் திரைப்படம் ஆகும்.

மக்களினது எண்ணங்கள் எதிர்பார்ப்புக்கள் பிரச்சினைகள், அவற்றுக்கான தீர்வுகளை சுவை உணர்வுடன் (இன்ப மூட்டுதல்) எடுத்துக் காட்டுகின்றது திரைப்படக்கலை.

இசை, நடனம், ஓவியம் போன்ற கலைகளை உள்ளடக்குவதாலேயே. இது இன்று முதன்மை பெறுகிறது இது இன்று கூட்டுக்கலையாக இருப்பதோடு குறுகிய நேரத்துள் சுவைஞர்களை திருப்திப்படுத்தக் கூடிய நவீனத்தன்மையையும் (தொழில் நுட்ப மேம்பாடு) இது பெற்றிருக்கிறது.

எனவே பல்லாயிரக்கணக்கான மக்களைச் சாருகின்ற இத் திரைப்படங்கள் ஒரு நாட்டு மக்களது கலை, கலாசார வளர்ச்சியில் பெரும் பங்கு வகிக்கிறதெனலாம். ஆனால் தென் இந்திய தமிழ்த் திரைப்படங்களின் இன்றைய போக்குத் தமிழ்க் கலாசார மேம்பாட்டிற்கு உதவுவதற்குப் பதிலாக அதனைச்சிதைக்க முனைகிறது என்பது வருத்தத்திற்குரிய உண்மையாகும்.

பெரும்பாலான தமிழ்த் திரைப்படங்கள் தமிழர் கலாசாரத்தைச் சீர்திருத்துவதற்குப்பதிலாக மேலைத்தேய கலாசார போதைகளுக்கு அடிமைப்படுத்திச் சீரழிப்பதையே அவதானிக்க முடிகிறது. இத்தகைய கலாசார சீரழிவுக் காட்சிகளைச் சில வகையீடுகளாக நோக்கலாம்.

1. பாலியல் சம்பந்தமானவை.

2. யதார்த்தமற்ற கற்பனை மயமானவை.

3. சமூகவிரோத செயல்களை ஊக்குவிப்பவை.

**1. பாலியல் சம்பந்தமான காட்சிகள்:**

வியாபார நோக்கில் இன்று வெளியாகும் பெரும்பான்மையான படங்களில் பாலியல் காட்சிகள் நிறைந்து காணப்படுகின்றன. (கவர்ச்சி நடனங்கள் விரசமான முதலிரவுக் காட்சிகள், குளியலறைக் காட்சிகள்) என்பன இதனுள் அடங்கும். இளவயதினரை போதையூட்டி மயக்கும் இக் காட்சிகள் இளவயதினரை உளவியல் ரீதியாகப் பாதிப்பதோடு பாலியல் சம்பந்தமான குற்றங்கள் பெருகுவதற்கும் காரணமாகிறது. குடும்பத்தினர் எல்லோரும் சேர்ந்து பார்க்க முடியாத அளவுக்கு இவை அதிகரித்துள்ளமை இங்கு நோக்கத்தக்கதாகும்.

**2. யதார்த்தம் இல்லாத கற்பனைக் காட்சிகள்:**

தமிழர் பண்பாட்டில் சிறப்பிடம் பெற்றவை காதலும் வீரமும். சங்க இலக்கியங்கள் அவை பற்றி வெகுவாகப் புகழ்கின்றன. இவை எல்லாம் கற்பனை தானோ என எண்ண வைக்கின்றது. தற்போதைய தமிழ் திரைப்படங்கள். குறிப்பாக ஒரு இளைஞனுக்கும் யுவதிக்கும் காதல் வந்தால் அவர்கள் வீதியிலே ஓடிப்பிடித்து விளையாட வேண்டும், அல்லது வானத்தில் பறக்க வேண்டும். இவை எல்லாம் உண்மையாக நடக்குமாயின் அந்த நினைப்பே வேடிக்கைக்குரியது.

அடுத்தது வீரம். வீரம் என்றால் என்ன? பத்துப்பன்னிரண்டு பேரை ஒருவர் தானே அடித்துப் போட வேண்டும். மாடியில் இருந்து பறக்கவேண்டும். எம். ஜீ. ஆர். மரபை ரஜனி, சத்திய ராஜ், அர்ஜுன், சரண்ராஜ், போன்றவர்கள் இன்றும் பேணிக்காத்து வருகின்றனர். இத்தகைய யதார்த்தமற்ற காட்சிகள் தமிழ் திரைப்படத்தினை கேலிக்கூத்தாக்கி எமது மரபுகளைக் கொச்சைப் படுத்தவே செய்யும்.

**3. சமூகவிரோத செயல்களை ஊக்குவிக்கும் காட்சிகள்:**

தமிழ் திரைப்படங்களில் சமூகவிரோத செயல்களை ஊக்குவிக்கும் காட்சிகள் நிறைந்தாகவுள்ளன. (தெருச் சண்டைகள், கொலைகள், கற்பழிப்புக் காட்சிகள்) நவீன பாணியில் நடத்தப்படும் திருட்டுக்கள் போன்றவற்றை இங்கு குறிப்பிடலாம்.

இவற்றை அழிப்பதாகச் சிவப்பு முத்திரை குத்திக் கொண்டு வரும் படங்களே இவற்றை மறைமுகமாக ஊக்குவிக்கின்றன என்பது மறக்கமுடியாத உண்மையாகும். இவை சில சமூகவிரோத சக்திகளுக்கெதிரான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தாலும் தனிமனிதனது போராட்டத்தை தீர்வாக வைப்பதால் நடைமுறையில் சாத்தியமானதல்ல. ஜீவா, நல்லவனுக்கு நல்லவன், புலி, இரவுப் பூக்கள் போன்ற ஏராளமான படங்கள் இந்தப் பாணியில் அமைந்தனவாகும்.

எனவே இவை இளைஞர் மத்தியில் சமூகவிரோத செயல்களை வளர்க்க முற்படுமே தவிர நல்ல விளைவுகளை ஏற்படுத்தும் எனக்கூறமுடியாது. நூறாவது நாள் படம் பார்த்து சென்னையில் 9பேரைக் கொலை செய்த நபர் பற்றிய செய்தி நாமறிந்ததே.

இத்தகைய படங்களுக்கெதிரான கண்டனக் குரல்கள் முற்போக்காளர் மத்தியில் இருந்து எழாமல் இல்லை.

இதற்குப் படத்தயாரிப்பாளர்கள் தருகின்ற பதில் ரசிகர்கள் எதிர்பார்ப்பதையே நாம் தருகிறோம். என்பதாகும்.

யார் இந்த ரசிகர்கள்? அந்த ரசிகத் தன்மையை உருவாக்கியவர்கள் யார்? இக் கேள்வி அவர்கள் தம்மைத் தாமே கேட்க வேண்டியனவாகும். ஓர் உண்மையான கலைஞன் தனது கலைப்படைப்பினூடாக சமூக விழுமியங்களைச் சித்திரிப்பதோடு அதனுடைய முன்னேற்றத்திற்கும் வழிகாட்டுபவனாக இருக்க வேண்டும்.

எனவே இவை வெறும் வியாபாரக் குப்பைகளே என்பதில் சந்தேகம் இல்லை. மேலும் ரசிகர்கள் அத்தகைய படங்களை தான் விரும்புகிறார்கள் என்பது ஏற்றுக்கொள்ளக் கூடிய வாதம் அல்ல.

கலையம்சமுள்ள சிந்து பைரவி, நாயகன், சலங்கை ஒலி போன்ற படங்கள் தமிழ் ரசிகர்கள் மத்தியில் வெற்றி பெற்றன என்பது கவனத்துக்குரியது.

எனவே இத்தகைய படங்களின் வெளியீடு தமிழர் பாரம்பரிய கலாசாரத்தை சிதைக்கவே வழியமைக்கும்.

எனவே குறிப்பாக ஈழத்தைப் பொறுத்தவரை போராட்ட முனைப்பான இக் காலகட்டத்தில் கலாசார சீரழிவை ஏற்படுத்தும் இத்தகைய படங்களின் வருகை தவிர்க்கப்படுதலே ஆரோக்கியமானதாகும்.


அண்மைக் காலத்தில் வெளியான பெரும்பாலான படங்களை பற்றியே இக்கட்டுரை குறிப்பிடப்படுகிறது. இக் காலகட்டத்தில் சிறந்த கலை அம்சமுள்ள பாலச்சந்தரின் தண்ணீர் தண்ணீர், சிந்து பைரவி, பாலுமகேந்திராவின் வீடு, பசி, மணிரத்தினத்தின் நாயகன், பாரதிராஜாவின் புதுமைப்பெண், வேதம்புதிது, மண்வாசனை போன்ற நல்ல படங்களும் வெளிவந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

– வேலணையூர் தாஸ்

★

# சொற்சிலம்பம்

போட்டி இல. 90



சொற்சிலம்பம் இல: 90
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ........................................

விலாசம்: ........................................

........................................

——— இங்கே வெட்டுக ———

**முடிவு திகதி: 02 – 11 – 1988**

**இடமிருந்து வலம்:**

1. சக்திவழிபாட்டுக்குரியது 5. குறைவு. ஓரெழுத்துக் குறைந்து நிற்கிறது. 6. முக்தி அல்லது இறைவனடி 9. வேகம் 10. குளிர்ச்சி 11. கூடுதல் 13. திடீர்த் தாக்கு 14. ஓர் இராசி 15. இதற்குத்தானே போட்டி! 17. அழகு 18. ஊர்வன இனத்தைச் சேர்ந்தது.

**மேலிருந்து கீழ்:**

1. மதியம் 2. தசரதன் மகன் குழம்பி விட்டான் 3. அவசரச் செய்தி தலைகீழாகிவிட்டது 4. சிறந்த குணம் 7. மன்மதன் காதலி 8 கவனம் 10. குற்றம் 11. தலைவன் 12. வாய்க்கு உரியது 13. காடு 14. புகழுக்கு எதிரானது. இறுதி இழந்தது 15. தூங்கு 16. பூமி தலைகீழாகி விட்டதே!

**நிபந்தனைகள்**

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர்கள் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் கலந்து கொள்ள முடியாது.

படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி அனுப்பினால் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.

| | |
|---|---|
| முதலாம் பரிசு: | 100 ரூபா |
| இரண்டாம் பரிசு: | 50 ரூபா |
| மூன்றாம் பரிசு: | 25 ரூபா |

# பெண்கள் ஒளிமயமான வாழ்வுபெற உதவும் கௌரி நோன்பு!

'கேதாரம்' இமாலய பர்வதத்திலுள்ள ஒரு சிவஸ்தலம். கேதாரீஸ்வரரைக் குறித்து உமாதேவியார் அநுஷ்டித்த விரதமே கேதாரீஸ்வரர் விரதமாகும்.

இது ஐப்பசி மாதத்துக் கிருஷ்ணபட்சத்துச் சதுர்த்தசித் திதியிலே அனுஷ்டிக்கப் படுவது. புரட்டாதி மாதப் பூர்வபக்கத்து அட்டமத்திதி முதல் அமாவாசை வரையுள்ள இருபத்தொரு நாள்கள் அனுஷ்டிக்கப்படும்.

இவ்விரத நாட்களில் இருபத்தொரு இழையினாலான காப்பை ஆடவர்கள் வலக் கையிலும் பெண்கள் இடக் கையிலும் கட்டிக் கொள்ளுதல் வேண்டும்.

முதல் இருபது நாளும் விரதம் அனுஷ்டித்துச் சூரியாஸ்தமனத்தின்பின் போசனம் செய்து இரவிலே தர்ப்பை அல்லது புல்லினால் செய்த பாயில் சயனித்தல் வேண்டும்.

இறுதி நாளாகிய சதுர்த்தியிலன்று உபவாசமாக இருந்து சிவபூஜை செய்து காப்பினை அணிந்து கொள்ள வேண்டும். மறுநாள் உதயத்தில் பாரணம் பண்ணுதல் வேண்டும்.

திருக்கைலாசத்திலே பார்வதி சமேதரராகப் பரமேஸ்வரன் வீற்றிருந்தருளினார். பிருங்கி முனிவர் என்பவர் பரமேஸ்வரனை மாத்திரம் பிரதக்ஷிணம் செய்து வணங்கிப் பார்வதியை வணங்காது சென்றார்.

பார்வதி கோபம் கொண்டு, 'முப்பத்துமுக்கோடி தேவர்களும் முனிவர்களும் யாவரும் எம் இருவர்களையும் பிரதக்ஷிணம் செய்து வணங்கிச் செல்ல பிருங்கி முனிவன் மாத்திரம் நம்மை வணங்காது செல்கின்றானே'. இம்முனிவன் செயலுக்குக் காரணம் என்ன?

எனப் பரமேஸ்வரனைப் பார்த்து வினவ,

பரமேஸ்வரன்,

'பார்வதியே! பிருங்கி முனிவன் பாக்கியத்தை விரும்பியவன் அல்ல. மோட்சத்தை விரும்பியவன். மௌனநிலை வகித்துப் பெருந்தவமுடையவன். காரணப்பொருள் ஒன்றேயென என்னையே கருதுபவன் மற்றொன்றிருப்பதாகக் கருதாதவன். பேரின்பமாகிய வீடுபேற்றின் பயனாக என்னையே வந்தடைபவன். ஆதலினால் தான் என்னைப் பிரதக்ஷிணம் செய்தான். உனக்கு அங்ஙனம் செய்யவில்லை' எனக் கூறியருளினார்.

அத்தருணம் முனிவரைப் பார்வதிதேவி பார்த்து, பிருங்கிமுனியே! உனது உடம்பிலுள்ள இரத்தம் மாமிசம் என்பன எனது அம்சமாதலில் அவற்றைக் கொடு' எனக் கூறினார்.

முனிவர் உடனே தனது உடம்பிலுள்ள மாமிசம், இரத்தம் என்பவற்றை உதறிக் கொட்டிவிட்டார்.

அதனால் அவரது உடல் வலிமை நீங்கி விட்டது. நிற்கமுடியாத நிலைமையேற்பட்டது.

எல்லாம் அறிந்த பரமேஸ்வரன் தள்ளாடி வலுவின்றித் தத்தளித்த பிருங்கி முனிவனுக்குக் கருணை கூர்ந்து ஊன்றுகோலைக் கொடுக்க அவர் அதன் வழி நடந்து ஆச்சிரமம் போய்ச் சேர்ந்தார்.

இச்செயலைப் பார்த்துக் கொண்டிருந்த பார்வதிதேவியார் மிகுந்த சினம் கொண்டு திருக்கைலாச கிரியை விட்டுப் பூவுலகத்துக்குக் கௌதம முனிவரின் ஆச்சிரமத்தை வந்தடைந்தார்.

பார்வதிதேவியார் கௌதம முனிவரை நோக்கி முனிவரே! யான் சிவபெருமானது வாம பாகத்தில் கலந்து கொள்ளும் பொருட்டு இப்பூவுலகத்தில் ஒரு விரதம் அனுஷ்டிக்க வேண்டும். மிகவும் மகத்துவம் நிறைந்த விரதமொன்றும், அதனை அனுஷ்டிக்கும் முறையையும் உரைத்தல் வேண்டுமெனக் கேட்டார்.

தாயே! பூவுலகில் அனுஷ்டிக்கப்படும் சிறந்த விரதம். ஒன்றுண்டு. 'கேதாரீஸ்வரர் விரதம்' (கேதார விரதம்) என்று அதற்குப் பெயர் எனக் கூறி அதனை அனுஷ்டிக்கும் முறையையும் கூறினார். கௌதம முனிவர் கூறிய வண்ணம் அம்மையார் இவ்விரதத்தை விதிப்படி அனுஷ்டித்துப்பரமசிவனை மகிழ்வித்தார்

பரமேஸ்வரன் சிவகணங்கள் புடைசூழ அவ்விடத்திற்கு எழுந்தருளினார். பார்வதிதேவியார் இறைவனை வணங்கி 'சுவாமி! அடியார் அனுஷ்டித்த இந்த விரதத்தை யாவர் அனுஷ்டித்தாலும் அவர்களுக்கு நீண்ட ஆயுளையும் நல்ல புத்திரப்பேற்றையும் அஷ்டஐஸ்வரியங்களையும் கொடுத்து இறந்த பின் உங்களது திருவடித் தாமரைகளை அடைகின்ற பேற்றையும் அனுக்கிரகத்தருள வேண்டும் என்று பிரார்த்தித்தார்.

சிவபெருமான் அம்மையாரின் பிரார்த்தனைக்கு அனுக்கிரகம் செய்து 'சிவமின்றிச் சக்தியில்லை. சக்தியின்றிச் சிவமில்லை' என்ற மாபெரும் தத்துவத்தை மானிடர்களுக்கு இவ்விரதம் [illegible]லம் தெளிவாக்கிப் பார்வதிதேவியாரைத் தமது வாமபாகத்திற் சேர்த்து அர்த்தநாரீஸ்வரராகிக் கைலாயத்திற்கு எழுந்தருளினார்.

இவ்விரதம் இருபத்தொரு நாள் இருபத்தொரு வருடம் அனுஷ்டிக்க வேண்டும். கன்னிப் பெண்களுக்கு மிகவும் விசேடமானதும் அவர்களது ஒளிமயமான வாழ்வுக்கும் உகந்த விரதமாகும்,

இவ்விரதத்தை அனுஷ்டிப்போர் இகத்தில் எல்லா நலன்களும் பெற்று பரலோகத்திலும் பேரின்ப நிலையை எய்துவார்கள் என்பது திண்ணம்.

- செல்வி ச. சற்குணவதி -

நங்கை

# விழிப்புணர்வை ஏற்படுத்தும் ஓவியங்கள் வரையும் செல்வி அனுஷியா!

ஓவியர் அனுஷியாவின் ஓவியக் கண்காட்சி சென்ற 13, 14, 15 ஆம் திகதிகளில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

இக்காட்சியில் எழுபத்து நான்கு ஓவியங்கள் வைக்கப்பட்டிருந்தன.



கண்காட்சியில் இடம்பெற்ற ஓவியங்களில் ஒன்று.

இவை பற்றி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வாசக அன்பர் திரு. வேலுவின் மதிப்பீட்டைப் பார்ப்போம்:

'இந்த ஓவியங்களில் மீனவப் பெண் (அன்று- இன்று), கரையோரக் கிராமம், துன்பம், பாய்க்கப்பல், அலை என்பன எமது சமூகத்தின் ஏற்றத் தாழ்வுகளையும் மனங்கொள்ளும் கடற்கரையோரங்களையும் அரசின் கோரத்தாண்டவங்களையும் காட்டின.

- பேட்டி: அகில்ராஜ் -

தாகசாந்தி, திருவிழா, நடனம், ஆண்டிப் பண்டாரம், வட்டு – தொழில்நுட்பக் கல்லூரி என்பவற்றின் மூலம் எமது பாரம்பரிய கலாசார அம்சங்களையும் கட்டடக்கலை வனப்பையும் காணக்கூடியதாக அமைந்து உள்ளன.

இப்படி திரு. வேலு எழுதுகிறார்.

ஓவியக்கலைஞர் திரு. அ. இராசையாவால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள செல்வி அனுஷியா சுதுமலையில் வசிக்கும் சுந்தரலிங்கம்—தபோநிதி தம்பதிகளின் புதல்வி.

யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, வட்டுக்கோட்டை தொழில் நுட்பக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவி.

சஞ்சீவி வாசகர்களுக்காக செல்வி அனுஷியா பேட்டி அளித்தார்.

'கடந்த காலங்களில் நடைபெற்ற சில நிகழ்வுகளை ஓரளவுக்கு வரைந்து கண்காட்சியில் வைத்திருக்கிறேன்

'இனி நான் வரையப் போகும் ஓவியங்கள் சமகால நிகழ்வுகளைப் பிரதிபலிப்பவையாகவே அமையும்.

எழுத்துமூலமாகத் தெரிவிக்கப்படும் கருத்துக்களை, விமர்சனங்களை ஓவியம்மூலம் வெளிப்படுத்த விரும்புகின்றேன். எனது ஓவியங்கள் மக்களிடையே விழிப்புணர்வு, சமுதாயத்தில் மாற்றம் ஆகியனவற்றை ஏற்படுத்துவதே எனது இலட்சியம்.



செல்வி அனுஷியா

'யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை ஓவியக் கலையைப் பயில்வதோ, பின்னர் அதனைத் தொடர்ந்து தொழிலாகச் செய்வதோ கஷ்டமானதாக இருக்கிறது. காரணம் ஓவியத்துறை வளர்ச்சிக்குத் தேவையான உபகரண வசதிகள் இங்கு கிடைப்பதாக இல்லை.

'எனது சமகால ஓவியங்களை மக்கள் வாங்குவதில் அதிக அக்கறை காட்டுகின்றனர்.

'இருப்பினும் விற்பனைக்காக நான் ஓவியங்கள் படைப்பது இல்லை.

எனது ஓவியப்பணிக்குத் திருமணம் தடையாக இருக்காது என்று நம்புகிறேன். திருமணத்தின் பின்னர் ஓவியப் பணியை விட்டுவிடக் கூடாது என்றே பலரும் வலியுறுத்தி வருகின்றனர்.

இப்படிக் கூறுகிறார் செல்வி அனுஷியா. ★

ஓவியக் கோட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியில் புதுமைகாண் பருவம்

உலகிலுள்ள வளர்ச்சியடைந்த நாடுகள் உட்பட பெரும்பாலான நாடுகள் நான்கு பருவங்களினூடாக வளர்ச்சியடைந்துள்ளன.

முதலாம், இரண்டாம் உலக யுத்தங்களையடுத்து ஏற்பட்ட 'புனருத்தாரணப்பருவத்'தினை முதலாவது பருவமாகவும்,

தொழில் நுட்ப விஞ்ஞானக் கைத்தொழில் விருத்தியினையொட்டி வேண்டிய திறனுற்றல் (Skill) மிக்க ஆள்வலு கிடைக்காத 'மனித வளத் தட்டுப்பாட்டுக் காலத்'தினை இரண்டாவது பருவமெனவும்,

இளைஞர்களிடையே விரக்தியும், எதிர்ப்புணர்வும் விமர்சிக்கும் தன்மையுமுடைய காலமாகிய 'தீவிரவாதப் புரட்சிகரக்காலத்'தினை மூன்றாவது பருவமெனவும்,

மேற்படி பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணவும் நாட்டின் பல்வேறு குறைபாடுகளுக்குத் தீர்வு காணும் நோக்கமாகவும் புதியமாற்றங்களை ஏற்படுத்தும் காலமாகிய 'புதுமை காண் பருவத்'தினை நான்காவது பருவமெனவும் நாம் இனம் காணலாம்.

இலங்கையினைப் பொறுத்தவரை சுதந்திரத்தையடுத்து ஏற்பட்ட வளர்ச்சிக்கட்டங்களைக் கல்வி அமைச்சின் செயலாட்சித் துறைக்குப்பொறுப்பான திரு. நீல்பெர்ஞண்டோ (Neil Fernaindo) கல்விசார் வளர்ச்சிப்பருவங்களாகப்பின் வருவனவற்றை இனம் காட்டுகின்றார்.

1950களில் ஏற்பட்ட கலாநிதி சி. டபிள்யூ. டபிள்யூ - கன்னங்கராவின் சீர்திருத்தங்களையடுத்து ஏற்பட்ட முக்கிய மாற்றங்களான இலவசக் கல்வி முறையினை விரிவாக்குதல், தாய்மொழிக் கல்விப் போதனை, மத்திய பள்ளிக்கூடங்களை அமைத்தல் போன்ற மாற்றங்கள் கொண்ட காலத்தினைக் 'கல்வி வளங்களைப் பரவலாக்கும் பருவம்' எனவும்,

1960களில் ஏற்பட்ட கல்வி நிறுவனங்கள் அரசுடைமையாக்கப்பட்டதில் இருந்து ஏற்பட்ட வளர்ச்சிப்பருவத்தினை 'தேசிய பள்ளிக்கூடங்களையும், தேசியக் கல்வி முறையையும் உருவாக்கும் பருவம்' எனவும்,

1970 களில் விஞ்ஞான தொழில் நுட்பத்துறை வளர்ச்சியையொட்டி - 1972 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட கல்விச் சீர்திருத்தங்களின் ஊடாகத் தொழில் முன்னிலைப்பாட அறிமுகமும்-அபிவிருத்தியும், பொதுத்திட்டப்பாட விரிவாக்கமும் - கொண்ட காலப்பகுதியை 'கலைத்திட்ட மாற்றங்கள் காண முற்பட்டபருவம்' எனவும்

1980களில் கல்விநிருவாகம், கல்விச் செயலாட்சி, பள்ளிக்கூட அமைப்பு போன்றவற்றில் மாற்றங்களைக் கொண்டு வரத் தீவிர முயற்சிகளை எடுத்து வருகின்ற காலத்தினை 'புதுமை காண் பருவம்' எனவுமே அப்பருவங்களை நான்காக வகுத்துள்ளார்.

### நிர்வாகத்தின் முக்கியத்துவம்

உற்பத்திப் பெருக்கத்தினை ஏற்படுத்துவதற்கு உற்பத்திக் காரணிகளான மூலதனம், நிலம், முயற்சியாளர், மனிதவலு ஆகியவை மட்டும் போதுமானதா என்ற சந்தேகம் கைத்தொழில் புரட்சியை அடுத்து 1930 களில் ஏற்பட்ட பொருளாதார மந்த நிலைபற்றிச் சிந்திக்கும்போது ஏற்பட்டது. அக்காரணிகள் எல்லாவற்றிற்கும் மேலாக நிர்வாகமும், செயலாட்சியும் விளைவு அதிகரிப்புக்கு அவசியம் என்பது உணரப்பட்டது.

இருபதாம் நூற்றுண்டின் ஆரம்பகாலத்தில் எவ். டபிள்யூ ரெய்லர் (F.W. Taylor) செயலாட்சி பற்றிய கருத்துக்களைத் தந்துள்ளார். இவர் ''விஞ்ஞான முறைச் செயலாட்சியின் தந்தை' எனப் பிற்காலத்தில் அழைக்கப்பட்டார். இவரது கருத்துக்கள் இருபதாம் நூற்றுண்டின் நடுப்பகுதியில் கணிப்புக்குட்பட்டன. எந்தவொரு துறைவிருத்திக்கும் நிர்வாகமும், செயலாட்சியும் முக்கியமானவை என்பது வலுப்பெற்றது. ரெய்லருடன் இணைந்து செயற்பட்ட லூதர் கியூலிக் (L. Qulick) என்பவரது நிர்வாகம் தொடர்பான கருத்துக்கள் வரவேற்கப்பட்டன. இவர் சில முக்கியமான நிர்வாகப்பணிகளை வெளியிட்டார். இது ஆங்கிலத்தில் ''PODSCORB'' எனப்பட்டது. அதாவது 'P' என்பது திட்டமிடல் (Planning), 'O' என்பது அமைப்புப்படுத்தல் (Organization), 'D' என்பது வழிப்படுத்தல் அல்லது அறிவுறுத்தலைக் கொடுத்தல் (Directlv), 'S' என்பது ஊழியர் நியமனத்தையும் (Staffing) 'CO' என்பது இணைப்புப்படுத்துதலையும் (Co- ordination) 'R' என்பது அறிக்கை சமர்ப்பித்தலையும் (Reporting), 'B' என்பது வரவு செலவுதிட்டங்களைச் சமர்ப்பித்தலையும் (Budgeting) குறிக்கின்றது.

எதிர்வரும் 29, 30 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள பாடசாலை அதிபர்கள் சேவை தரம் I II III— தெரிவுப் போட்டிப் பரீட்சையின் தேவை கருதி இக் கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.

இப்பணிகள் பெரும்பாலும், எல்லாத்துறைகளுக்கும் நிர்வாக ரீதியாக அவசியம் என்பது தெளிவாகிற்று. கல்வி நிர்வாகத்தைப் பொறுத்தவரையிலும் இப்பணிகள் முக்கியமாக அமைகின்றன.

நிர்வாகம் தொடர்பான இவ்விதக் கருத்துக்கள் வெளிவந்ததில் இருந்து எல்லாத் துறைகளிலும் நிர்வாகமென்பது நன்கு வளர்ச்சியடையலாயிற்று: கைத்தொழில் நிர்வாகம், வணிக நிர்வாகம், வங்கி நிர்வாகம் போன்றவை உற்பத்தி அதிகரிப்பு நோக்கில் வளர்ச்சியடைந்தவையாகும்.

பொது நிர்வாகம் என்பது மனித நலன்புரிச் சேவைகளையொட்டி வளர்ச்சியடைந்ததாகும். இவற்றுள் முக்கியமான மன்பதைச் சேவையான கல்வியைப் பொறுத்தமட்டில் கல்வி நிர்வாகம் என்னும் துறையும் காலத்துறையின் புதியதோர் ஒழுக்கமாக வளர்ச்சியடையத் தொடங்கியது

### கல்வி நிர்வாகமும் ஏனைய நிர்வாகமும்

இலக்குகளையொட்டிச் செயற்படுவது நிர்வாகச் செயற்பாட்டின் முக்கிய பண்பாக அமையினும் கல்வி நிர்வாகம், ஏனைய நிர்வாக முறையினின்றும் பெரிதும் வேறுபட்டதாக அமைகின்றது.

ஏனைய நிர்வாகங்கள் பெரிதும் இலாப நோக்கை அடிப்படையாகக் கொண்டவை. இங்கு உற்பத்திப் பெருக்கம் அல்லது பணம் தேடல் முக்கியமாகக் கவனிக்கப்படும்.

கல்வி நிர்வாகமானது அதன் முக்கிய இலக்காக கற்பித்தல், கற்றல் நிலைமைகளைச் சீராக்குவதாகவே அமைந்துள்ளது. இதன் உற்பத்தியைத் தொகை அளவிலோ, பண அலகு அளவிலோ அளவிடமுடியாது. ஏனையவை குறுங்கால முதலீடாக அமையும்போது கல்வியின் செலவினமென்பது நீண்டகால முதலீடாக அமைகின்றது. மனிதப் பண்பு வளர்ச்சி, சமுதாய முன்னேற்றம் என்பனவே இதனுடைய விளைவுகளாக அமையக் கூடியவை.

இந்நிர்வாகம் பெருமளவு ஆளணியினரை உள்ளடக்கியது. கல்வி நிர்வாகிகள் அதிபர்கள் உட்பட ஆசிரியர்கள், மாணவர், பெற்றோர், நலன் விரும்பிகள் ஆகிய அனைத்து மக்களும் இந்நிர்வாக முறையுள் அடங்குவர்.

ஏனைய நிர்வாகங்கள் போலன்றி இந்நிர்வாகம் அடிக்கடி மீளாய்வு செய்யப்பட்டு சமூகத் தேவைகளையொட்டியும், ஏனைய நாடுகளின் வளர்ச்சிப் பண்புகளையொட்டியும் செயற்படவேண்டியதொன்றாகும்.

எனவே இந்நிர்வாகத்தில் இடம்பெறுவோர் நல்ல நுண்ணறிவாளர்களாகவும், நீண்ட நோக்குள்ளவர்களாகவும், நாட்டின் வரலாற்றை உய்த்துணர்ந்து கலாசார நியமங்களையும், விழுமியங்களையும் மதிப்போராகவும் எல்லாவற்றிற்கும் மேலாக பிரச்சினைகளை இனம்கண்டு பகுத்துணரும் - தொகுத்துணரும் ஆற்றலுள்ளோராகவும் மனித உணர்வுகளையும் அபிலாசைகளையும் மதிப்போராகவும் இருத்தல் வேண்டும்.

ஏனைய நிர்வாகமென்பது பெரும்பாலும் உற்பத்தி அதிகரிப்பு நோக்கில் வழமையான தொழிற் கூறுகளையும் கடமைக் கூறுகளையும் உள்ளடக்கியதாகும். ஆனல் கல்வி நிர்வாகமென்பது மாணவர்களினதும், சமூகத்தினதும் பிரச்சினைகளையொட்டிச் செயற்படவேண்டியிருப்பதால் வழமையான கடமைக்கூறுகளுக்குப் பதிலாக புதிய நிலைமைகளையும், பிரச்சினைகளையும் எதிர்நோக்கி ஏற்ப நுட்ப முறைகளைக் கையாளவேண்டிய துறையாகவுள்ளது;

ஏனைய நிர்வாக முறைகள் பெரும்பாலும் சட்டதிட்டங்கள், விதிமுறைகள், பணிப்புரைகளையொட்டிச் செயற்படக்கூடியனவாகும். உதாரணமாக ஊழியர் வருகை திருப்திகரமாக அமையாத போது கண்டிப்புகள், தண்டனைகள் போன்றன செயற்படுத்தப்பட்டால் வருகையில் திருப்திகரமான நிலைமைகள் ஏற்பட்டு உற்பத்தி அதிகரிக்கலாம். ஆனல் இவ்வித பணித்துறையாட்சிப் பண்புகள் கல்வி நிர்வாகத்திற்குப் பெருமளவு பொருந்தாது. இதற்கு விருத்தி நிர்வாக முறையே பெருமளவு ஏற்றது.

விருத்தி நிர்வாகமென்பது மனித உணர்வுகள் தேவைகளையொட்டி நிகழும் நிர்வாக முறைகளைக் குறிக்கும். இங்கு சட்டதிட்டங்கள் விதிமுறைகளைவிட மனிதாபிமான அணுகுமுறையே பெருமளவு பொருந்தும். உதாரணமாக தனிப்பட்ட குடும்பப் பிரச்சினைகளால் பள்ளிக்கூடத்திற்குப் பிந்திவரும் ஓர் ஆசிரியரை அதிபர் குறைகாணுது அவரது வரவின் ஒழுங்கீனம் பற்றி திறந்த மனத்துடனும்; புரிந்துணர்வுடனும் கலந்துரையாடும்போது அவரின் நடத்தைப் பண்பில் மாற்றமேற்பட்டு அவரின் கற்பித்தல் பண்பு சீராக இடமுண்டு.

விதிமுறைகளையொட்டி ஒழுங்காசச்சமூகமளிக்கும் ஆசிரியர் அனைவரும் தமது கடமைக்கூறுகளைச் செவ்வனே ஆற்றுவர் எனக் கூறவும்முடியாது.

ஏனைய நிர்வாக முறையில் பெரும்பாலும் ஆளணியினரின் படிமுறையமைப்பு பெருமளவு குறிப்பிட்ட தொழிற்துறைசார்ந்த அறிவு, திறனுற்றல், தகைமை, அனுபவம் போன்றவற்றில் சீராக அமைந்திருக்கும். உதாரணமாக வங்கி நிர்வாகத்தில் பொதுமுகாமையாளர் தன் கீழ்பணிபுரியும் ஊழியரைவிட வங்கித்தொழில்தொடர்பான கூடிய அறிவு, அனுபவம், தகைமை, ஆற்றல் முதலியவற்றைப்பெற்றிருப்பார். ஆனல், கல்வி நிருவாகத்தில் இப்பண்புகள் ஊழியர் படிமுறையின் பல்வேறு நிலைகளிலும் ஒத்த தன்மையாகவோ முரண்பட்ட தன்மையாகவோ அமைந்திருக்க வாய்ப்புண்டு. சாதாரணமாக கல்வி அலுவலரை (E O), அதிபர் அல்லது ஆசிரியர் கூடிய தகைமைகளைப் பெற்றிருக்கலாம். இதனல் வழமையான பணித்துறையாட்சிக்கு உட்பட்ட பணிப்புக்கள் வழங்கல், மேற்பார்வை போன்றவை சீராக இடம்பெற முடியாதிருக்கும். எனவே, இங்கு மேலிருந்து கீழ்நோக்கிய தொடர்பு கொள்ளலைவிட கீழிலிருந்து மேல்நோக்கிய தொடர்பு கொள்ளலும் முக்கியமாக இடம்பெறவேண்டும்.

மேற்பார்வை என்பதைவிட அனுபவங்களைப் பகிர்தல், வழிகாட்டல், ஆலோசனை கூறல் போன்றவைகளே இந்நிர்வாகத்தில் முக்கியத்துவம்பெறவேண்டும்.


### கல்வி நிர்வாகப் பயிற்சிகள்:

1980களின்முன் களுத்துறையில் அமைந்துள்ள உத்தியோகத்தர் கல்லூரி (Staff-College), இலங்கை மன்றக் கல்லூரி ஆகியவற்ருலும், அமைச்சின் பிராந்திய நிலையில் கருத்தரங்குகளாலும் கல்வி நிர்வாகப்பயிற்சிகள் நடந்ததாயினும், திட்டமிட்ட முறையில் அவை வெற்றியளிக்காது பணம் விரயமாக்குவதாகவேயமைந்தது.

1980இன் பின் கல்வி நிர்வாகிகளின் திறனை விருத்தி செய்ய பலமுறையான பயிற்சிக்கு வழிகோலப்பட்டது. அதன் அடிப்படையில் 1985 ஆம் ஆண்டில் 28 ஆம் இலக்கச் சட்டமூலம் உருவாக்கப்பட்ட தேசிய கல்வி நிறுவனம் (N.I.E) உருவாக்கப்பட்டது. கல்வி அமைச்சுக்குப் புறம்பாகவும், ஆனல் அமைச்சின் செயலாளரின் கீழ் இயங்கும் இந்நிறுவனத்தின் கீழ் 'இலங்கை கல்வி நிர்வாகத்துக்கான உத்தியோகத்தர் கல்லூரி' SLSEA உருவாக்கப்பட்டு கல்வி நிர்வாகிகளுக்கும், அதிபர்களுக்கும் முகாமைத்துவம் தொடர்பான பயிற்சிகளை அளித்துவருகின்றது. இதனைத்தவிர (N.I.E) இன் கீழ் இயங்கும் வேறு ஒரு அமைப்பான தொலைக்கல்விப் பிரிவும் அதனல் நடத்தப்படும் வினைத்திறன்காண் தடைத் தேர்வுகளும் நிர்வாக ரீதியான பயிற்சிகளை ஊக்குவிக்கின்றன. இதைவிட கல்வி நிர்வாகிகளைப் பயிற்றுவிக்க 'யுனஸ்கோ' (UNESCO) யூஎன்டிபீ (UNDP) ஆகிய இருதாபனங்களும் உதவுகின்றன.

கல்வி நிருவாகத்தினைப் பொறுத்து தற்போது சிந்திக்கப்பட்ட - திட்டமிடப்பட்ட - செயற்படுத்தப்படுகின்ற புதிய முறைகள் - உத்திகள் - அணுகுமுறைகள் புதுமை காண் பருவத்தினை நோக்கி இலங்கையும் செல்வதனை வெளிப்படுத்தி நிற்கின்றமையினை உணரலாம். ★

- க. இராசதுரை -
B. Ed., B A (Pol. Science)




புரோட்டீன் நிறைந்த
புரோட்டீனெக்ஸ்®
பக்கெட் ஒன்றை
இன்றே வாங்குங்கள்!

புரோட்டீனெக்ஸ்® 56% தாவர புரோட்டீனும், உடலுக்கும் ஆற்றலுக்கும் அவசியமான விற்றமின்களும் தாதுப்-பொருட்களும் அடங்கியது.

புரோட்டீனெக்ஸ்®
நீங்கள் நாளாந்தம் இழக்கும்
சக்தியை மீட்டுத் தருகிறது

சில்லறை விலை
ரூபா 68/55
125 கிறும்

Pfizer

®ஃபைசர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக அடையாளம்.

Grant BJK&E PFL 1158

## கவித்துளி

### வாடகை இதயம்

இதயக் கோவில்கள்
எத்தனையோ காத்திருக்க
இழந்து விட்ட இதயமதை
எண்ணி நீ வாடாதே!
நேற்றொருவன் குடியிருந்த
நெறியற்ற இதயமதை
நின் சொந்தமென்றெண்ணி
நீ சில நாள் குடியிருந்தாய்
நீயிருந்த இதயமதை
தன் சொந்தமென்றெண்ணி
நாளை எவன் வருவானே?
வாடகை இதயங்களின்
வாடிக்கை இதுவன்றே?

— யாழ் அஸீம்

### கொடை வள்ளல்

நவீன பாரிகளே
நாம் உங்களிடம் தேர்
கேட்கவில்லை
இந்த
முல்லைக்கொடிகள்
பற்றிப்படர்வதற்கு
மஞ்சள் கயிற்றுல்
மூன்று முடிச்சுப்
போடுங்கள்
உங்கள் கொடை
அந்தப் பாரியையே
தலைகுனிய வைத்துவிட்டுப்
போகட்டும்.

– சிவானந்தனருள்

இதயம் என்னும் கோயிலிலே
ஏற்றி வைத்தாய் தீபத்தை
நீ ஏற்றிய தீபமோ
காற்றினிலே என்றும்
அணையாத தீபம்.

– இ. சுகுண

## போதை விட்டே வாழ்வீர்!

போதைசேர் நஞ்சை யுண்டே
பொன்றிய மனிதர் பல்லோர்
ஊதைசேர் காற்றுல் நைந்து
உலைந்திடும் குரங்கு போன்றே
வாதைசேர் வாழ்வு கொண்டே
வண்ணங்கள் இழந்து நிற்பர்
போதைசேர் பொருளை உண்போர்
போற்றிடும் உடலும் பாழாம்.

நோய்களால் நைந்து மக்கள்
நொந்ததோர் வாழ்வு காண்பர்
சேய்களாம் குழந்தை குட்டி
செத்துமே மடிவர் அன்றே
பேய்களைப் போன்றே உடலும்
வளைந்துமே கூனிப் போகும்
நாய்களாய் அலைந்து நாளும்
நலிந்துமே மடிவர் அன்றே.

பொல்லாத போதை தன்னல்
பொலிந்திடும் செல்வம் மங்கும்
எல்லாரும் நோயில் வீழ்ந்தே
எய்திடும் மரணம் காண்பர்
நல்லாரும் கொடியர் ஆவர்
நயந்திடும் குணங்கள் மாறும்
இல்லாளும் இல்வாள் ஆகி
இல்லறம் கலங்கு மன்றே.

யானைதன் தலைமேல் மண்ணை
அள்ளியே கொட்டல் போன்று
ஊனையும் உருக்கி மேலாம்
உயிரையும் குடிக்கும் என்பர்
சேனையும் அழியும் இந்தச்
செப்பிடு போதை உண்டால்
கோனையும் கெடுத்தே நாட்டில்
குவிந்திடும் குற்ற மெல்லாம்.

கவலையை நீக்க வென்றே
கனரகப் பவுடர் தன்னை
அபலைபோ லருந்தி அந்தோ
அடுதுயர் அடைவர் ஆண்கள்
சவலையாம் இளைஞர் தாமும்
சாற்றிடும் போதை உண்டால்
அபலையே போன்று நொந்து
அனுதினம் இறப்பர் காண்பீர்

தமிழினம் தழைக்க வேண்டின்
தயவுடன் ஒன்று சொல்வோம்
அமிழ்தினும் இனியும் எங்கள்
அருந்தவ மக்கள் கேளீர்
உமதினம் அழியக் கண்டும்
உறுதுயர் அடையக் கேட்டும்
தமதினம் காக்க வேண்டின்
தம்முயிர் காப்பீர் நீரே

ஊசியால் ஏற்றும் போதை
உயிரொடு உடம்பைக் கேட்கும்
நாசியால் இழுக்கும் மூச்சை
நடுவிலே நிறுத்தித் தாக்கும்
வாசியால் நடத்தும் வாழ்வை
வன்கணல் நடத்திச் செல்லும்
தாசிபோல் மனதை மாற்றி
தக்கதாம் பண்பை வாங்கும்.

– முருக. வே. பரமநாதன்

## துரோகம்

பயற்றம் விதைகளை வறுப்பதற்காகத் தாச்சியில் இட்டாள் ஆச்சி. அடுப்பை மூட்டுவதற்காக சிறிது வைக்கோலுடன் விறகுகளையும் அடுக்கி விட்டிருந்தாள்.

தீக்குச்சியைத் தட்டி மூட்டினுள். ஒரு வைக்கோல் கீலத்தில் நெருப்புப் பிடிக்கவில்லை தப்பி விட்டது.

பறபற என்று வறுத்துக் கொண்டிருந்தாள் ஆச்சி. ஒரு பயற்றம் விதை எழும்பிப் பாய்ந்தது. அடுப்பினுள் விழுந்து சாம்பராயிற்று. வேறோர் விதையும் வெளியே பாய்ந்தது. அதுவும் அடுப்பினுள் விழுந்து சாம்பராயிற்று. மூன்ருவது விதையொன்று பாய்ந்தது ஒரு மாதிரி அடுப்பில் விழாது தப்பித்துக் கொண்டது.

அதே நேரம் அடுப்புப் புகைந்தது, நன்கு எரியவில்லை. ஆச்சி அடுப்பைக் கிளறினுள். ஒரு தணற்கட்டி வெளியே விழுந்தது. அது சும்மா இருக்கவில்லை. வைக்கோற் கீலத்துடன் பேச்சுக் கொடுத்தது.

'இந்த மனுஷர் இருக்கினமே உங்களை வைத்து எங்களை எரிக்கிருர்கள்'' என்றது:

பயற்றம் விதைக்கோ வாய் சும்மா கிடக்கவில்லை. உங்களை வைத்து எங்களை வறுத்து உண்கிருர்கள். தணல் சொன்னது,

''இதில் இருப்பது ஆபத்து நாம் மூவரும் நடையைக் கட்டுவோம் என்றது.

''சரி'' என்று கூறி மூன்றும் புறப்பட்டன, காடு நோக்கி, இடையில் நெருப்புத்தணல் பேச்சுக் கொடுத்தது.

''இந்த மனிதர்கள் இருக்கிருர்களே சுத்தமோசம். எம் எம்மினத்தை எம்மைக் கொண்டே அழித்து விடுவார்கள்: கோடரிக்காம்பு எங்கள் இனம் தானே. அதனை எவ்வளவு தந்திரமாக உபயோகிக்கிருன்''. ஏன் கோடரி செய்வதற்கே எங்களது கரியைத்தானே உபயோகிக்கிருன்'' என்றது வைக்கோல்.

இருட்டி விட்டது. காட்டருகே வந்து விட்டன மூன்றும். எங்கோ சல சல என்று அருவி கொட்டும் ஒலி கேட்டது.

நெருப்புத் தணலுக்கு நடுக்கம் எடுத்தது. தண்ணீர் பட்டால் என் கதி என்ன? என்று சிந்திக்கத் தொடங்கியது.

பயற்றம் விதைக்கோ ஆனந்தம். அதன் அருகிற் போனலே என்ன சுகம். நான் முளை விட்டுப் படர்ந்து என் இனத்தைப் பெருக்கலாமே என்ற எண்ணம்.

வைக்கோற் கீலமோ தணலருகே நிற்கவும் பயப்பட்டது. பயற்றம் விதை சொன்னது,

''இந்த நெருப்புத் தணலின் வெம்மை தாங்க முடியவில்லை. ஆற்றோரம் போனல் என்ன' நண்பர்களே''

தணலின் முகம் கறுக்க ஆரம்பித்தது. காய்ந்த புற்களின் அருகே அவை நின்றிருந்தன. திடீரென ஒரு காற்று அடித்தது வைக்கோற் கீலம் தணல் மேலேவிழுந்தது. புகைய ஆரம்பித்தது.

அருகில் உள்ள காய்ந்த புற்களிலும் நெருப்புப் பிடித்துக் கொண்டது. காடே தீப் பற்றத் தொடங்கியது:

பயற்றம் விதை ஆற்றோரம் சென்றது. சிறிது நேரத்தில் தணலையோ வைக்கோற் கீலத்தையோ காணேம். பயற்றம் விதை சிரி சிரி என்று சிரித்தது: அதன் வயிறு வெடித்து விட்டது: வெடிப்பினூடு வேரும் முளையும் வெளிவந்தன. இலைகளை ஈன்று இனிதே நின்றது பயற்றம் [illegible]

- ஹெலன் பேர்ண்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழக அரசியல்

# தேசிய அணியில் தி. மு. க. சேரப்போய் மாநில அணியை கோட்டை விடும் நிலை

ஏழு கட்சி கூட்டணியில் தி. மு. க. சேர்ந்ததை ஒட்டி அக்கட்சியின் பழைய மாநில அளவிலான கூட்டணி உடைந்து சிதறக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது.

தி.மு.க. கூட்டணியில் இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், முஸ்லிம் லீக், போர்வர்ட் பிளாக் ஆகிய கட்சிகள் இடம்பெற்றிருந்தன.

தேசிய அளவில் ஆதரவு வேண்டும் என்று கருதி, தேசிய கூட்டணியில் தி.மு.க. இடம் பெற்றதுடன் அதன் தொடக்க விழாவை தி.மு.க. முன்நின்று நடத்தியது.

தேசியக் கூட்டணியில் தி. மு. க. இடம்பெற்றதுமே தமிழக ஜனதாக் கட்சியின் எதிர்ப்பைச் சந்திக்கவேண்டி ஏற்பட்டது.

ஜனதா கட்சியில் மெஜாரிட்டியினர் தேசிய கூட்டணியில் தி. மு. க. இடம்பெறக் கூடாது என்று குரல் எழுப்பி வந்தனர்.

அந்த எதிர்ப்பை அஜீத்சிங் மூலம் சமாளித்து 7 கட்சிக் கூட்டணி தொடக்கவிழாவை தி. மு. க. நடத்தியது.

தமிழக ஜனதா கட்சியின் தலைவர்களும், தொண்டர்களும் அந்தவிழாவைப் புறக்கணித்தனர்.

## முஸ்லிம் லீக் விலகல்

தேசியக்கூட்டணி தொடங்கி ஒருவாரம் முடிவதற்குள் தோழமைக் கட்சிகளில் ஒன்றான முஸ்லிம் லீக். தி. மு. க வுடன் போர்முரசு கொட்டியது.

ஏழு கட்சி தேசியக் கட்சிக் கூட்டணியில் தி. மு. க இருந்தால் தோழமையில்லை என்று யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் சொன்னார்.

அதைத் தொடர்ந்து முஸ்லிம் லீக்கிலும் கருத்து வேற்றுமை ஏற்பட்டது.

தி. மு. க. வுடன் உறவு இல்லை என்று லீக்கின் தலைவர் அப்துல் ஸமது தெரிவித்தார்.

தி. மு. கவுடனான உறவு நீடிக்கும் என்று லீக்கின் பொதுச்செயலாளர் அப்துல் லத்திப் கூறினார்.

தி. மு. க— தேசியக் கூட்டணி உறவு முஸ்லிம் லீகில் ஸமது-லத்தீப் உறவை சீர்குலைத்தது.

'கலைஞர் அவர்களே! உங்களை முதல் - அமைச்சராக்க கனவு கண்டோம். ஆனால் எங்களைக் கேட்காமல் வெளி மாநிலத்தில் இருந்து 7 கட்சிகளை இறக்குமதி செய்திருக்கிறார்கள்.

நாடாளுமன்றத்துக்கு மட்டுமா நாங்கள்? சட்டசபைக்கு தேவையில்லையா?

தி. மு. க. தொண்டர்களே உங்களை நான் கோருகிறேன். திராவிடப் பாரம்பரியம் தோன்றிய காலத்திலிருந்தே நேசிக்கிறேன். அன்று அண்ணா தி: மு. க. வை ஆரம்பித்த காலத்தில் அருகில் இருந்து ஆனந்தப்பட்டவன் நான்.

திராவிட சரித்திரத்தை உண்டாக்கியவர்கள் இந்த முஸ்லிம் பெருமக்கள்.

25 ஆண்டுகாலம் யார் யார் எதிரிகளாக இருந்தார்களோ அவர்கள் நண்பர்கள். எங்களை மறந்துவிட்டீர்கள். நாங்கள் என்ன புறந்தள்ள வேண்டிய அரசியல் கட்சியா?

இப்படி ஸமது கருணாநிதியைப் பகிரங்கமாகவே கேட்டார்.



கருணாநிதி

இறுதியில் முஸ்லிம் லீக் ஸமது அணி, லத்திப் அணியாப்க பிளவுபட்டது.

லத்திப் அணி தி.மு.கவுடன் ஸமது அணி இந்திரா காங்கிரஸுடனும் உறவுவைத்துக் கொள்ளும்நிலை ஏற்பட்டது.

## கம்யூ. கட்சிகள்

இந்த நிலையில்—

அகில இந்திய கட்சிகளான இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும், மார்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிகளும்கூட தி.மு.க. கூட்டணியில் இருந்து விலகுவது பற்றி பரிசீலித்து வருவதாகச் சொல்லப்படுகிறது.

தேசியக் கூட்டணியின் தொடக்கவிழாவின்போது கம்யூனிஸ்ட் கட்சிகள் சார்பில் வாழ்த்துச்செய்திகள் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

சம்பிரதாய முறையில் அனுப்பப்பட்ட வாழ்த்துச் செய்திகள்தான் அவை. தவிர தேசிய கூட்டணியை ஆதரிக்கும் நிலையில் அவ்விரு கட்சிகளும் இல்லை.

தி.மு.க. புதிய அணியை உருவாக்கியிருப்பதால், ஏற்கனவே கூட்டணியில் இருந்த கம்யூனிஸ்ட் கட்சிகள் இரண்டும் தி. மு. க. வின் தோழமையில் இருந்து விடுபடலாம் என்று தெரிகிறது.

தி. மு. க. கூட்டணியில் இருந்து விலகிய பின் ஜெயலலிதாவின் அ.தி.மு.க வுடன் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித்தொகுதி உடன்பாடு ஏற்படுத்திக்கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஜனதா கட்சியில் ஏற்பட்டுள்ள நிலைமை இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்குள்ளும் ஏற்படலாம் என்று கூறப்படுகிறது.

தமிழகத்தில் உள்ள இந்திய கம்யூனிஸ்ட் தலைமை, தி மு.க ஆதரவுடன் இயங்கிப் பழகி விட்டது.

இந்த நிலையில் 7 கட்சி கூட்டணியில் இடம்பெற்றுள்ள தி. மு. க கூட்டணியிலிருந்து விலகிவிடும்படி இந்திய கம்யூ. மேலிடம் உத்தரவிட்டால், தமிழக இந்திய கம்யூ. தலைமை அதை ஏற்குமா? அல்லது ஜனதா கட்சியில் இருப்பது போல் தமிழகத் தலைமை ஒரு முடிவும், மத்திய தலைமை வேறொரு முடிவும் எடுத்து, குழப்பமான சூழ்நிலைக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஆளாகுமா என்பது கேள்விக்குறியாக உள்ளது

தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டபிறகுதான் கூட்டணியில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் வெளிப்படையாகத் தெரியும்.

'முஸ்லிம் லீக் மட்டுமன்றி கம்யூனிஸ்ட் கட்சிகளும் தி.மு கவின் செல்வாக்கால் வாக்குப் பெற்றவை தான். எனவே அவை பிரிந்தால் தி. மு. க வுக்கு லாபமே தவிர நஷ்டமில்லை.

தேசிய முன்னணியிலுள்ள சிலகட்சிகளுக்கு சில இடங்களைக் கொடுத்துவிட்டு, மிகப் பெரும்பாலான இடங்களில் தி. மு. க. போட்டியிட்டு தனது செல்வாக்கை நிரூபிக்க இதுசரியான சந்தர்ப்பம்:' என்று தி: மு: க: மேலிட தலைவர்கள் இருவர் குறிப்பிட்டனர்:

### முஸ்லிம் லீக் விலகல்
### கம்யூனிஸ்ட்டுக்களும் கைவிடும் ஆபத்து

## பண்ருட்டி கிண்டல்

இதனிடையில்—

'ஆட்சியைப் பிடிக்க இருந்த விட்டை விட்டுவிட்டு சத்திரத்திற்கு கருணாநிதி போய் இருக்கிறார்', என்று அ: தி. மு; க (நெ) பொதுச்செயலாளர் பண்ருட்டி இராமச்சந்திரன் கூறியிருக்கிறார்.

குடியும் குடித்தனமுமாக வாழ வேண்டுமென்று பெரியவர்கள் சொல்வார்கள்.

நமக்கு ஒரு வீடு இருந்தால் குடும்பம் நடத்த முடியும். எல்லோரும் ஒன்றாகச் சத்திரத்தில் போய் குடும்பம் நடத்த முடியாது.

கட்சியைப் பிடிக்க இருந்த வீட்டை விட்டுவிட்டு சத்திரத்திற்குக் கருணாநிதி போயிருக்கிறார்.

அண்ணாதுரை கட்டிய வீட்டில் இருந்து எம். ஜி. ஆரையும் நம்மையும் வெளியேற்றினார்.

நாம் ஒரு வீட்டில் இருந்தோம்.

கருணாநிதி ஒரு வீட்டில் இருந்தார்.

இப்போது இருந்த வீட்டை விட்டுவிட்டு டில்லிக் கட்சிக்காரர்களை சேர்த்துக்கொண்டு சத்திரத்தில் தங்கியிருக்கிறார்.

## சென்னையிலிருந்து தி. மேனகன்

சத்திரத்தில இருக்கிற சாமியார்கள் ஒன்று சேர்ந்து எப்போது இவரை விரட்டப் போகிறார்களோ தெரியவில்லை.

தமிழக அரசியலில் கட்சிகளை பிளக்கும் அரசியல் கோடாரி கருணாநிதி அவர்கள். முஸ்லிம் லீக்கை நோக்கியும் இந்தக் கோடாரி பாய ஆரம்பித்துள்ளது என்று அறிகிறேன்.

சதிவலை பின்னப்படுவது ஒருபுறம்; சாகசப் பேச்சுக்கள் மறுபுறம்; தூண்டில்போடுவது ஒருபுறம். துண்டாட எண்ணுவது மறுபுறம். படுகுழி வெட்டுவது ஒருபுறம்; பாசம் பொழிவது மறுபுறம்; கண்ணி வெடிகள் ஒருபுறம்; கனிந்த பேச்சுக்கள் மறுபுறம்

இதுதான் கருணாநிதி பாணி.

இப்படி 'பண்ருட்டி' யின் கிண்டல் உள்ளது.

## ஜெயலலிதா

இனித் தேசியக் கூட்டணியில் தி. மு. க. சேர்ந்தது பற்றி ஜெயலலிதா என்ன சொல்கிறார் என்பதைப் பார்ப்போம்.



ஜெயலலிதா

ஒரு மாபெரும் தேசியத் தலைவர், அரசியல் தலைவர் சென்னைக்கு வந்து இருக்கிறார். அவர் பெயரைச் சொல்ல விரும்பவில்லை.

'நான் சாதிக்க முடியாததை நீ சாதித்துவிட்டாய். நன்றி சொல்ல வந்திருக்கிறேன்' என்று அவர் சொல்லிவிட்டு 'கலைஞர் கருணாநிதியை தேசிய அரசியலுக்கு இழுக்க நான் முயற்சி செய்தேன். நீ அவரை அந்த நிலைக்கு விரட்டிவிட்டாய். தமிழகத்தில் தனி ஆளாக உன்னை வீழ்த்த முடியாது. அதனால் 7 கட்சி கூட்டணியோடு உன்னை வீழ்த்த முற்பட்டு இருக்கிறார்' என்று அவர் கூறினார்.

தமிழக அரசியலில் வெற்றி பெறமுடியாத கருணாநிதி வடக்கே சென்று 7 கட்சி கூட்டணி அமைத்து இருக்கிறார். எத்தனை கட்சியுடன் கூட்டணி அமைத்தாலும் என்னை (ஜெயலலிதாவை) வெல்ல முடியாது.'

தமிழ் நாட்டின் தீயசக்தி கருணாநிதி. அவர் ஒருபோதும் தமிழ்நாட்டில் ஆட்சியைப் பிடிக்க முடியாது. இப்போது வடக்கே சென்று 7 கட்சிகள் கூட்டணியில் இணைந்துள்ளார்.

## கூரை ஏறி......

கூரை ஏறி கோழி பிடிக்காத கருணாநிதி 7 கட்சி கூட்டணியை சேர்த்துக்கொண்டு ஆட்சியைப் பிடிப்பேன் என்று சொல்வது கனவாகும். தமிழக மக்கள் ஒருபோதும் கருணாநிதிக்கு ஓட்டு போடமாட்டார்கள்.

கருணாநிதியை ஒழிக்க எம். ஜி. ஆர். திட்டமிட்டு என்னை அரசியலுக்கு அழைத்தார். அவர் எண்ணப்படியும், கட்டளைப்படியும் செயல்பட உத்தரவிட்டார்.

இப்படி ஜெயலலிதா சொல்லிக் கொண்டு இருக்க—

## காளிமுத்து அறிவிப்பு

ஜானகி அணியைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் காளிமுத்துவோ,

'அடுத்த தேர்தலில் ஜானகி அணி அ. தி. மு. க வுக்கும் தி. மு. க வுக்கும் தான் போட்டி.



ஜானகி

தமிழ் நாட்டில் ஆரோக்கியமாக - விளையாட்டு வீரர் மனநிலையில் தி. மு. க. — அ தி. மு. க. போட்டி அமையும்.

போட்டிக்கு முன் இரண்டுக்கும் பொது எதிரியான காங்கிரஸ் கட்சிக்கு கல்லறை அமைப்போம். அந்தக் கல்லறை மீது பொறாமை இல்லாத போட்டியை நடத்துவோம். இறுதியில் மக்கள் தீர்ப்பை ஏற்று ஆளுங்கட்சியாகவோ எதிர்க்கட்சியாகவோ மாறி மாறி வருவோம்:

தமிழ்நாட்டைக் காட்டிக் கொடுக்கமாட்டோம். தமிழ் மக்கள் உரிமையை அடகு வைக்கமாட்டோம், டில்லிக்கு எடுபிடிகள் ஆகவே மாட்டோம்' என்று தெரிவித்திருக்கின்றார் காளிமுத்து.

தமிழக அரசியலில் யாருடன் கூட்டு; யாருடன் அவியல் என்பது தேர்தல் திகதியின் பின்னர் தான் தெளிவாகும். இந்த நிலையில்— தேசிய அணியில் சேரப்போய் மாநில அணியை தி: மு. க கோட்டைவிடும்நிலை ஏற்பட்டுள்ளதா?

## சொற்சிலம்பம் போட்டி இல. 89

**பரிசு பெற்றவர்கள் விபரம்:**

**முதலாம் பரிசு:**
திருமதி க. நல்லையா, 12, கனகரெத்தினம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.

**இரண்டாம் பரிசு:**
பா. பிரதாபன், இல. 22, குமாரசாமி ரோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

**மூன்றாம் பரிசு:**
திருமதி ந. குணராஜ், 180, A, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

**சொற்சிலம்பம் போட்டி இல. 89 சரியான விடைகள்**

**மேலிருந்து கீழ்**

1. அசம்பாவம் 2. கதி 3. மரை 4. வாழ்வு 5. பணம் 7. விசிறி 8. தும்பிக்கை 10. யானை 12. மனம் 15. சாகா 16. சுடு 17. முதுமை 19. பாண் 20. துரு.

**இடமிருந்து வலம்**

1. அகமகிழ்வு 6. கதிரை 7. விசு 8. துவாதசி 9. பாயாசம் 11. மறி 13. வலை 14. பிசாசு 17. முக்காடு 18. பாதுகை 19. காது 21. ஆண்மை 24. ஊடுருவு.

# இடம் மாறிய 'கிரகம்'!

வீட்டு விறாந்தையில் இருந்து பேப்பர் படித்துக் கொண்டிருந்த இராமநாதன் கேற் திறக்கும் சத்தம் கேட்டு நிமிர்ந்து பார்த்தார்.

சுதாகர் கேற்றைத்திறந்து உள்ளே வந்து கொண்டிருந்தான். இராமநாதன் ஹோலில் இருந்த மனைவியிடம் 'உன்ரை வீரத்திருமகனைக் காணேல்லை எண்டு சத்தம் போட்டாய். இப்போ வருகிறான் பார்' என்றார்.

வெளியில் வந்த சாந்தா; 'எங்கேடா உலாத்தித் திரியுறாய். மத்தியானம் சாப்பிட்டுப் போனனி இப்பதான் வாறாய் மணி ஏழாகப் போகுது' என்று சத்தம் போட்டாள்.

அம்மா சத்தம் போடாதே. இரண்டு வெட்டிலை மூண்டு துண்டு விழுந்தது! இதைப் பார்த்துன்...'

'ஐயோ இதையெல்லாம் ஏண்டா பாக்கிறாய் கர்மம் கர்மம். முருகா! அவள் தேகம் நடுங்கியது.

'அம்மா நான் மட்டுமா பார்த்தது, எக்கச் சக்கமான கூட்டம்' என்றான் சுதாகர்.

அம்மா காதைப் பொத்தினாள். 'சொல்லாதே. தலையைக் கிறு கிறுக்குது. நீ படிச்சுப் பாஸ்பண்ணி, வாற வேலையையும் வேண்டாமெண்டு, இப்படி ஊர் சுற்றித்திரி' இதுவரை பொறுமையாய் இருந்து பேப்பர் படித்த இராமநாதன் 'அவன் என்ன சொல்ல வந்தான், நீ என்ன படபடக்கிறாய்' என்றார்.

'நீங்களும் சேர்ந்து பாடுங்கோ. வெட்டுறதையும், கொத்துறதையும் பாத்திட்டு வந்து சொல்லுறான்' என்றாள். சுதாகர் சிரித்தான்.

'அம்மா, நான் மானம்பூவிற்கு வாழைவெட்டியதைச் சொன்னனான். ஐயர் டக், டக் கென்று வெட்டினார். மூண்டு துண்டாயிட்டுது' என்றான்.

நீ சொல்லுற மாதிரிச் சொன்னா, நான் ஏன் பயப்படுகிறேன். வேலை வெட்டியில்லாமல் திரியிறாய் அதற்குள்ள கிரந்தம் வேறு' அம்மா பொரிந்து தள்ளினாள்.

'அம்மா நீ என்னைப் புரிஞ்சுக்கேல்லை. நான் ஒரு சாதாரணக் கிளாக்காகப் பையுடன் மாரடிக்க மாட்டன். ஒரு கணக்கப்பிள்ளையாய்க் காலம் பூரா லெட்ஜரைக் கூட்டிக் கழிக்கமாட்டேன். என் உள்ளத்தில் பொங்கி வரும் உணர்ச்சிகளை வடித்துக் காவியம் படைப்பேன். உன் வீட்டில் ஒரு மாபெரும் எழுத்தாளன் உருவாகிக் கொண்டிருக்கிறான். அதைப் புரிந்துகொள்' என்று பெரிய லெக்சர் அடித்தான்.

அப்போது அங்கு வந்த மாமா 'சுதாகர் ஏதோ கூட்டத்தில் பேசற் மாதிரி லெக்சர் அடிக்கிறான்' என்றார்.

'வாற வேலையொண்டும் வேண்டாம் என்கிறான். 'உத்தியோகம் புருஷலட்சணம்' தெரியேல்லையே' என்றாள் அம்மா. தொடர்ந்து அவனுக்கு 'ஏழரைச்சனி நடக்குது. புரட்டாதிச்சனி விரதம் புடியடா' என்றால் கேக்கமாட்டான்; நான் போய் அவனுக்கு எள்ளெண்ணை எரிச்சனான்'

மாமா சொன்னார் 'நான் இவன்ரை சாதகக் குறிப்பைப் பார்த்தனான். ராகுவும், கேதுவும் ஒரு வீட்டில் இருக்கும் வரை இழுவல் தான்'

-பசுபதிராஜா-

இதைக் கேட்ட சுதாகர் 'ஏன் மாமா பிரதமர் கட்டின பத்துலட்சம் வீட்டிலை ஒரு வீட்டை இந்த ராகுவிற்கு செட்டப் பண்ணுங்கோ. எல்லாம் சரிவரும்' என்றான்.

ஆத்திரத்திலும் கூட அம்மா சிரித்தாள். 'டேய் இந்தக் கேலிக்கதையெல்லாம் வேண்டாம். போய் டீயைக் குடி. என்றவள் மாமவை நோக்கி 'ஏதோ கிரகம் மாறுதாமே. அப்போதாவது இவனுக்கு நல்ல காலம் வராதா' என்று கேட்டாள்.

'சுதாகர் பிரதமர் என்று சொன்னதும் ஞாபகம் வருகுது. கிரகம் ஏற்கனவே மாறி விட்டுது. நாட்டை வளர்ச்சி செய்யத் தடையாய் இருந்த 'கிரகம்' அகன்று விட்டது என்று பிரதமர் சொன்னார்' என்றார் மாமா.

அப்போது அங்கு வந்த உமா 'வளர்ச்சித் திட்டங்களுக்குப் பணம் கேட்டால் இல்லையென்று சொல்லுமாம் அந்தக் கிரகம் பெரிய அக்கிரமமாயிருக்கே' என்றாள்.

'இந்த வீட்டிலும் ஒரு 'கிரகம்' நான் எப்ப பணம் கேட்டாலும் இல்லையென்று சொல்லும்' என்றான் சுதாகர் தாயைப் பார்த்து.

'மூடடா வாயை. எப்ப நான் இல்லையென்று சொன்னனான்' என்றாள் அம்மா:

'நான் முடிவெட்டப் பதினைந்து ரூபா கேட்டேன். இல்லையென்னுட்டியே'

'இனி அந்தக் கவலையே வேண்டாம்' என்றார் மாமா. அவர் பேச்சைக்கேட்டு எல்லோரும் ஆச்சரியப்பட்டனர்.

'இனி நாம் எல்லோரும் முடிசூடாமன்னர்கள். பிரதமரே சொல்லிவிட்டார். அவர் ஜனாதிபதியானால் எல்லோரும் ஜனாதிபதிகள்' என்று.

'அப்படியா சொன்னார். இனி வீட்டுக்கு வீடு வாசல்படி போய், வீட்டுக்கு வீடு ஜனாதிபதிதான்' அம்மா கேட்டுக்கோ. நான் வேலை தேடமாட்டேன். ஜனாதிபதி வேலை என்னைத் தேடி வருகுது' என்றான் சுதாகர் பெருமையுடன். ★

சிறுகதை

## பொது அறிவுப்போட்டி இல. 16

| | | |
|---|---|---|
| 1. | கஷ்டகாலத்தில் எதைப் பார்ப்பார்கள்? | ஜாதகம் / கைரேகை |
| 2. | சுவை அறியப் பயன்படுவது எது? | நாக்கு / மூக்கு |
| 3. | ஆயுதம் எது? | ஈட்டி / கத்தி |
| 4. | உழைப்பாளி எதிர்பார்ப்பது எது? | ஓய்வு / கூலி |
| 5. | தேர்ந்தெடுக்கப்படுபவர் யார்? | ஜனாதிபதி / பிரதமர் |
| 6. | இராணுவம் பயன்படுத்துவது எது? | துப்பாக்கி / பீரங்கி |
| 7. | எதை வெளியில் சொல்ல வேண்டும்? | துக்கம் / மகிழ்ச்சி |
| 8. | நல்ல கதையில் எது வேண்டும்? | விறுவிறுப்பு / சஸ்பென்ஸ் |
| 9. | பொந்தில் வாழ்வது எது? | பாம்பு / எலி |
| 10. | ஆதியில் செய்தி கொண்டு வந்தது எது? | புறா / தூதன் |
| 11. | கம்பனின் மகன் யாவன்? | அம்பிகாபதி / அமராவதி |
| 12. | எங்கே மலைக்கோட்டை இருக்கிறது? | திருச்சி / கொழும்பு |

பெயர்:- ..................
விலாசம்:- ........................
..............

பொது அறிவுப்போட்டி இல: 16
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

——— இங்கே வெட்டுக ———

**நிபந்தனைகள்:**

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்றுபேர்கள் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் போட்டிகளில் கலந்து கொள்ளமுடியாது.

சரியான விடைகளின் கீழ்க் கோடு இடுக. பின்னர் இப்படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி 9. 11. 88 புதன்கிழமைக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பவும்.

கடித உறையினுள் வைத்து அனுப்பப்படும் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

முதலாம் பரிசு: 100 ரூபா
இரண்டாம் பரிசு: 50 ரூபா
மூன்றாம் பரிசு: 25 ரூபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளுக்கோர் புதுமை,
நாடுவது உண்மை
இவற்றை அளிப்பதுதான்
சீமாட்டி
யாழ்ப்பாணம்

சஞ்சீவி சஞ்சிகை

Specialist in
Wedding
Sarees
சீமாட்டி
Seemati
Jaffna

29-10-1988 சனிக்கிழமை

# இஸ்ரவேல் பொதுத் தேர்தலால் மீண்டும் மத்திய கிழக்குப் பிரச்சினை சூடு பிடிக்கிறது

## அரபாத்தின் பாலஸ்தீன அரசு பிரகடனத் திட்டம் நிரந்தர சமாதானத்துக்கு வழி வகுக்குமா?

கடந்த 40 வருடகாலமாக சர்வதேச அரங்கில் எரிமலையாக இருந்து வரும் மத்திய கிழக்கை நோக்கி உலக நாடுகளின் கவனம் இவ்வாரம் மீண்டும் திரும்பி உள்ளது.

இஸ்ரவேலில் நடைபெற உள்ள பொதுத் தேர்தலும், சுதந்திர பாலஸ்தீன அரசு ஒன்றைப் பிரகடனம் செய்யும் பாலஸ்தீனவிடுதலை ஸ்தாபனத்தின் நடவடிக்கைகளுமே இவற்றுக்குக் காரணம்.

எகிப்திய ஜனாதிபதி முபாரக் (Mubarak), ஜோர்தான் மன்னர் ஹுசெய்ன்(Hussein), பாலஸ்தீன விடுதலை ஸ்தாபனத் தலைவர் யாஸிர் அரபாத் (Yasser Arafat) ஆகிய மூவரும் கடந்த சனிக்கிழமை ஜோர்தானின் தலைநகரான அம்மானில் திடீர் சந்திப்பு ஒன்றை நடத்தினர்.

இம்மூவரும் தமது மத்திய கிழக்குச் சமாதானத் திட்டம் பற்றி முக்கிய பேச்சுக்களை நடத்தி முடித்துள்ளனர்.

### பாலஸ்தீன பிரகடனம்

இம்மாத இறுதிக்குள் பாலஸ்தீன நாடு பிரகடனம் செய்யப்பட்டு வெளிநாடு ஒன்றில் பாலஸ்தீன இடைக்கால அரசு ஒன்றை பாலஸ்தீன விடுதலை ஸ்தாபனத் தலைவர் யாஸிர் அரபாத் நிறுவலாம் என்று ஊகங்கள் தெரிவிக்கப் படுகின்றன.

1947 ஆம் ஆண்டு — அதாவது இஸ்ரவேல் என்ற நாடு பிரகடனம் செய்யப்படுவதற்கு ஒரு வருடத்துக்கு முன் ஐக்கிய நாடுகள் சபை நிறைவேற்றிய தீர்மானத்தின் அடிப்படையில் பாலஸ்தீன அரசு ஒன்றை நிறுவுவதே அரபு நாடுகளினதும் பாலஸ்தீன விடுதலை ஸ்தாபனத்தினதும் ஆகப்பிந்திய சமாதானத் திட்டம் ஆகும்.

யூத அரசு — பாலஸ்தீன அரசு என்று இஸ்ரவேல் பிரிக்கப்பட வேண்டும் என்று 1947 ஐ. நா. தீர்மானம் வலியுறுத்துகிறது.

### அமெரிக்கத் திட்டம் புதைகுழியில்

இதற்குமுன அமெரிக்க ராஜாங்க அமைச்சர் ஜோர்ஜ் சூல்ட்ஸ் மத்திய கிழக்குப் பிரச்சினை தொடர்பான சர்வதேச மாநாடு ஒன்றைக் கூட்டும் அமெரிக்க சமாதானத் திட்டம் ஒன்றை அறிவித்திருந்தார்.

கடந்த இரண்டு வருடங்களாக அரபுநாடுகளின் தலைநகரங்களுக்கும் இஸ்ரவேலுக்கும் அவர் சூறுவளிப் பயணம் செய்து இதற்குப் பெரும்பாலான அரபு நாடுகளை இணங்க வைத்தார்.

எனினும் இஸ்ரவேல் பிரதமர் யிட்ஷாக் ஷாமிரின் எதிர்ப்புக் காரணமாக அவரின் முயற்சி கைகூடாமல் போய் இருந்தது.

ஜோர்தானின் மேற்குக் கரை மீதான தனது ஆதிபத்திய உரிமையை விட்டுக் கொடுப்பதாக ஜோர்தான் மன்னர் ஹுசெய்ன் கடந்த ஜூலை 31 ஆம் திகதி திடீர் என்று அறிவித்தது அமெரிக்கச் சமாதானத்திட்டத்தை குழி தோண்டிப் புதைத்து விட்டது.

மேற்குக்கரையிலும் காஸாவிலும் பாலஸ்தீன அரசு ஒன்றைப் பிரகடனப்படுத்தும் வாய்ப்பை ஜோர்தானிய மன்னரின் அறிவிப்பு உருவாக்கி இருக்கிறது.

### 60 நாடுகள் அங்கீகரிக்கும்

சுதந்திர பாலஸ்தீன அரசு ஒன்று பிரகடனம் செய்யப்பட்டால் உடனடியாக 50 முதல் 60 வரையிலான நாடுகள் அங்கீகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கறுப்பு ஆபிரிக்க நாடுகள், மத்திய அமெரிக்க நாடுகள், அரபுநாடுகளின் அங்கீகாரம் உடனடியாகக் கிடைக்கும்.

சோவியத் யூனியன் அங்கீகரிக்குமானல் சகல கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் அங்கீகாரமும் கிடைத்து விடும்.

சுதந்திர பாலஸ்தீன அரசு உருவாகினல் மூன்றுவது உலக மகா யுத்தம் மூளும் என்று இஸ்ரவேல் பிரதமர் யிட்ஷாக் ஷாமிர் (Yitzhak Shamir) எச்சரித்துள்ளார்.

### இஸ்ரவேல் தேர்தல்

நவம்பர் முதலாம் திகதி அதாவது எதிர்வரும் செவ்வாய்க்கிழமை இஸ்ரவேலில் பொதுத் தேர்தல் நடைபெறுகிறது.

தேர்தலில் யிட்ஷாக் ஷாமிரின் வலதுசாரி லிகுட் கட்சிக்கும் (Likud) கூட்டரசாங்கத்தில் தற்போது வெளிவிவகார அமைச்சராக இருக்கும் ஷிமொன்பெரெஸின் (Shimon Peres) தொழிற் கட்சிக்கும் இடையில் கடும் போட்டி இருக்கிறது. அரபு வாக்குகளே வெற்றியை நிச்சயிக்க உள்ளன என்று கூறப்படுகிறது.

1984 ஆம் ஆண்டு இஸ்ரவேலில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தொழிற்கட்சியும் லிகுட் கட்சியும் இணைந்து கூட்டரசாங்கம் நிறுவி இருந்தன.

அதிகாரப் பகிர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் முதல் இரண்டு வருடகாலத்துக்கு தொழிற்கட்சித் தலைவர் ஷிமொன் பெரெஸ் பிரதமர் பதவி வகித்தார். அடுத்த இரண்டு வருடகால



பாலஸ்தீன விடுதலை ஸ்தாபனத் தலைவர் யாஸிர் அரபாத் ஜோர்தான் மன்னர் ஹுசெய்னை தலைநகர் அம்மானில் சந்தித்த காட்சி.

தற்போதைய ஆட்சிப் பொறுப்பு லிகுட்கட்சித் தலைவர் யிட்ஷாக் ஷாமிரிடம் இருந்து வருகிறது.

முதல் இரண்டு வருடகாலம் பிரதமர் பதவி வகித்த ஷிமொன் பெரெஸ் தற்போதைய கூட்டரசாங்கத்தில் வெளிவிவகார அமைச்சராக இருந்து வருகிறார். தற்போதைய பாதுகாப்பு அமைச்சர் ராபினும் தொழிற் கட்சியைச் சேர்ந்தவரே.

### பாலஸ்தீன பிரச்சினை

செவ்வாய்க்கிழமை நடைபெறும் இஸ்ரவேல் பொதுத் தேர்தலில் இம்முறை பாலஸ்தீன பிரச்சினையே முக்கிய அம்சமாக இருந்து வருகிறது இதனுலேயே தேர்தல் சர்வதேச கவனத்தையே ஈர்த்துள்ளது.

இதன் தலைவரும் தற்போதைய பிரதமருமான யிட்ஷாக் ஷாமிர் கருதுகிறுர்.

ஜோர்தானின் மேற்குக் கரையும் காஸாவும் தொடர்ந்து இஸ்ரவேலின் கட்டுப்பாட்டிலேயே இருக்கவேண்டும். ஆனல் அங்குள்ள பாலஸ்தீனர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ள சுயாட்சி வழங்கலாம் என்பது லிகுட் கட்சியிலும் ஏனைய சிறிய வலதுசாரிக் கட்சிகளினதும் கொள்கை.

ஜோர்தானின் மேற்குக் காரையினதும் காஸாவிலும் உள்ள பாலஸ்தீனர்களுக்கு இஸ்ரவேல் தேர்தலில் வாக்களிக்கும் உரிமை கிடையாது.

1967 ஜுன் 6 நாள் யுத்தத்தின்போது இஸ்ரவேலினல் கைப்பற்றப்பட்ட பிரதேசங்களில் ஜோர்தானின் மேற்குக் கரையும் காஸாவும் அடங்குகின்றன. காஸா எகிப்துக்குச் சொந்தமானது. ஜோர்தானின் மேற்குக்கரை 1950 முதல் 1967 வரை ஜோர்தானின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்து வந்தது.

### இஸ்ரவேல் எதிர்ப்புக் கிளர்ச்சி

ஜோர்தானின் மேற்குக் கரையிலும் காஸாவிலும் உள்ள பாலஸ்தீனர்கள் கடந்த பதினெரு மாத காலமாக இஸ்ரவேலுக்கு எதிராக வன்முறை ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகிறுர்கள். பாலஸ்தீனர்களை அடக்க இஸ்ரவேல் கடும் நடவடிக்கைகளை மேற்கோண்டு வருகிறது.

ஜோர்தானின் மேற்குக் கரையிலும் காஸாவிலும் பாலஸ்தீனர் கிளர்ச்சிக்குத் தொழிற்கட்சியே தூண்டுகிறது என்று பிரதமர் யிட்ஷாக் ஷாமிர் குற்றம் சாட்டி வருகிறுர்.

கிளர்ச்சியை அடக்க அரசாங்கம் மேற்கொண்டு வரும் கடும் நடவடிக்கைகளே அப்பிரதேசங்களில் நிலைமை மோசம் அடையக் காரணம் என்று தொழிற்கட்சி பதிலுக்குக் குற்றம் சாட்டி வருகிறது.

ஜோர்தானின் மேற்குக் கரையிலும் காஸாவிலும் கடந்த டிசம்பர் மாதம் தொடக்கம் நடைபெற்று வரும் இஸ்ரவேல் எதிர்ப்புக் கிளர்ச்சிகளில் இதுவரை 300க்கும் அதிகமான பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

மத்திய கிழக்குத் தொடர்பான எந்த ஒரு சர்வதேச மாநாட்டுக்கும் பிரதமர் யிட்ஷாக் ஷாமிர் எதிர்ப்புத் தெரிவித்து வருகிறுர். எந்த ஒரு தீர்வும் பாலஸ்தீனர்களின் கோரிக்கைகளைத் திணிக்கும் ஒன்றுகவே இருக்கும் என்று இவர் கருதுகிறுர்.

இதற்கு மாருக ஷிமொன் பெரெஷின் தொழிற்கட்சி மத்திய கிழக்குச் சம்பந்தமாக சர்வதேச மாநாடு ஒன்று நடத்தப்படவேண்டும் என்று பலமாக வலியுறுத்தி வருகிறது.

ஜோர்தானின் மேற்குக் கரையிலும் காஸாவிலும் கிளர்ச்சிகள் நிறுத்தப்பட்டு அமைதி ஏற்பட்டால் அங்கு உள்ளூர்த் தேர்தல்களை நடத்தி அப்பிரதிநிதிகள் மூலம் இஸ்ரவேலுடன் பேச்சுவார்த்தை நடத்தலாம் என்று தொழிற்கட்சி ஆலோசனை தெரிவித்துள்ளது.

ஜோர்தானின் மேற்குக் கரையில் 240 குடியிருப்புகளை ஏற்படுத்த தாமே காரணம் என்று ஷிமொன் பெரெஸ் கூறுகிறுர். இங்கு 65 ஆயிரம் யூதர்கள் குடியேற்றப்பட்டுள்ளன.

1967 ஜூன் 6 நாள் யுத்தத்தில் அரபு நாடுகளிடம் இருந்து கைப்பற்றப்பட்ட பிரதேசங்கள் திருப்பி ஒப்படைக்கப்படவேண்டும் என்பதில் தொழிற்கட்சி அதிக

உலக உலா
என்.பி.சீலன்

சிரத்தை காட்டி வருகிறது.

### அரபு வாக்குகள்

இத்தகைய கொள்கைகளால் எதிர்வரும் பொதுத் தேர்தலில் 50 சத வீத அரபு வாக்குகளைத் தொழிற்கட்சி பெறும் வாய்ப்புகள் இருந்து வருவதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

1984 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் 25 சத வீதமான அரபு வாக்குகளையே தொழிற் கட்சி பெற முடிந்தது.

ஏற்கனவே பெரும்பான்மையான அரபு நாடுகளாலும் பாலஸ்தீன விடுதலை ஸ்தாபனத்திலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட மத்திய கிழக்குத் தொடர்பான சர்வதேச மாநாட்டு யோசனைக்குத் தொழிற்கட்சி ஆதரவு அளிப்பதே இம்முறை கூடுதலான அரபு வாக்குகள் தொழிற் கட்சிக்குக்கிடைக்க வாய்ப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

இஸ்ரவேலின் சனத்தொகையில் சுமார் ஐந்தில் ஒரு பங்கினர் அரபுக்கள் ஆவர். 1948 ஆம் ஆண்டு இஸ்ரவேல் பிரகடனம் செய்யப்பட்ட நாள் முதல் இஸ்ரவேலிலேயே அவர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

தமது விடுதலைக்கு அரபு நாடுகள் வழி வகுக்கும் என்று இஸ்ரவேலில் உள்ள அரபுக்கள் நம்பி இருந்தனர். 1967 ஜுன் யுத்தத்தில் அரபு நாடுகள் படுதோல்வி அடையும் வரை இந்த நம்பிக்கை இஸ்ரவலில் உள்ள அரபு மக்களுக்கு இருந்து வந்தது.

தீவிர இஸ்ரவேல் எதிர்ப்புக் கொள்கையைக் கடைப்பிடித்துவந்த எகிப்திய ஜனதிபதி அப்துல் காமல் நாஸரின் மறைவு, அவரின் பின் ஆட்சிக்கு வந்த அன்வர் சதாத் ஜெரூஸலத்துக்கே சென்று அப்போதைய இஸ்ரவேல் பிரதமர் பெகினைச் சந்தித்தது ஆகியவை இஸ்ரவேலிலுள்ள அரபுமக்களின் நம்பிக்கையை முற்றுக சிதறடித்தன.

இஸ்ரவேல் நாடாளுமன்றத்தின் மொத்த 120 ஆசனங்களில் 15 ஆசனங்களின் வெற்றி அரபு வாக்குகளிலேயே தங்கியிருக்கிறது.

இதற்கு முன்னைய பொதுத் தேர்தல்களில் அரபு வாக்குகளில் பெரும்பகுதி மாஸ்கோ ஆதரவு கம்யூனிஸ்ட் கட்சிக்கும் சமாதானத்துக்கும் சமத்துவத்துக்குமான ஜனநாயக முன்னணிக்குமே (Democratic Front for Peace and Equality) கிடைத்துவந்தன. அரபு வாக்குகளின் உதவியால் இக்கட்சிகள் ஒருசில தொகுதிகளில் வெற்றிபெறமுடிந்தது.

தேர்தலில் தொழிற்கட்சி வெற்றிபெறவேண்டும். என அரபு நாடுகளும் பாலஸ்தீன விடுதலை ஸ்தாபனமும் விரும்புகின்றன,

ஜோர்தானின் மேற்குக் கரையிலும் காஸாவிலும் சுதந்திர பாலஸ்தீன அரசு பிரகடனம் செய்வதை இஸ்ரவேல் பொதுத்தேர்தல் முடியும்வரை யாஸிர் அரபாத் ஒத்திவைத்திருப்பதற்கு இதுவே காரணம் என்று கூறப்படுகிறது.

தேர்தலுக்கு முதல் பிரகடனம் செய்தால் அது லிகுட் கட்சிக்குத் தேர்தலில் சாதகமாகிவிடும் என்று அரபாத் கருதுகிறுர்.

கடந்த சனிக்கிழமை ஜோர்தான் மன்னர் ஹுசெய்ன், எகிப்திய அதிபர் முபாரக், பாலஸ்தீன விடுதலை ஸ்தாபனத் தலைவர் யாஸிர் அரபாத் ஆகியோர் அம்மானில் நடத்திய திடீர் சந்திப்பு இஸ்ரவேல் தேர்தலில் அரபுக்களின் வாக்குகளை தொழிற் கட்சிக்குச் சாதகமாக்கும் முயற்சியாக இருக்கலாம் என்று கூறப்படுகிறது.

கடந்த 40 வருடகாலமாக சூயஸ்யுத்தம் உட்பட நான்கு யுத்தங்களைச் சந்தித்த மத்திய கிழக்குப் பிரச்சினையில் இந்த ஆண்டு குறிப்பிடத்தக்க திருப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. ★

---

4 லட்சம் மக்கள் வசிக்கும் சுரிணும் நாடு

# தங்கக்காசு, தபால்முத்திரை வெளியிட்டு தங்கப்பதக்கம் பெற்றவரைக் கௌரவித்தது

தென் அமெரிக்காவின் வடகரையோரத்தில் உள்ள சுரிணும், சின்னஞ்சிறிய நாடு.

டச்சுக் குடியேற்ற நாடாக இது முன்னர் இருந்தது. சுரிணுமின் சனத்தொகை ஆக 4 லட்சம் மட்டுமே

சோல் ஒலிம்பிக்போட்டியில் தான் தனது முதலாவது தங்கப் பதக்கத்தை இந்த நாடு பெற்றது.

100 மீற்றர் 'பட்டர்பிளை' நீச்சல் போட்டியில் இந்தநாட்டைச் சேர்ந்த அந்தோனி நெஸ்ரி முதலாவதாக வந்து தங்கப்பதக்கத்தைப் பெற்றுக்கொடுத்தார். அமெரிக்க வீரர் மாற் பயோன்டியை 0.01விநாடியில் தோற்கடித்தார்.

20 வயதானவர் நெஸ்ரி.

சுரிணும் தலைநகரம் பரமரிபோ. ஜனாதிபதி மாளிகையில் நெஸ்ரிக்கு வரவேற்பளிக்கப்பட்டது.

'Order of the Yellow Star' என்ற நாட்டின் அதிஉயர் விருது நெஸ்ரிக்கு ஜனாதிபதி ராம்சேவாக்ஷங்கரினல் (Ramsewak Shankar) வழங்கப்பட்டது.

அது மட்டுமல்ல:-

★ நாட்டின் நிதி அமைச்சு அவரைக் கௌரவப்படுத்த தங்கநாணயம் ஒன்றை வெளியிட்டது.

★ தபால் முத்திரைஒன்று வெளியிடப்பட்டது:

★ தேசிய உள்ளக விளையாட்டரங்கின் பெயர் அந்தோனி நெஸ்ரி விளையாட்டு அரங்கம் என்று பெயரிடப் பட்டது.

★ வீடு ஒன்று கட்டகாணித்துண்டு வழங்கப்பட்டது.

★ 1 லட்சத்து 10 ஆயிரம் டாலர் பணம் பரிசாக வழங்கப்பட்டது.

★ வர்த்தக நிர்வாகத் துறையில் பட்டப்படிப்பைத் தொடர 1 லட்சம் டாலர் பெறுமதியான உபகாரச் சம்பளம் நெஸ்ரிக்கு வழங்கப்பட்டது.

★ நெஸ்ரியின் விளையாட்டுத்திறமையை வளர்க்க நிதியம் ஒன்று அமைக்கப்பட்டது.

பரமரிபோவில் அளிக்கப்பட்ட வரவேற்பில் அந்தோனி நெஸ்ரோ பேசினர்.

'1992இல் பார்சிலோனவில் நடைபெறவுள்ள ஒலிம்பிக்கில் இரண்டு தங்கப் பதக்கங்களைப் பெறுவேன்' —என்று நெஸ்ரி அப்போது நம்பிக்கை வெளியிட்டார். ★

## சதுரங்கம்

உலகக் கிண்ணத்துக்கான சதுரங்க விளையாட்டுப் போட்டி தற்போது ஐஸ்லாந்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

உலக சதுரங்க சாம்பியனுன [illegible] யத் வீரர் அன்றீ சொகொ [illegible]

## ஷார்ஜாவில் இதுவரை நடந்த கிரிக்கெட் போட்டிகள்

கடந்த நான்கு ஆண்டுகளில் ஏழு கிரிக்கெட் சுற்று விளையாட்டுப் போட்டிகளை ஷார்ஜா நடத்தியது.

1984 (ஏப் 6-13) இல் ஆசியக் கிண்ணப் போட்டியை நடத்தியது. சாம்பியனுக இந்திய அணி வெற்றியீட்டியது. பாகிஸ்தானும் இலங்கையும் பங்குபற்றிய ஏனையநாடுகள்.

1985 (மார்ச் 22-29) இல் ரோத்மன்ஸ் கிண்ணத்துக்காக நடந்த போட்டியிலும் இந்திய அணியே சாம்பியனுனது.

ஆஸ்திரேலியா, பாகிஸ்தான், இங்கிலாந்து ஆகிய நாடுகள் பங்குபற்றின.

1985 (நவம்பர் 15-22) இல் ரொத்மன்ஸ் சுழல் கிண்ணத்துக்கான போட்டி நடந்தது.

மேற்கிந்திய அணி சாம்பியனுக வந்தது. பாகிஸ்தானும், இந்தியாவும் பங்குபற்றிய ஏனைய நாடுகள்.

1986 (ஏப் 10-18)இல் ஆஸ்திரேலியா கிண்ணத்துக்கான போட்டி நடந்தது.

பாகிஸ்தான் சாம்பியன் ஆனது. இந்தியா, இலங்கை, நியூசிலாந்து, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் பங்குபற்றின.

1986 (நவம் 27 – டிச 5)இல் சாம்பியன் விருதுக்கான போட்டியில் மேற்கு இந்திய அணி சாம்பியனுனது. பாகிஸ்தான், இந்தியா, இலங்கை ஆகியநாடுகள் பங்குபற்றின.

1987 (ஏப் 2 – 10) இல் ஷார்ஜா கிண்ணத்துக்கான போட்டி நடந்தது.

இங்கிலாந்து சாம்பியனுனது. பாகிஸ்தான், இந்தியா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் பங்குபற்றின.

1988 (மார்ச் 25-ஏப் 1)இல் ஷார்ஜா கிண்ணத்துக்கான போட்டி நடந்தது.

இந்திய அணி சாம்பியன் ஆனது. நியூசிலாந்தும் இலங்கையும் இப்போட்டியில் பங்கு பற்றின:

1988 (அக்டோபர் 16) இல் நடந்த ஷார்ஜா கிண்ணத்துக்கான போட்டியில் மேற்கு இந்தியஅணி வெற்றியீட்டியது. பாகிஸ்தானும் இந்தியாவும் கலந்துகொண்டன. ★

## பொது அறிவுப் போட்டி இல. 15

சரியான விடை

1. கோபுரம், 2. பிள்ளைகள், 3. கழுதை, 4. மூட்டைப் பூச்சி, 5. யானை, 6. பொம்மை, 7. காற்று, 8 மூளை, 9. வலிவாக, 10. கல், 11. ஓய்வு. 12. மாடு.

சரியான விடைகளை எவரும் அனுப்பவில்லை அதனல் பொது அறிவுப் போட்டி இலக்கம் 16க் கான பரிசுகள் இருமடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org